உ

சிவமயம்.

மண்டலபுருடன்

அருளிச் செய்த

சூடாமணி

உள்ளமுடையான்.

மூலமும்- உரையும்.

இது

திரிசிரபுரம்

குருலிங்க தேசிகரவர்களால்

பார்வையிட்டப் பிரதிக்கிணங்க

சென்னைப் புரசை,

பு. அ. வேங்கடேச நாயகர்

அவர்களது

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1927 [ரூபா 1.

புத்தக விளம்பரம்.

வண்ணத்திரட்டு.

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும், தண்ட பாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம்பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய வண்ணமும் வசனநடையில் எழுதிய வண்ணப்பாவின் இலக்கணமும் சேர்க்கப் பட்டிருப்பதோடு வண்ணப்பாவின் இலக்கணத்தை கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

இதன் விலை அணா—8

சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கம்.

இந்த சிவ விஷ்ணு க்ஷேத்திர விளக்கமென்னும் புத்தகம் ஒவ்வொரு சைவ, வைஷ்ணவர்க ளிடத்திலும் அவசியம் இருக்கவேண்டியது: இதில் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள், விஷ்ணுஸ்தலங்கள், வைப்புஸ்தலங்கள், புராண ஸ்தலங்கள், புராதனஸ்தலங்கள், பிரபலஸ்தலங்கள் இவையாவும் இருக்கின். றன, அந்தந்த ஸ்தலங்களுக்கு போகும் இரெயில்வேஸ்டேஷன் மார்க்கம் அத்தலத்துக்கு சமீபத்திலிருக்கும் ஸ்தலம் அல்லது பிரபலம் அங்கங்குள்ள வசதிகள் யாவும் வெகுதெளிவாக, விஷ்ணம்பேட்டை பிரம்மஸ்ரீ ரா. சீனிவாச அய்யரவர்களால் அந்தந்த ஸ்தலககளுக்கு நேரில் போய்தரிசித்தும் தன்னால் போக இயலாத ஸ்தலங்களின் மகத்துவங்களை தெரிந்தவர்களின் மூலமாய்கேட்டு மிகுந்த பிரயாசையுடன் எழுதி முடிவு பெற்றது. இப்புத்தகம் ஒன்று கையில் இருக்குமானால் அத்தலங்களை தரிசித்தவாறே திருப்தியடைவார்கள் என்பது திண்ணம்.

328-பக்கமுள்ளது இதன் விலை ரூபா 1 4 0

திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்

அருளிச்செய்த

அஷ்டபிரபந்தம்.

இதற்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் மாணவர் பு. அ. கோவிந்தராஜ நாயகர் இயற்றிய துறைவிளக்கமும், அரும்பத உரையும், இந்நூலாசிரியர் இயற்றிய திருநறையூர்நம்பி மேகவிடுதூதும் திருத்தலமகிமையும், திருத்தலங்களுக்கு திருநாமம் வந்த காரணமும், புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா—1.

கிடைக்குமிடம்:—

"மாறன்" அச்சுக்கூடம் புரசை, சென்னை.

ஓம் நமோஸ்து:

சூடாமணி உள்ளமுடையான்.

மூலமும் - உரையும்.

விநாயகர் தோத்திரம்.

ஐவினை யியல்மு கூர்த்தம் அருளுள்ள முடையான் கூற
மெய்யனை முக்க ணனை விக்கினேஸ் வரனை வேழக்
கையனை யாகுவா கனனைக் கார்க்குந் தாளனைக் கற்றோர்
துய்யனைப் பதினா றுமச் சொரூபனை வணக்கஞ் செய்வாம். 1

பிரமன் துதி.

உலகொரு மூன்று மேத்த வுயர்மறை நான்கு மெண்ணெண்
கலைகளுந் தெரியு மங்க மறையவர் கசிந்து போற்ற
பொலன்மலி யுயிர்கள் யாவும் பூமியிற் படைத்த பிரம்மன்
மலரடி பணிய வென்றன் மனத்தினின் முடியு மாதோ. 2

சத்திகள், நவக்கோள்கள், குரு வணக்கம்.

காயத்ரி சாவித் ரீயும் கலைவாணி கங்கை நாமம்
மேயநல் வுலக மாத ரெழுவகை விரும்பிப் போற்றி
ஆயநற் கதிர் நவக்கோ ளவைகளை வணக்கஞ் செய்து
தூயநற் கணித மியாவும் சொல்குரு வணக்கஞ் செய்வாம். 3

அவையடக்கம்.

மாதவர் முன்பு சொன்ன வடமொழிக் கணித நூலைத்
தீதறு தமிழாற் செப்ப விசைந்த தென்போ லென்னிற்
சோதிமின் மினிட்டம் போலச் சொல்லுதற் கெண்ணி யூம
ஞோதியிவ் வுலகுக் கேற்ப வுரைப்பனென் றிசைந்த தொப்பாம். 4

பாயிரம்.

ஒப்பில்நா ளோரை வாரந் திதியோகங் கரணம் பேருந்
தப்பிலா விதானஞ் சார்ந்த தற்கால நன்மை தீமை
செப்பிலன் பிடித்த லுண்ணல் கோசரந் தெசா பலன்கள்
துப்புடை நவக்கோ ளெண்கோள் சுடரிவை சொல்ல லுற்றேன். 5

(இ-ள்.) நாட்கள், கால ஓரை, வாரம், திதி, யோகம், கரணங்களின் பேரும், அவைகளின் சுபாசுபங்களும், நட் பாட்சி யுச்சப் பகை நீசங்களும், அம்சங்களும், திரேகாணகுணமும், கோட்கூறு, சுடற்செலவு முகூர்த்தவிதானங்களும், கிரஹணனந்தமாகத் தொகுத்து ஒரு கோர்வைப் படுத்திச் சொல்லுவ னென்றவாறு. 6

ஆக்கியோன் பெயர்.

உற்றுல குய்ய வந்தா னருளுள்ள முடையான் மங்கை
கொற்றவன் புகழ்போ லிந்தக் குவலய முழுதுங் கேட்கச்
சொற்றவ நூற்பே ருள்ள முடைச்சூடா மணியென் றிட்டுப்
பொற்றொடி வளைக்கை நல்லாய் புலவர்முன் புகல லுற்றேன்.

(இ-ள்.) நூற்பெயர் பெறுமிடத்துச் செய்தோன் பெயராலுஞ், செய்வித்தோன் பெயராலு, மளவினு லிடுதியினுற் குறியினு லிடுகுறியினுலுஞ், சிறப்பினுலும் பெயர்பெறுமாதலி னிந்நூல் செய்தோன் பெயராலே உள்ளமுடைச் சூடாமணியென்று அவன்பெயரா லுரைப்பன் என்றவாறு. 7

நூல் வரலாறு.

நட்சத்திர நிகண்டு.

புகலுறு பரிமா வாசி புரவியே றுரகஞ் சென்னி
இகலுறு குதிரை முந்நா ளிரலையைப் பசியின் பேராம்
மகலிய தாழி பூத மடுப்பொடு தராசு கங்குல்
பகல்வறு கிழவன் சோறு பரணியின் பெயர தாமே.

(இ-ள்.) பரி, மா, வாசி, புரவி. துரகம், சென்னி, குதிரை, முந்நாள், இரலை இவை அச்சுவினியின் பெயர். தாழி, பூதம், அடுப்பு, தராசு, கங்குல், கிழவன், சோறு இவை பரணியின் பெயர்.

ஆரலே யழலே யங்கி அளகிரு லறுமீ னுவி
சீர்கொள் கார்த்திகைப் பேராகுந் தேருரு ளயனுள் வையம்
பார்சகடு ரோகணிப் பேர் பரவுமான் றலையைத் தானம்
மார்கழி மதிபே ராளன் நரிப்புற மிருகசீ ரப்பேர்.

(இ-ள்.) ஆரல், அழல், அங்கி, அளகு, இறால், அறுமீன், ஆவி இவை கார்த்திகையின் பெயர். தேருருள், அயநாள், வையம்,

சகடு உரோகணியின் பெயர். மான்றலை, ஐந்தானம், மார்கழி, மதி கோளன், நரிப்புறம் இவை மிருகசிரீத்டதின் பெயர். 2

பேரிறை செங்கை யாழ்வில் லாதிரைப் பெயராம் பிண்டி
கார்திரள் மூங்கில் மாலை கரும்பொடா வணமே விண்டல்
கூரிய புநர்த மாகுங் குடந்தரா கொடிறு தையம்
பார்மதி பூசப் பேராம் பணிநாள்கவ் வைபாம் பாயில்யம்.

(இ-ள்.) இறை, செங்கை, யாழ், வில் இவை திருவாதிரையின் பெயர். பிண்டி, கார், திரள், மூங்கில், மாலை, கரும்பு, ஆவணம், விண்டம், புனர்தம் இவை புனர்பூசத்தின் பெயர். குடம், தரா, கொடிறு, தையம், மதி இவை பூசத்தின் பெயர். அரவினுள், கவ்வை, பாம்பு இவை ஆயிலியத்தின பெயர். எ-று. 3

பாவுமுற் சனியே வாய்க்கால் வேட்டுவ னெழிலி பாரிற்
கூவிய ஞமலி மாசி கொடுநுக மகப்பேர் துர்க்கை
நாவித னெலியே மாற்றை யிடைச்சனி பூர ஞம
மோவில்பாற் குனிபங் குனி கடைச்சனி யுத்த ரப்பேர்.

(இ-ள்.) முற்சனி, வாய்க்கால், வேட்டுவன், எழிலி, ஞமலி, மாசி, கொடுநுகம் இவை மகத்தின் பெயர், துர்க்கை, நாவிதன், எலி இடைச்சனி இவை பூரத்தின் பெயர், பாற்குனி, பங்குனி, கடைச்சனி இவை யுத்தரத்தின் பெயர். எ-று. 4

உத்தமக் களிறு நவ்வி யுயர்கௌத் துவமாங் கைம்மீன்
அத்தமென் கன்னி யாடை யாம்பரம் பயறு நெய்மீன்
சித்திரப் பெயர் மரக்கால் பதுமமே தீபஞ் சோதி
மொத்தவை காசி முற்றில் சுளகுடன் முறம்வி சாகம்.

(இ-ள்.) களிறு, நவ்வி, கௌத்துவம், கைம்மீன் இவை அத்தத்தின் பெயர். கன்னி, ஆடை, ஆம்பரம், பயறு, நெய், மீன் இவை சித்திரையின் பெயர். மரக்கால், பதுமம், தீபம் இவை சோதியின் பெயர். வைகாசி, முற்றில், சுளகு, முறம் இவை விசாகத்தின் பெயர், எ-று. 5

விசைகொள்புற்ருளிபுன்றேள் மெய்ப்பெண்ணையனுடப்பேரா
மசைவில்வல் லாரை வாளி துடங்கொளி கேட்டை யாகுந்
திசையுறு குருகு கொக்கு தேட்கடை யானி மூலம்
வசையில:க் குளமே பொய்கை வாவிபூ ராட மாமே.

(இ-ள்.) புல், தாளி, தேள், பெண்ணை இவை அநுடத்தின் பெயர். வல்லாரை, வாளி, துடங்கொளி இவை கேட்டையின்பெயர் குருகு, கொக்கு, கேட்கடை, ஆனி இவை மூலத்தின்பெயர், குளம் பொய்கை, வாவி இவை பூராடத்தின் பெயர், எ-று. 6

மானெனிற் குளமே கூவன் மணிமுடி யாடை யூர்தி
கானவுத்த ராடஞ் சோணை சிரவண முலக்கை யோண
மானபுட் பறவை காக்கை யாவணி யவிட்டப் பேரா
தேனறுய் சுண்டன் குன்று செக்கிவை சதையஞ் செப்பே.

(இ-ள்.) குளம், கூவல், மணி, முடி, ஆடை, ஊர்தி இவை உத்தராடத்தின் பெயர். சோணை, சிரவணம், உலக்கை இவை திருவோணத்தின் பெயர். புள், பறவை, காக்கை, ஆவணி இவை அவிட்டத்தின் பெயர். சுண்டன், குன்று, செக்கு இவை சதயத்தின் பெயர். எ-று.

செவ்விய கொழுங்கோல் நாழி புரட்டைசீர் பூரட் டாதி
யவ்விய முரசு வேந்த னறிவனுத் தராட்டா திப்பேர்
வவ்விய கடைமீன் தோணி மரக்கலஞ் சூலம் நாவாய்
நவ்வித ரேவ திப்பே ரவைதினம் நாட்பொ துப்பேர்.

(இ-ள்.) கொழுங்கோல், நாழி, புரட்டை இவை பூரட்டாதியின் பெயர். முரசு, வேந்தன், அறிவன் இவை உத்தராடத்தின் பெயர். கடைமீன், தோணி, மரக்கலம், சூலம், நாவாய் இவை ரேவதியின் பெயர். தினம், நாள் இவை பொதுப்பெயர். எ-று. 8

இரரசி நிகண்டு.

பேர்மறி தகர்வற் காலி பெரியமே ழம்பின் கொச்சை
கூறிய மொல்லை மொத்தை பசுமுரி குண்டை பாண்டில்
சீறிய விடையே புல்லஞ் சேவெரு திடபப் பேராந்
தாரமே கவிளை வீணை தண்டியாழ் மிதுனந் தானே.

(இ-ள்.) மறி, தகர், வற்காலி, மேழகம், கொச்சை, மொல்லை, மொத்தை இவை மேடத்திற்கும். குண்டை பாண்டில், விடை, புல்லம், சே, எருது இவை யிடபத்திற்கும். தாரம், கவிளை, வீணை, தண்டு, யாழ் இவை மிதுனத்திற்கும். எ-று. 9

தானநண் டலவ னள்ளி குளிர்சேக்கை ஞெண்டு கொண்டே
லானநற் கடகப் பேரா மாளரி மலைமாச் சீயங்

கானமாப் புலியே கோன்மாக் கடுவனுஞ் சிங்கப் பேராந்
தேன்மொழி மாது தையல் சேடிபெண் டெரிவை கன்னி.

(இ-ள்.) நண்டு, அலவன், நள்ளி, சேக்கை, ஞெண்டு. கொண்டல் இவை கற்கடகப்பெயர். ஆள், அரி, மலைமா, சீயம், புலி, கோன்மா, கடுவன் இவை சிங்கத்தின் பெயர். மாது, தையல், சேடி, பெண், தெரிவை இவை கன்னியின்பெயர். எ-று, 10

கன்னிகோல் நிறைகோல் தூங்கல் கட்டளை வணிகன் செட்டி
துன்னிய துலாத்தின் பேராந் துடர்மணி விட்டந் துட்டன்
மன்னியன் தெறுக்காற் புன்றேள் விருச்சிகப் பேராம் வில்லு
மன்னிய சிலைகாண் டீபங் கார்முகத் தனுவென் மானே.

(இ-ள்.) நிறை, கோல், தூங்கல், கட்டளை, வணிகன், செட்டி இவை துலாத்திற்கும், துஷ்டன், தெறுக்கால் விருச்சிகத்தின்பெயர் வில்லு, சிலை, காண்டீபம், கார்முகம் இவை தனுசுக்குப்பெயர்.

மான்கலை புல்வாய் கேது வளர்சுறு மகர மாகுங்
கூன்குடம் கலசஞ் சாடி குட்டுவங் கும்பப் பேராம்
மீன்கயல் சேலே கெண்டை மீனப்பே ரிராசிக் கெல்லாம்
தேங்கமழ் குழலா யோரை பொதுப்பெயர் திதியின் பக்கம்.

(இ-ள்.) மான், கலை, புல்வாய், கேது, சுறு இவை மகரத்திற்கும். குடம், கலசம், சாடி, குட்டுவம் இவை கும்பத்திற்கும். மீன், கயல், சேல், கெண்டை இவை மீனத்திற்கும். ஓரை இராசியின் பொதுப்பெயர், திதி பக்கமென்றும் பெயர். எ-று. 12

கிரக நிகண்டு.

பக்கரை பரியே ழூர்தி பகலவன் பரிதி யென்றாழ்
திக்கிலாப் புண்ட ரீகன் திவாகர னருக்கன் பானு
மிக்கமார்த் தண்டன் வெய்யோன் றினகர னிரவி விண்ணிற்
செக்கரா தித்த ஞாயி லலரிசூ ரியன்பேர் சொல்லே.

(இ-ள்.) பக்கரை, பரியேழூர்தி, பகலவன், பரிதி, என்றாழ், புண்டரீகன், திவாகரன், அருக்கன், பானு, மார்த்தாண்டன், திவாகரன், ரவி, அதித்தன், ஞாயிறு, அலரி இவை சூரியன் பெயர்.

சொல்லரும் பிறையே யிந்து சந்திரன் சசியே சோமன்
நல்லெழு மதிநாட் கேழ்வ னம்புலி நிலாத்திங் கட்பேர்
சொல்லுமங் கார கன்சேய் நிலமகன் குசன்தீ யாரல்
வல்லிசே ரிடையாய் பூமன் வக்கிரன் குருதி செவ்வாய்.

(இ-ள்.) பிறை, இந்து, சந்திரன், சசி, சோமன், மதிநாட் கேழ்வன், அம்புலி, நிலா, திங்கள் இவை சந்திரனின் பெயர், அங்காரகன், சேய், நிலமகன், அங்குசன், தீ, ஆரல், பூமன், வக்கிரன், குருதி இவை செவ்வாயின் பெயர். எ-று. 14

செவ்விய கணக்கன் புந்தி மதிமக னருணன் சீர்மால்
தவ்வலில் புலவன் தூதன் மேதைகா மன்பு தன்பே
ரெவ்வமில் குருபொன் சீவன் பீதக னிறைவன் பார்ப்பான்
மவ்வலங் குழலாய் வானோர் மந்திரி வியாழ மாண்பே.

(இ-ள்.) கணக்கன், புந்தி, மதிமகன், அருணன், மால், புலவன் தூதன், மேதை, காமன் இவை புதனுக்கும், குரு, பொன், சீவன், பீதகன், இறைவன், பார்ப்பான், மந்திரி இவை வியாழத்திற்கும் பெயர். எ-று. 15

மாண்புகர் பிருகு சுங்கள் சுக்கிரன் சிதன்ம ழைக்கோன்
மூண்டபார்க் கவனே வெள்ளி முதுமகன் மூடவ னீலன்
காண்டகு பங்கு காரி கரியவன் கதிர்சேய் மந்தன்
கூண்டசுன் சனிப்பேர் நாக மிராகுப்பேர் கொடியோன் கேது.

(இ-ள்.) புகர், பிருகு, சுங்கன், சுக்கிரன், சிதன், மழைக்கோன் பார்க்கவன் இவை வெள்ளிக்கும், முதுமகன், மூடவன், நீலன், பங்குகாரி, கரியவன், கதிர்சேய், மந்தன், சுன் இவை சனிக்கும். நாகம் இராகுவுக்கும். கொடியோன் கேதுவிற்கும் பெயர். எ-று. 16

தெத்த யோகம்.

கொடுங்கதிர் தனக்கீ ராறு குளிர்மதி தனக்குப் பன்னோள்
நடுஞ்செவ்வாய்க் கஞ்சு மேதைக் கிரண்டுபொன் னவனுக்காறு
நெடும்புகற் கெட்டு நீலற் கொன்பது நிகழ்ந்த பக்கம்
படந்தவை தெத்த யோகந் தீதென்பர் பலரு மன்னே.

(இ-ள்.) ஞாயிறு-துவாதசியும், திங்கள்-ஏகாதசியும், செவ்வாய்-பஞ்சமியும், புதன்-திவிதியையும், வியாழம்-சஷ்டியும், வெள்ளி-அட்டமியும், சனி-நவமியும் தெத்தயோகம் இவை சுபகன்மங்களுக்கு ஆகாது. எ-று. 17

அமிர்தயோகம்; மாணயோகம்.

பலமுடை மூல கோண மிரேவதி யத்தம் பாரில்
நலமுடை யுத்தி ரங்கள் மூன்றுநன் றருக்கன் றன்னில்

குலவிய வனுடன் கேட்டை கொடுநகம் விசாகம் விட்டஞ்
சலமுடை யருக்கன் வாரஞ் சார்ந்திடில் மரணந் தானே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமையில் மூலமும், திருவோணம், இரேவதி, அத்தம், உத்திரகிரையம் இவைவரில் அமிர்தயோகம், இவ்வாரத்தில் அனுடம், கேட்டை, மகம், விசாகம், அவிட்டம் இவைவரில் மரணயோகம், எ-று. 18

தானமான் றலையே சோதி சாரிருள் புனர்த மோணம்
மானனுள் திங்கள் சேரி லமிர்தமா யோக மாகுங்
கானமா மகம்வி சாகம் கார்த்திகை பூரட் டாதி
மானநா ளுத்தி ராட மதிவரில் மரண மென்றே.

(இ-ள்.) மிருகசீரிடம், சோதி, ரோகணி, புனர்பூசம், திருவோணமிவையுடன் திங்கள்சேரில் அமிர்தயோகமாம். இவ்வாரத்தில் அசுவனி, மகம், விசாகம், கார்த்திகை, பூரட்டாதி, உத்திராடமிவை சேரில் மரணயோகம், எ-று. 19

அன்றிய வுரோணி மூலம் அறிவனுத் திரத்திற் செவ்வாய்
நின்றிடி லமிர்த யோகம் நிறைந்தவான் சதையஞ் செங்கை
வென்றிய விசாகம் பூரட் டாதியை விரும்பி னுளுங்
கன்றிய செவ்வாய் நின்றாற் கருமங்கள் நாசங் காணே.

(இ-ள்.) செவ்வாய்க் கிழமையில், ரோகணி, மூலம், உத்திரதிரையம் சேரில் அமிர்தயோகமாம், இவ்வாரத்தில் சதையம், திருவாதிரை, விசாகம், பூரட்டாதி இவைசேரில் மரணயோகம், எ-று.

காணுமுப் பூர மாடி கார்த்திகை யுத்தி ரத்தில்
பூண்முலை மடவாய்புந்தி வந்திடிற் புகழ்வர் சால
வாணிபா விட்ட மூல மிரேவதி குதிரை யத்தஞ்
சேணுறு புந்தி வந்தாற் செய்யுமக் கருமந் தீதே.

(இ-ள்.) புதவாரத்தில் முப்பூரம், உத்திராடம், கார்த்திகை, உத்திரமிவைசேரில் அமிர்தயோகமென்க இவ்வாரத்தில் அவிட்டம் மூலம், இரேவதி, அசுவினி, அத்தமிவைசேரின் மரணயோகம்,

கரும்பொடு சோதி பூச மைப்பசி மகத்திற் கற்றோர்
விரும்பிய வியாழ நின்றால் விளம்புவா ரமுத மென்று
திருந்துமான் றலைபார் செங்கு செங்கையுத் திரத்தோ ராடல்
சுரும்பமர் குழலாய் பொன்னன் வந்திடிற் றுயரஞ் சொல்லே.

(இ-ள்.) வியாழக்கிழமையில் புநர்பூசம், சோதிபூசம், அசவனி மகம் இவைசேரில் அமிர்தயோகமென்க. இவ்வாரத்தில் மிருகசிரிடம், ரோகணி, சதையம், திருவாதிரை, உத்திரம், கார்த்திகை இவைசேரில் மரணயோகம், எ-று. 22

சொல்லரு மூல மத்த மிரேவதி துரகண் சுங்கன்
புல்லிட லமுத யோகப் பூசமோ டுரோணி கேட்டை
மல்குமோ ரோண மாயில் மகத்தினில் வெள்ளி வந்தால்
அல்லிருங் குழலாய் தீதென் றறிந்தனர் தமிழை யாய்ந்தோர்.

(இ-ள்) வெள்ளிக்கிழமையில், மூலம், அத்தம், இரேவதி, அச்சுவனி இவைசேரில் அமிர்யோகமென்க. இவ்வாரத்தில் பூசம், ரோகணி, கேட்டை, திருவோணம், ஆயிலியம், மகம் இவைசேரில் மரணயோகம், எ-று. 23

ஆய்ந்தசீர் மகமே சோதி யாரல்பார் சதையங் காரி
சேர்ந்திடி லமிர்த மத்தஞ் சித்திரை புரட்டை நாவாய்
வாயத்தவுத் திரத்தோ டாயில் தனிவடில் மரண மென்க
சேர்ந்ததிற் சொல்ல நாட்கள் சித்தயோ கப்பேர் செப்பே.

(இ-ள்.) சனிக்கிழமையில் மகம், சோதி, கார்த்திகை, ரோகணி, சதையம் இவைச்சேரில் அமிர்தயோகம். இவ்வாரத்தில் அத்தம், சித்திரை, பூரட்டாதி, ரேவதி, உத்திரம், ஆயிலியம் இவைச்சேரில், மரணயோகம், எ-று. 24

திதி அமிர்தயோகம்.

செப்பிய குருவுக் கொன்பா னன்குபன் னன்கு சேய்க்கு
வெப்புறு கதிர்க்கு மன்றே டாறுபன் னொன்று வெள்ளிக்
கொப்புடை மதிக்கு மீரு றேழிரண் டியர்ந்த புந்திக்
கப்பதின் மூன்று மூன்று மெட்டுநல் லமுத யோகம்.

(இ-ள்.) வியாழத்திற்கு நவமி, சவுத்தியம், சதுர்த்தி, செவ்வாய்க்கும், ஞாயிறுக்கு பிரதமையும், சஷ்டியும், ஏகாதசி வெள்ளிக்கும், திங்களுக்கும், துவாதசியும், சத்தமியும், துவிதியையும், புதனுக்குதிரயோதசியும், திரிதியையும், அஷ்டமியும், அமிர்தயோகம்.

வார சித்தயோகம்.

யோகம்நன் றிரவி யத்த முயர்மதி வான்பே ராளன்
வேகலங் காரஞ் சென்னி மேதைசே ரனுஷம் விண்ணோர்

ஏகமங் திரிசேர் பூச மிரும்புகர் வாரங் தோணிம்
மாகவான் சனியு ரோணி சித்தியென் மயிலே யன்னாய்.

(இ-ள்.) ஞாயிறு-அத்தம், திங்கள்-மிருகசீரிடம், செவ்வாய்-அசுவனி, புதன்-அனுட்டம், வியாழம்-பூசம், வெள்ளி-இரேவதி, சனி-ரோகணி சித்தயோகம். எ-று.

சுபயோகம்.

அன்னமே பகுதிக் கொட்டா மம்புலிக் கொண்பான் சேய்க்குஞ்
மன்னிய விருமூன் றுகு மாலவற் கொருமூன் றுகும்
பொன்னவன் றனக்குப் பக்கம் பதினொன்று புகற்குப் பன்மூ
றின்னல்சேய் சனிகுப் பன்னான் கிவைசுப யோக மென்னே.

(இ-ள்.) ஞாயிறு-அஷ்டமியும், திங்கள்-நவமியும், செவ்வாய்-சஷ்டியும், புதன்-திரிதியையும், வியாழம்-ஏகாதசியும், வெள்ளி-திரயோதசியும், சனி-சதுர்த்தியும் இப்படிவரி லிவை சுபயோகம்.

நாசயோகம்.

என்றுநீ டிருளேச் சீறு மித்துவுக் காறு வெள்ளி
கொன்றிய நவமி மேதைக் கிரண்டொளி யவற்கு நாலு
கொன்றனக் கெட்டு நீலப் பூமனுக் கேழு பொல்லாக்
கன்றிடு நாச யோக மெனறறி கதிர்வேற் கண்ணாய்.

(இ-ள்.) திங்கள்-சஷ்டியும், வெள்ளி-நவமியும், புதன்-துவிதியையும், ஞாயிறு-சவுத்தியும், வியாழம்-அஷ்டமியும், சனி, செவ்வாய்க்கு-சத்தமியும் வரில் நாசயோகம். எ-று. 28

கதிரவற் கைந்தோ டாரல் கணக்கற்கேள் பரணி காரி
எதிருறு மெட்டுத் தோணி யெரிக்குமன் னுவர்வு ரோணி
புதியபொன் றனக்குப் பன்மூன் றனுடமாம் புகற்காரோண
மதியவற் கிரண்டாம் பக்கஞ் சித்திரை மருவில் நாசம்.

(இ-ள்.) ஞாயிறு-பஞ்சமி கார்த்திகையும், புதன்-சத்தமி பரணியும், சனி-அஷ்டமி ரேவதியும், செவ்வாய்-பூரணை ரோகணியும், வியாழம்-திரயோதசி அனுடமும், வெள்ளி-சஷ்டி திருவோணமும், திங்கள்-துவிதியை சித்திரையும் வரில் நாசயோகம். எ-று. 29

மருவிய கதிர் விசாக மதிவரு சதயஞ் செவ்வாய் .
பொருவிய விட்டன் புந்தி ரேவதி பொன்னு ரோணி
பெருகுவிற் பூசங் காறி யுத்திரம் பேணி வந்தா
லருளில விநாச மென்று ரறியநூல் தெரிந்த ரிந்தோர்.

(இ-ள்) ஞாயிறு-விசாகமும், திங்கள்-சதையமும், செவ்வாய்-அவிட்டமும், புதன்-ரேவதியும், வியாழம்-ரோகணியும், வெள்ளி-பூசமும், சனி-உத்திரமாகவும் வரில் நாசயோகம். எ-று. 30

சத்த யோகம்.

அருக்கன்முன் சனியீ ருக முறம்பொய்கை யவிட்டந் தோணி
யுருகுட முத்தி ரத்தா டுதித்தவா ரத்தி நின்று
தெரிந்தநா ளளவு மெண்ணி யேழுக்கீந் தியாச் சேட
மிருத்தைநா சஞ்சா வின்பஞ் சகஞ்சித்தி பிரிச மென்னே.

(இ-ள்.) ஞாயிறுமுதல் சனியீறாக விசாகம், பூராடம், அவிட்டம், ரேவதி, ரோகணி, பூசம், உத்திரம் இந்நாள் முதலாக அவற்றை வாரத்திலுற்ற நாளளவு மெண்ணின தொகையை ஏழுக்கீந்து மீந்தசேடம் ஒன்றாகில் இருத்தை, உ-ஆகில் அமிர்தம், ரு-ஆகில் சுபம், சு-ஆகில் சித்தயோகம், எ-ஆகில் பிரிதியோகமென் றிப்படிப் பார்த்துக் கொள்ளுவது அபிசித்துக்கூட்டி யெண்ணுவது. எ-று.

அக்கினி யோகம்.

பிரசவெண் டிங்கட் காறு பெரியசேய்க் கேழு மாலுக்
குறைசெய்தா ரெட்டுப் பொன்னுக் கொன்பது பாற்குப் பத்து
பரியகன் னுக்குப் பன்னேன் றருக்கற்கி ராறு பக்கம்
விரைசெய்பூங் குழலா யங்கி யோகமென் றிசைத்தார் நூலோர்

(இ-ள்.) திங்கள்-சஷ்டி, செவ்வாய்-சத்தமி, புதன்-அஷ்டமி, வியாழம்-நவமி, வெள்ளி-தசமி, சனி-ஏகாதசி, ஞாயிறு-துவாதசி வரில் அக்கினியோகம். எ-று. (இவை சுபகன்மங்களுக்காகாது.)

எமகண்ட யோகம்.

நூல்கதிர் மகமும் பூரம் நுண்மதி பூசம் பாம்பு
ஆலங்கி யனுட மாரல் அறிஞன்மான் றலையு மத்தம்
நூலவன் தோணி மூலம் நுண்வெள்ளி சகடு சோதி
கால்சனி வோணம் விட்டம் எமகண்டங் கழித்தார் மேலோர்.

(இ-ள்.) ஞாயிறு-மகம் பூரம், திங்கள்-பூசம் ஆயிலியம், செவ்வாய்-அனுஷம் கார்த்திகை, புதன்-மிருகசீரிடம் அத்தம், வியாழம் இரேவதி மூலம், வெள்ளி-ரோகணி சோதி, சனி-திருவோணம் அவிட்டம் இவை எமகண்ட யோகமென்றறிக. எ-று. (சுப கன்மங்களுக்காகாது.) 33

சகட யோகம்.

மேலெழு வியாழ நின்ற விராசிக்கா றீரா றெட்டில்
மாலைவெண் மதியஞ் சேரில் வந்தநாட் சகட யோகம்
பாலகன் பிறக்கிற் சாவாம் பழிபடு மணத்தைச் செய்யில்
ஞாலமேல் வழியைப் போகில் நலமில்லை நறுமின் கொம்பே.

(இ-ள்.) வியாழம் நின்றாசிக்கு, சு-மிடத்திலும், கஉ-மிடத்திலும், அ-மிடத்திலும், சந்திரகிரகம் வரும்நாள் சகடயோகம், இதன்பலன் பாலகன் பிறக்கிற்சாவு, மணஞ்செயில் வழிபோகில் நன்மையில்லை, எ-று. (சுபகன்மங்களுக்குத் தவிர படுமெனக.) 34

பிரதியோகத்தின் பெயர்.

நறுங்கம்பம் தரிசம் வாளுள புண்ணியம் மணமா கண்ட
மறந்துணைச் சூல கண்ட மார்க்கமூ ணறவே டோற்றுங்
கறங்கியில் சித்தி கோறல் பெருகாயம் பரிசங் காட்சி
திறம்புகழ் காவல் வாய்ப்புத் திசைமுகனிந்திரன்பேய்.

(இ-ள்.) கம்பம், விடகம்பம், பிரிசம், பிரீதி, வாளுள், ஆயுட்மானம், புண்ணியம், சௌபாக்கியம், மணம், சோபனம், ஆகண்டம், அதிகண்டம், அறம், சுகர்மம், துணை, திருதிசூலம், சூலம்கண்டம், கண்டம், ஆக்கம், விருத்தி, ஊண்துருவம், அறவு, வியாகாதம், ஏற்றம், அரிசனம், அயில்வச்சிரம், சித்திகோறல், விதிபாதகம், பெருமாயும் வகறியான், பரிசம், பரிசம்காட்சி, சிவம், திறம், சித்தல், புகழ், சாத்திபம்காவல், வாய்ப்பு, சுப்பிரம், திசைமுகன் பிர்மா, இந்திரன், மாகேந்திரம் பேய்வைதிருதி இப்படி யிருபத்தேழு பிரிதியோகமுங் கண்டுகொள்வது, எ-று. 35

விஷயோகம்.

பேயுடன் பரிசங் கோறல் பெரும்பாம்பு சூலங் கம்ப
மாயமா கண்டங் கண்ட மயிலொழித் திவைகள் நன்று
மேயுமா கம்ப மூன்று சூலமஞ் சரவுக் கொன்பான்
காயுமா கண்டங் கண்ட மாறுமுன் கடிகை நீக்கே.

(இ-ள்.) பேய், பரிசம், கோறல், பாம்பு, சூலம், கம்பம், ஆகண்டம், கண்டம், அயில் இவை யொன்பதுமொழிய அல்லாலவை நன்றென்பது இந்த ஒன்பதிலுங் கம்பத்துக்கு மூன்றும் முன்னே கழிப்பது சூலத்துக்கு ரு-ம் பாம்புக்கு சு-ம் ஆகண்டம் கண்டத்துக்கு ஆறுநாழிகை முன்னே கழிப்பது நிறைந்தது ஆமென்பது பேயும், பரிசமும் கோறலும் அயிலும் ஆகாது, எ-று.

நித்தயோகம்.

நீக்கியிக் கடிகை முன்னே இவையுமாம் நித்த யோகம்
பூக்குழல் மடவா யித்தை வாக்கியத் துருங் கூட்டி
சேர்த்ததிற் சென்ற திங்கள் திகதியின் தினத்தைச் செய்வை
பார்த்ததி லொருநாள் நீக்கி நின்றநாள் பரிந்து சொல்லே.

(இ-ள்.) நித்தயோகம் பார்க்கும்படி அத்தை வாக்கியத்தில் துருவததைக்கூட்டி யிதனுடனே சென்றமாதமுந் தேதியுங்கூட்டி நாளைப்பார்த்து கண்டநாளிலே ஒருநாளைக்கழித்து நின்றநாளித்தனை நாளென்றறிந்து முன்புசென்றயிருபத்தேழில் வந்தபலாபலம் பார்த்துச் சொல்வது, எ-று. 37

திவத்திதியோகம்.

பரித்தவன் னுறுபக் கத்தி லொன்றேயதி லேழுக் கீய்ந்தால்
திருக்கலி நந்தை நாளாஞ் செய்தனம் புகழென் றேழும்
உரைத்தன ரிதனிற் காளங் கலியிவை யொழிய மற்றுந்
தெரித்தன நல்ல வென்று திவைத்திதி யோகஞ் செப்பே.

(இ-ள்.) அத்தம் பக்கய் இத்தனையாம் பக்கமென்றறிந்து அதிலே ஒனறுகூட்டி எழுக்கீய்ந்தால் நின்றசேடம் க-ஆகில் திருத்திவசம் உ-ஆகில் கலிதிவசம் ௩- ஆகில நந்தைதிவசம் ச-ஆகில் காளகண்டதிவசம் ரு-ஆகில் சதயத்திவசம் ௬-ஆகில் தினதிவசம் எ-ஆகில் புகழ்திவசம இந்த எழிலும் கலிதிவசமும் நாள்கண்டதிவசமும், பொலலாது மற்றுள்ள தெல்லாம் நல்லது எ-று.

வாரசுன்னியம்.

ஆகவற் கடனுங் கேட்டை மகமுற மடுப்பைர் தானம்
தீதறு மதிக்குப் பொய்கை தேள்மகம் புரட்டை யாறல்
கோதறு விசாகம பொல்லாக் குருதிக்கு விட்ட மோணம்
மேதகு சதயங் கேட்டை யாதிரை விளம்ப லாகா.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமையில் அனுடம், கேட்டை, மகம், விசாகம், பரணி, மிருகசீரிடம; திங்கட்கிழமையில் பூராடம், அனுடம், மகம், பூரட்டாதி, கார்த்திகை, விசாகம், செவ்வாய்க்கிழமையில் அவிட்டம், திருவோணம, சதையம், கேட்டை, திருவாதிரை.

விளம்பிய புதற்கு மூல வோணமோ டார லவிட்டம்
இளம்பரி பரணிதீ தென் றியம்பின ரிரணியற்கு
வளங்கொள்மான் றலேபூ ராட மாக்கலம் புனர்தம் பூரம்
துலங்கிய மூலேயாய் தீதென் றுரைத்தனர் துய்ய நூலோர்.

(இ-ள்.) புதனுக்கு மூலம், திருவோணம், கார்த்திகை, அவிட்டம், அசுவனி, பரணி; வியாழனுக்கு மிருகசீரிடம், பூராடம், ரேவதி, புனர்பூசம், பூரம், எ-று. 40

நூலறி புதற்குப் பூசம் விசாகமோண் சகடு விட்டால்
கோலமான் றலையோ டொத்த மனுடமுங் கொடுமை செய்யும்
நீலனுக் கத்தம் பூசம் புனர்தமுத் திரம்நீற் றேணி
மாலைபொண் குழலாய் தீது வாரசூன் னியம்வந் தாலே.

(இ-ள்.) வெள்ளிக்கு-பூசம், விசாகம், ரோகணி, அவிட்டம், மிருகசீரிடம், அத்தம், அனுடம். சனிக்கு-அத்தம், பூசம், புனர்பூசம், உத்திரம், ரேவதியும் இப்படி யிம்மூன்று விருத்தத்திலும் அவ்வாரங்களில் சொன்ன நட்சத்திரங்கள் வரில் வாரசூன்னிய மென்றுபெயர். எ-று. (இவை சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.)

கிழமை பிறந்தநாள்.

வந்திக்குங் கதிற்குங் கஞ்சல் மதிக்குச்சித் திரைசேய் தாடி
புந்திக்கு விட்ட மாகும் பொன்னுக்குக் கேட்டை யாகும்
சந்திக்கும் புகர்பூ ராடஞ் சனிதோணிப் பிறந்த நாளாஞ்
சிந்திக்குங் கரும மெல்லாந் தீயையாய் விளையு மாதோ.

(இ-ள்.) ஞாயிறு-பரணி, திங்கள்-சித்திரை, செவ்வாய்-உரோகணி, புதன்-அவிட்டம், வியாழம்-கேட்டை. வெள்ளி-பூராடம், சனி-ரேவதி இவை கிழமை பிறந்தநாள். எ-று. (சுபகன்மங்களுக்காகாது.) 42

மாதாந்தம்-வருஷாந்தம்-தோஷாயோகம்.

மாதாந்த மூன்று நாளும் வருஷாந்த மொருபத் தைந்து
தீதாந்த கிராணந் தீண்டுந் தினமுன்பின் சேர்ந்த வேழுங்
காதாந்த கண்ணாய் நாளின் கடையிரு கடிகை தானும்
வேதாந்த முணர்ந்தோர் தீதென் றியம்பினர் மிகவு மென்மேல்

(இ-ள்.) மாதாந்தத்திலே யந்தம் ௩-நாளும், வருஷாந்தத்திலே யந்தம் ௧௫-நாளும், கிராணந் தீண்டினநாளும், அதற்குமுன் ௩-நாளும், பின் ௩-நாளும் ஆக ஏழுநாளும் நட்சத்திரத்தில் அந்தம் (௨) நாழிகையும், சுப கன்மங்களுக்கு விலக்கப்படும் எ-று. 43

கண்ணுள்ளநாள்-இல்லாதநாள்.

மேதகு கதிரோ னின்ற நாளுமற்ற தினமேல் மூன்றும்
கோதறு பின்னில் மூன்றுங் குருட்டுநா ளென்று கொள்க

ஓதிய வதற்குப் பின்முன் ளுலது வொருகண் காணும்
ஏதமில் நின்ற நாட்க ளிருகணுண் டருக்கற் கென்னே.

(இ-ள்.) ஆகித்தனின்றநாளும் அதற்முன் மூன்றுநாளும் பின் மூன்றுநாளும் குருட்டுநாளென்க அசற்கு முன்னே நான்குநாளும் பின்னே நான்குநாளும் ஒரு கண்ணென்க அல்லாத நாட்களிரண்டு கண்ணுமுண்டு. எ-று. 44

அருக்கனர் கிழமை யாதி சென்றவக் கிழமை யாய்ந்து
பெருக்கினன் கதனற் பெற்றை மரமுதற் கழித்துப் பின்னை
இருக்குநா ளொன்பா னேர்கண் பன்னிரண் டிருகண் காணும்
தருக்கிலாப் பின்னி லேழுங் குருட்டுநாட் சந்தி ரற்கே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை முதலாகச்சென்ற கிழமையை நான் கினிற் பெருக்கி அத்தொகையை அசுபதி முதலாகக்கழித்து நின்ற நாளிலே ஒன்பதுநா ளொருகண், நின்றநாளிற் பன்னிரண்டுநா ளிரு கண் அதற்குமேல் ஏழுநாள் குருட்டுநாள். எ-று. 45

சந்தித்த பிற்பக் கத்துத் தசமிவிட் டதன்பின் னைந்து
முந்துற்ற தாதி நாலுங் குருடுபின் பொருமூன் றோர்கண்
பிந்துற்ற வாறுங் காணும் பின்னின்முன் னொருகண் காணுஞ்
சிந்தித்த வாறுங் காணுந் திரியமூன் றொருகண் காணே.

(இ-ள்.) அமரபக்ஷத்து ஏகாதசிமுத லைந்தும், பூர்வபக்ஷத்துப் பிரதமைமுதல் நாலுங்குருடு, பஞ்சமிமுதல் மூன்று மொருகண், அஷ்டமிமுத லாறு மிரண்டுகண், பதினைன்கு முவாவும் அமரபட்ச த்துப் பிரதமையும் ஒருகண், விதியைமுத லாறு மிரண்டுகண் அட் டமிமுதல் மூன்று மொருகண். எ-று. 46

ஒருகணுண் டெனுக்திங் கட்கு வுத்தம மருக்கற் காக
விருகணுண் டாம்நாள் பக்க மியாவற்கு மின்ப மெய்தி
இருகணு மிலாநா ளாகி லியற்றிய கருமந் தீதாய்
விரவிய சுற்றத் தோடுங் கெடுமென விளம்பி னரே.

(இ-ள்.) சந்திரதிருட்டி ஒரு திருஷ்டியாகிலும் நன்றென்பது சூரிய திருஷ்டி ஒரு திருஷ்டியாகிலுங் தீதென்பது, இரண்டு கண் ணுமுள்ளநாட் பக்கங்களு முத்தமம். எ-று. 47

இராவிழிவிராசி-பகல்விழிவிராசி.

விளங்கிய மேடங் குண்டை வீணைமான் கடகம் வில்லு
மிளம்பிறை யினமா யாறு மிரவுகண் காணு மென்றுங்

தெளிந்திடு மறிகோல் கன்னி குடங்கயல் தேளு மெல்லாம்
விளங்கதி ரருக்கன் கூருய்ப் பகல்விழி யுடைய மன்னே

(இ-ள்) மேஷமுதல் நான்கும் தனுசுமுத லிரண்டில் சந்திரனிவமென்றும் இராவிழிக்குமென்றுஞ்சொல்வது சிங்கமுதல் நாலு ராசியும் கும்பமுத லிரண்டு ராசியும் ஆதித்த னினமென்று பகல் விழிக்குமென்றும் சொல்வதென்றவாறு. 48

பக்கமுண்ணுந் திசாதிசை.

மன்னுமுதற் சதுர்த்தியினி லஞ்சாஞ் சாம
மருவியவட் டம்மிரண்டு பன்னொன் றேழா
மூன்னிலுவா ஞர்சாமம் பிற்பக் கத்தில்
மூன்றிலிரு மூன்றேழில் மூன்றாஞ் சாமம்
பன்னியபிற் றசமியினி லெட்டாஞ் சாமம்
பதினான்கின் முதற்சாமம் பகர்ந்த வீட்டில்
இன்னதனை யஞ்சாமமென் றறிந்து மற்ற
திரவிமுத லத்திசை தென்ன லாமே.

(இ-ள்.) பூர்வபக்ஷத்து சவுத்தியில் ரு-ம் சாமம் மேற்கேயுண்ணும், அஷ்டமி உ-ம் சாமம் தென்கிழக்கே யுண்ணும், ஏகாதசியில் எ-ம் சாமம் வடக்கே யுண்ணும், பௌரணையில் ச-ம் சாமம் தென்மேற்கே யுண்ணும், அமரபக்ஷத்து திரிதிகை கூ-ம் சாமம் வடமேற்கேயுண்ணும், சத்தமியில் ங-ம் சாமம் தெற்கே யுண்ணும், தசமியில் அ-ம் சாமம் வடகிழக்கே யுண்ணும், சதுர்த்தசி க-ம் சாமங் கிழக்கே யுண்ணும் இந்தச் சாமங்கள் சுபகாரியங்களுக்கும் இத்திசையில் யாத்திரைக்கும் விலக்கப்பட்டன. எ-று. 49

நட்சத்திர விஷகடிகை.

ஆதிரைமூ வேழ்சடிகை புரட்டை யீரெட்
டத்தமிரு பத்திரண்டுத் தாஞ்சதைய மூவார்
தூதுவாநவ் மகம்புநர்தம் தோணிபா ரைந்து
சோதிமூறம் கேட்டைமான் றலையுமீ றேழ்
நீதிமன்னன் பரணிகுள மெண்மூன் றிரலைக் கைன்பான்
னெடும்பணிக்கெண் ணான்குமைதார் தீவிமுடிக் கிருபான்
வீதியுருள் நாற்பதவிட் டம்பனேமால் பத்து
வெண்குருகு வையைந்து மேல்விஷகடிகை நான்கே.

(இ-ள்.) திருவாதிரை உக-நாழிகைக்குமேல், பூரட்டாதி கசு-க்குமேல், அத்தம் உஉ-க்கு மேல், உத்திரம் சதையம் கஅ-க்கு

மேல், கார்த்திகை மகம் புநர்தம் ரேவதி ௩௰-க்கு மேல், சுவாதி விசாகம் கேட்டை மிருகசீரிடம் ௧௪-க்கு மேல், உத்திராட்டாதி பரணி பூராடம் உ௪-க்குமேல், அசுவனி ௫௰-க்குமேல் ஆயிலியம் ௩௨க்குமேல், பூரம் பூசம் சித்திரை உத்திராடம் உ௰-க்குமேல், ரோகணி ௪௰-க்குமேல், அவிட்டம் அனுஷம் திருவோணம் ௰-க்கு மேல் மூலம் உ௫-க்குமேல் நாலுநாழிகை விஷகடிகை இவை சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டன. எ-று. 50

தூமாதி பஞ்சகிரகம்.

கடுங்கதிரோன் சென்றதிங்கட் டியதியதின் மேலே
கருதியநா லிராசிபதின் மூன்று பாகை
யுடன்பெய்கிற் கண்டநாட் டூம மத்தை
யோங்கிய மண்டலத்தி லொழித்துதவி பாதம்
மடந்தையதி லாரோரை கூட்ட வட்டம்
வட்டத்தை மண்டலத்திற்களைய வில்லாம்
படர்ந்தசிலை யிற்பதினேழ் பாகையிடக் கேது
பண்டையதா மிராசியொன்றைப் பயில்வித் தாலே.

(இ-ள்.) சென்றமாதமும் தியதியையும் வைத்து இதின்மேல் நாலிராசியும் பதின்மூன்று பாகையுங்கூட்டி நாளைப்பார்த்து கண்ட நாளிலே தூமமென்று பெயராம் இந்தத் தூமத்தை மண்டலத்திற் களைந்து கண்டநாள் விதிபாதமென்று பெயராம் அதின்மேல் ஆறிராசிகூட்டப் பரிவேஷம் இதை மண்டலத்திற்களைய கண்டநாள் இந்திரதனுசு இதிலே பதினேழு பாகைகூட்டக்கேது இதிலே ஒரு ராசிகூட்ட முன்போலேயாம் இந்நாட்கள் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டன. எ-று. 51

கரணத்தின் விபரம்.

வித்தகத்தாற் சென்றபக்க மிரட்டித் தொன்றை
விலக்கினின்ற தொகையேழிற் கழித்த சேட
மத்தசைய மடங்கடலற் புலியேனங் கழுதை
யானையெரு துடன்கோழி யிவையடைவே யறிந்தா
லுய்த்தனவே கரணம்பன் னொன்கு முன்பின்
முதற்றியதி முன்கூகை நாய்பாபபு முதலாய்
எய்த்தபுழு வாய்ச்சூழ்ந்த கரணம் பொல்லா
வேனங்குச் குடன்கழுதை யிவையுந் தீதே.

(இ-ள்.) சென்றபக்ஷத்தை இரட்டித்து அதிலொன்றைக் கழித்து நின்ற தொகை ஏழிற்கழித்தால் நின்றசேடம் க-சிங்கம், உ-புலி, ந-வராகம், ச-கழுதை ரு-யானை, சு-எருது, எ-கோழி யென ஏழுமறிந்து இவையீற்றில் பன்றியுங் கோழியும் கழுதையும் சுபகன்மங்களுக்கு விலக்கப்பட்டன. ரிஷபம் கோழி விலக்காகாது அமரபட்சத்துச் சதுர்த்தசியிற் பிற்கூறு கூகை, அமாவாசை முற்கூறு நாற்பிற்கூறு பாம்பு, பூர்வபட்சத்துப் பிரதமையில் முற்கூறு புழு இவை யுவாச்சூழ்ந்த கரணமென்று பெயராம் இவை விலக்கப்பட்ட கரணம். எ-று. 52

தீதில்கதிர் நின்றநாள் கேழுற் பாதஞ்
சிறந்தபத் தாற்கம்பம் பதினேந் தாகிற்
கோதிலயன் கண்டமிருபத் தொருநாட் காலன்
கொடிதாகு மிவைசாலக் கொடுமை செய்யும்
ஓதியசேய் நின்றநாட் கேழுற் பாத
மோங்கியபத் தேற்றிகறி பதினேந் தாகிற்
காதியிடு காண்டபொழு மூன்று நாளேற்
காலனிவை நல்வினைக்கு கழித்தார் நூலோர்.

(இ-ள்.) ஆதித்த நின்றநாட் கேழாநாள் உற்பாதம் கஉ-ம் நாள் கம்பம், கரு-ம் நாள் அதிகண்டம், உக-ம்நாள் காலன், செவ்வாய் நின்றநாளுக் கேழாநாள் உற்பாதம், ௰-நாள் திரிகி, கரு-ம்நாள்காண்டம், உக-ம் நாள் காலன் இவையாகாது. எ-று. 53

நூலறியும் புதனின்ற நாளுக் கெட்டும்
நோக்கயிரு பதினுலும் பதினெட்டுங் கண்டங்
கோலநெடும் புகற்கென்பா னேழுங் குற்றங்
குருவுக்கு மொன்பானேழ் கொடிய தாகும்
நீலனுக்கு பதினொன்று மஞ்சு பத்தும்
நிகழ்ந்தவிரு பதுமாறும் பந்ததேச மென்க
பாலனைய மொழிமடவாய் பாம்புக் கேழ்நாட்
பரிகமிங்கி வையனைத்தும் பழித்தார் மேலோர்.

(இ-ள்.) புதனின்ற நாளுக்கு உதஉசஅ-ம் கண்டமென்க. வியாழம் நின்றநாளுக்கு கூஎ-ம், வெள்ளிநின்ற நாளுக்கு கூ-எ-ம் குற்றம், சனி நின்றநாளுக்கு கக-ரு உ௰-சு-ம் பந்ததேசமென்க, பாம்பு நின்றநாளுக்கு எ-ம், நாட்டரிகமென்று பெயராம், இவை யெல்லாம் சுபகன்மங்களுக்கு விலக்கப்பட்டன. எ-று. 54

லத்தை இராசிவிஷம்.

மேலிரவி நின்றதினத் தீராசை யுதைக்கும்
வியாழமிரு மூன்றுசேய் மூன்றுசனி யெட்டாம்
மாலவன்பின் னிருமூன்று மதியிருபத் திரண்டு
வாளரவ மெட்டைந்து புகர்பின்னு ளுதைப்பர்
சாலவின்னு ளிக்கொடியர் மேடங் குண்டை
தனுக்கன்னி தலையாவ மரியாழ் கும்பங்
கோலினிடை கழுகுண்ணுங் குளிர்மீன் தேள்மான்
கொடும்பன்றி கடையிலுண்ணு மிவையுமறக் கொடிதேர்.

(இ-ள்.) ஆதித்த நின்றநாளுக்கு கஉ-ம்நாளே யுதைக்கும், இப்படிக்கு வியாழம் கூ-ம் நாளும், செவ்வாய் ங-ம் நாளும், சனி அ-ம் நாளும், புதன் பின் கூ-ம் நாளும், திங்கள் பின் உஉ-ம் நாளும், பாம்பு பின் அ-ம் நாளும், வெள்ளி பின் ரு-ம் நாளும் உதைக்கும். இந்நாட்கள் சுபகாரியத்துக் காகாதென்பது, மேஷம், ரிஷபம், தனுசு கன்னி இவை முற்கூறு விஷம் பாம்பு உண்ணும். சிம்பம், மிதுனம், கும்பம், துலாம் இவை நடுக்கூறு கழுகுண்ணும். கடகம், மீனம், விருச்சிகம், மகரம் இது கடைக்கூறு பன்றி யுண்ணு மிவை ஒரு காரியத்துக்கு மாகாது. எ-று. 55

குளிகை பவனாதிகன்.

கொடுங்குழைபாய் தங்கிழமை தாங்கள்முத லாகக்
குறித்தொருவன் கிழமையினைக் கோட்க ளேழு
மடங்கவுண் ணுமைமுக்காக் கடிகை தன்னி
லாதத்தி னாண்கால னுதைய மாகும்
நெடுங்குருவூ ணியமகண்டன் புந்தி யத்தன்
நீலநூண் குளியனிவை நினைக்க லாகாக்
கருங்குளிய னாரேத்த லானை யேறல்
கால்நாட்டல் நெல்விடுதல் கரும மாமே.

(இ-ள்.) தந்தாங்கிழமை தந்தான்முதல் பகல்நாழிகையை ஏழு கோளுமடைவே மூன்றேமுக்கால் நாழிகை ஒருவூணாக வுண்பார்கள் இவையிற்றில் ஞாயிறு நூண்காலனுதைய மென்றுபெயர் வியாழத்தினாணி யமகண்டம் புதனாண் அர்த்தபிரகாரன் சனியினாண், குளியன இவை சுபகருமங்களுக்கு விலக்கப்பட்டன. குளியனில் அகமெடுக்க, ஊரேற்ற, வாகனமேற, கம்பம்நாட்ட, தானியமிட்டு வைக்கவும் நன்றென்றவாறு. 56

யோகினி.

கருதுமுதற் பக்கமுடன் நவமிகிழக் காகுங்
 களிப்புடைய பதினொன்று மூன்றுந்தென் கிழக்காந்
தெரியிலொரு பதின்மூன்று மைந்துந் தெற்காஞ்
 செப்பரிய பன்னிரண்டும் நான்குந்தென் மேற்கு
மருவுபதி னான்காறு மேற்கு வாவேழ்
 வடமேற்காந் தசமியுட னிரண்டும்வடக் காகு
மூரியவிரு நான்குவட கிழக்கே யுண்ணும்
 யோகினிமுன் னிடந்தீய னொழிந்ததிசை நன்றே.

(இ-ள்.) பிரதமையும், நவமியும், கிழக்கே யுண்ணும், ஏகாதசியும், திரிதியையும், தென்கிழக்கு; திரயோதசியும், பஞ்சமியும், தெற்கு; துவாதசியுஞ், சதுர்த்தியும், தென்மேற்கு; சதுர்த்தசியுஞ், சஷ்டியும், மேற்கு; பூரணையுஞ், சத்தமியும், வடமேற்கு; தசமியும் விதியையும், வடக்கு; அஷ்டமி வடகிழக்கே நிற்கும்; இப்படி வரப்பட்ட யோகினி முன்னுமிடமுந் தீதாம், பின்னும் வலமும் நன்று. எ-று. 57

ஆகாசபாதாள சுக்கிரன்.

நன்றான திசையெட்டு முதற்பக்கங் கிழக்காம்
 நாலிரண்டு திசைநவமி விண்ணி லுண்ணுஞ்
சென்றாரும் பூதலத்திற் தசமி யுண்ணுஞ்
 திரியவுமிவ் வகைமுப் பான்றி யின்கேரு
மென்றாருந் தென்கிழக்கு நிலம்விண்ணுந் தீதா
 மெதிருமிட மும்வழியி லெவரும் போகார்
மின்றாரு மருங்குழலாய் வலமும் பின்னு
 மிகனல்லன் சுக்கிரனில் வினைகட் கெல்லாம்.

(இ-ள்.) கிழக்கு முதலாயெட்டு திக்கிலும், பிரதமை முதலாகவெட்டு நிற்கும், நவமி ஆகாசத்திலும், தசமி பூமியிலும் நிற்கும், ஏகாதசி முதலாக, அமரபட்சத்து பஞ்சமி யறுதியாக, முன்புபோல் நிற்கும், சஷ்டி முதலாகவு மூவாவறுதியாக முன்போல்நிற்கும், இப்படி முப்பது திதியும் நிறுத்துவது, இவை யீற்றில் தென்கிழக்கு நிற்கும், பக்கங்களு மெதிருமிடமும், யாத்திரை முதலானவைக்கு விலக்கப்பட்டன, அல்லாத பக்கங்களும், வலமும், பின்னுஞ் சுக்கிரன் மிகவு நல்லவன். எ-று. 58

நந்தை-பத்திரை-சயை-ரித்தை-பூரணை.

வினவின்முதற் றிதியாறு பதினொன்று நந்தை
மேவிரண்டேழ் பன்னிரண்டும் விளங்கியபத் திரையா
மினியவொரு மூன்றெட்டுப் பதின்மூன்றுஞ் சயையா
மிருத்தையென்பர் நான்கினுடன் நவமிபதி னான்கை
புனைகுழலாய்ப் பஞ்சமியும் பத்துமூவாத் தானும்
பூரணையென் மறியலவன் கோல்மகரஞ் சாமாந்
தனிவிடைதேள் குடஞ்சிங்கம் நிலைஇராசி தானு
தனிமிதுனங் கன்னிமீனு பையமெனத் தகுமே.

(இ-ள்.) பிரதமை சஷ்டியும், ஏகாதசியும், நந்தை யென்றறிக, விதியை சத்தமி, துவாதசி, பததிரை, யென்றறிக; சவத்தி நவமி, சதுர்த்தசி, இருத்தை யென்றறிக; பஞ்சமி தசமி,உலாவும், பூரணை யென்றறிவது; மேஷம், கற்கடகம், துலாம், மகர மிவை சரராசி, ரிஷபஞ், சிங்கம், விருச்சிகங், கும்ப மிவை ஸ்திரராசி, மிதுனங், கன்னி, தனுசு, மீன மிவை உபயராசி, எ-று. 59

சந்திரநாட் கூறுபாடாகிய திதிப்புணர்ச்சி சக்கரம்.

சந்திரன் கூறு	க-பக்கம் நந்தை	உ-பக்கம் பத்திறை	ந-ம பக்கம் சயை	ச-ம் பக்கம் இருத்தை	ரு-ம்பக்கம் பூரணை
முதல் வட்டம்	பிரதமை	விதியை	திரிதிகை	சதுர்த்தி	பஞ்சமி
உ-ம் வட்டம்	சஷ்டி	சத்தமி	அஷ்டமி	நவமி	தசமி
ந-ம் வட்டம்	ஏகாதசி	துவாதசி	திரயோதசி	சதுர்த்தசி	உவாஅமா

திரிவித இராசிச் சதுஷ்டியமாகிய இராசிப்
புணர்ச்சி சக்கரம்.

சரராசிகள்.	ஸ்திரராசிகள்.	உபயராசிகள்.
மேஷம்	இடபம்	மிதுனம்
கர்க்கடகம்	சிங்கம்	கன்னி
துலாம்	விருச்சிகம்	தனுசு
மகரம	கும்பம	மீனம்

பஞ்சாங்க பலன்.

தருமிரவி சனிசெவ்வாய் பாம்பு தீக்கோள்
சந்திரனும் பின்றீயயன் முன்பு நல்லன்
பிருமறையோன் புதன்வெள்ளி நற்கோ ளெல்லா
மிகநல்ல ருச்சமிரா வாரபய னில்லைத்
தொகுதிதியுங் குணமொன்று கரணமிரண் டாகுந்
துய்யநா லொருநான்கு கிழமை யெட்டாம்
முகிழ்முலையா யோகபலன் பதினா றென்பர்
முகுர்த்தபலன் அளவில்லை கொழியின் மாலே.

(இ-ள்.) ஆதித்தன், சனி, செவ்வாய், பாம்பு, தீக்கோளென்றும், சந்திரன், அமரபக்ஷத்துத்தீபன், பூர்வபட்சத்துநல்லன், வியாழம், வெள்ளி, புதன் நற்கோளென்றும் எல்லாருந் தந்தாம் உச்சஸ்தானங்களில் நல்லரென்க, இராவைக்கு வாரபலன் இல்லையென்க. பக்ஷத்தின் பலமொன்று, காரணத்தின் பலமிரண்டு நாளின் பலம் நாலு, வாரபலன் யெட்டு, யோகபலம் பதினாறு, முகூர்த்த பலன் அளவில்லை. 60

நோக்கு பலன்.

மாலவன்ற னுதையமாயிரங் குற்றங் கெடுக்கும்
வண்புகரோ னவன்பதினா யிரங்குற்ற மாய்க்குஞ்
சீலமறை யவனூறா யிரங்குற்றந் தீர்க்குஞ்
சித்தசிவயோ கம்நூறுநூ றாயிரங்குற் றஞ்செறுக்குஞ்
சோலையிளங் குயிலனைய யமுந போகந்
தோன்றியிடத் தீமையெல்லாந் தூரப்புண் டோடும்
கோலவிளங் கதிர்கண்ட விருள்போற் றேயுங்
குருவெள்ளி புதனோக்கிற் குற்ற மெல்லாம்.

(இ-ள்.) புதன் ஆயிரங் குற்றந்தீர்க்கும் வெள்ளி பதினாயிரங் குற்றந் தீர்க்கும் வியாழமுதயம் நூறாயிரங் குற்றந்தீர்க்கும் அமிர்தயோகம் எல்லாக் குற்றமுந் தீர்க்கும் புதன், வெள்ளி, வியாழம், நோக்குண்டாகில் ஆதித்தனைக்கண்ட விருள்போல் எல்லாக் குற்றமும் நீங்கும், எ-று. 61

கிரகவுரவும் - பகையும்.

எல்லிரவி தனக்குரவு வியாழந் திங்கட்
கிரணியனும் புதனுஞ்சேய்க் கினியபுதன் வெள்ளி

புல்லிலெழும் புதற்கருக்க னொழியு நல்லர்
பொன்னவற்குச் சேயொழியப் பொருந்தா ரில்லை
நல்லபுகற் குறவுசனி செவ்வாய் புந்தி
நான்மறையோன் சனிக்குறவு புதன்பொன் வெள்ளி
யல்லவர்க ளெல்லாரும் பகைவ ரென்று
ராரணங்கே யருந்தமிழ்நூ லடைய வாய்ந்தோர்.

(இ-ள்.) ஆதித்தனுக்குறவு வியாழம், சந்திரனுக்குறவு வியாழமும், புதனும், செவ்வாய்குறவு புதனும், வெள்ளியும், புதனுக்கு ஆதித்தனொழிய மற்றவருறவு, வியாழத்திற்குச் செவ்வாயொழிய மற்றவருறவு, வெள்ளிக்குறவு சனி, செவ்வாய், புதன், வியாழம், சனிக்குறவு புதன், பொன், வெள்ளி, எ-று. ௬2

ஆட்சி - உச்சம் - நீசம்.

ஆய்ந்தகதிற் காஙிசிங்க மதிற்கலவன் செவ்வாய்க்
காடுதேள் புதற்கரிவை மிதுனம்பொன் னவற்கு
வாய்ந்தசிலை மீன்புகற்குந் துலையிடபஞ் சனிக்கு
மகரம்கும்ப மிவையாட்டி வாளிரவிக் காடு
யேந்தமதிக் கேறெரிக்குக் கலைபுதற்கு மீனம்
மிரணியற்குக் கடகமெழில் புதற்குக் கன்னி
காய்ந்தசனிக் குத்துலையு மாவுதே ளுச்சங்
கனங்குடையா யேழிடங்கள் நீசமெனக் கருதே.

(இ-ள்.) ஆதித்தனுக் காட்சி சிங்கம், சந்திரனுக்கு கற்கடகம், செவ்வாய்க்கு மேஷம், விருக்சிகம், புதனுக்கு கன்னி, மிதுனம், வியாழத்திற்குக் தனுசு, மீனம், வெள்ளிக்கு ரிஷபம், துலாம், சனிக்கு மகரம்கும்பம் இவை யாட்சியென்றறிக, ஆதித்தனுக் குச்சம், மேஷம், சந்திரனுக் குச்சம், ரிஷபம், செவ்வாய்க் குச்சம், மகரம், புதனுக் குச்சம், கன்னி, வியாழத்துக் குச்சம், கடகம், வெள்ளிக் குச்சம், மீனம், சனிக் குச்சம், துலாம், பாம்புக் குச்சம், விருச்சிகமென்றறிவது உச்சத்து யேழாமிராசி நீசம், எ-று.

காற்கம்பம் - கிரகவலி.

கருத்துடைய வொன்றுநான் கேழுபத்தாங்
கண்டங்களு தையசீர்பா டுச்ச மென்பார்
பொருத்துடைய புதன்வியாழ முதையத்து வலியர்
புகர்மதிசீர் பாம்புசனி யாட்டிற் பூமன்

தெரித்தகதி ருச்சியினில் வலியர்புதன் றனக்குச்
சேய்வலிது சேய்க்குமந்தன் மகற்குச் செம்பொன்
குருத்தனுக்குப் புகர்புகர்க்கு மதிமதிக்குக் கதிரோன்
கொடுங்கதிரோன் றனக்கரவு கோல்வளையாய் வலிதே.

(இ-ள்.) க-ச-எ-൰-ம் இவைக ளுதயமென்றும், நிர்க்கீழென்றும் பாடென்றும் இச்சமென்றும் நாலுகண்டத்தின்பெயராம் இவற்றில் புதன், வியாழம், உதையத்துவலியர் வெள்ளி, சந்திரன், நீர்க்கீழ்வலியர், சனி பாம்புபாட்டில் வலியர் செவ்வாயாதித்தன் உச்சியில் வலியரென்றறிவது புதனுக்கு செவ்வாய் வலிது செவ்வாய்க்கு சனிவலிது சனிக்கு வியாழம் வலிது வியாழத்துக்கு வெள்ளிவலிது வெள்ளிச்குச் சந்திரன் வலிது சந்திரனுக்கு ஆதித்தன் வலிது ஆதித்தனுக்குப் பாம்புவலிது, எ-று. 64

அவச்சாயை பதச்சாயை.

வலியதக ராவணியொன் றிருகாற் சுன்னிடம்
மங்கைமுற் சுன்னிருகா லொன்றுயாழ் கொலொன்று
முனைவில்லிரு முக்காலோ நிரண்டலவன் மீன
மோரிரண்டு மொன்றரையு மொன்றுந்தே னிரண்டும்
பொலியுமிரண் டரையுமூன்று வில்லு மூன்றும்
பொருந்தியமூன் றரைநான்கு புல்வாய் நான்கும்
பலன்களிமூன் றரைமூன்றும் குடமூன்று மிரண்டரையும்
பகரிரண்டுங் கழியவச்சா ணயபதச்சா யையரையே.

(இ-ள்.) சித்திரை ஆவணிமுதல்பக்கத்து-க. நடுப்பக்கத்து-௧-பிற்பக்கத்துக்குச்சன் வைகாசி, புரட்டாசி முதற்பக்கததுசுன் நடுப்பத்து-௧. பிற்பத்துக்கு-க. ஆனி ஐப்பசி முதற்பத்து-க. நடுப்பத்து-க௧. பிற்பத்தும் உ-ஆடிபங்குனி மூற்பத்து உ-நடுப்பத்து க௧-பிற்பத்து-கார்த்திகை முற்பத்து-உ நடுப்பத்து-உமுக்கால் பிற்பத்து-௩ மார்கழி முற்பத்து-௩ நடுப்பத்து-௩௧ கடைப்பத்து-ச-தை முற்பத்து-ச-நடுப்பத்து-௩௧ - பிற்பதது-௩-மாசிமுற்பத்து-௩-நடுப்பத்து-உ௧-பிற்பத்து-உ-இப்படி யவச்சாயை கழியும் பதத்சாயையெப்பொழுதும் அரையடிகழியும், எ-று.

அகசுபிரமாணம்.

அப்மகரங் கேள்மி னை பஞ்சேச காலா
மாடுகயல் நாலேகா லரிவை துலையஞ்சா

மெருதுகுடம் நாலேமுக் கால் வில்லவ
னிருகடிகை யஞ்சறையூ ணிராசிகள் பன்னிரண்டும்
விரவியசித் திரைமுதற்பங் குனி யீராக
மேடமுதல் மீனந்தம் வெய்யோ னாளும்
பருதிநிலை யோரையறிந் தாரூ ரைக்கு
பண்டுரைத்த நாழியகையாற் பகற்கடி கைபகரே.

(இ-ள்.) சிங்கம், விருச்சிகம், மகரம், மிதுனம், நாழிகை ருவ-மீனம், மேஷம், சவ-துலாம், கன்னி, ரு-ரிஷபம் கும்பம் ச-முக்கால் தனுசு, கடகம், ருஉ-இப்படி பன்னிரண்டு ராசியுமிந்த யாவையுங் கண்டுகொள்வது, எ-று.

பகல்நாழிகை.

பகர்ந்தபகல் நாழிகையைப் பாதி செய்து
பாதிதனை யெழினாற் பெருக்கிப் பாரில்
நிகழ்ந்தவடி யனந்தவச் சாயைப் பாதச்சாயை
நீக்கிநிறை வடிமேலே வேழுங் கூட்டித்
திகழ்ந்தமுதற் றொகையத னுக்கிதனை யீய்ந்து
சிறந்தபலஞ் சென்றநா ழிகையின் பின்பேர்
புகழ்ந்திரவி படுங்கடிகை யிவைதா மென்று
பொலன்குறையாய் பகற்கடிகை பொருந்தச் சொல்லே.

(இ-ள்.) முன்புசொன்ன பகல்நாழிகை இரு கூறுக்கி ஒரு கூறி னை யேழிற்பெருக்கி அடியளந்தவச்சாயை பாதச்சாயை நீக்கி நின்ற வடிமேல் யேழுங் கூட்டி யதனை முற்பட்ட தொகையைக் கீய்ந்த பலன் சென்ற நாழிகையாம் உச்சிக்குப்பின் ஈய்ந்த பலனஸ்தமிக் கும் நாழிகை, எ-று.

இராத்திரி நாழிகை.

சொல்லமுத நாட்பின்பொன் னிரண்டே முக்கால்
தொழுமராம விருமுக்காமும் முக்கால் ரோணி
புல்லியமா னிரண்டரைய திரையொன்றே முக்கால்
புனர்பூச மூன்றேமுக் காற்பூச மிரண்டேகால்
வல்லபணி யொன்றேமுக்கால் மகமிரண்டே காலாம்
மாபூர முத்திரமோ ரிரண்டாங் கைம்மீன்
சொல்லுமொரு மூன்றேகால் சித்திரையொன் றறையாந்
தீபமொன் றேமுக்கால் முறமிரண் டேகாலே.

(இ-ள்.) பரணி-உ-முக்கால் கார்த்திகை-சஉ ரோகணி-உவ மிருகசீரிடம்-உஉ திருவாதிரை-க-முக்கால் புனர்பூசம்-ச-முக்கால் பூசம்-உவ ஆயிலியம்-க-முக்கால் மகம்-உவ பூரம்-உ உத்திரம்-உ அஸ்தம்-ஙவ சித்திரை-கஉ சோதி-க-முக்கால் விசாகம்-உவ, எ-று.

காற்பனையோன் றேமுக்கா லவ்வளவே கேட்டை
கருதியமூ லம்பொய்கை யிரண்டே காலாடி
வேற்குமிரண் டறையோண் மூன்றேகா லவிட்ட
மிரண்டுசெக் கொன்றேமுக் கால்மும்முக் கால்புரட்டை
தாற்றியவுத் திரட்டாதி யிரண்டே முக்கால்
மரக்கலமி ரண்டேகால் மாவொன்றே முக்கால்
சீர்த்தவந்தி தனிலுச்சம் நாளையிஞ் ஞன்றறிந்து
சேயிழையா யதுமுதலாய்ச் செல்கடிகை செப்பே.

(இ-ள்.) அனுடம் க-முக்கால், கேட்டை க-முக்கால் மூலம் உவ, பூராடம்-உவ, உத்திராடம்-உஉ, திருவோணம்-ஙவ, அவிட்டம்-உ, சதையம் க-முக்கால், பூரட்டாதி-உவ, உத்திரட்டாதி உ-முக்கால், ரேவதி-உவ, அசுவனி க-முக்கால் இப்படிதாட்குமென்று சொல்வது. எ-று. 69

லக்கின அங்குசம்.

செப்பியசெல் காற்கடிகை பெருக்கி யாறில்
திதிபெய்து கதிர்நின்ற வோரை முதலாக
முப்பதினுற் கழித்துநின்ற வோரை மூன்றே
யாறுமாவ ரைப்பாகை முறைமுறை யேயுண்ப
ரைப்பசியிற் சேய்வெள்ளி புந்தி திங்க
ளடுப்பருக்கன் புதன்வெள்ளி யழலோ ரூ
லொப்பரிய பொன்காரி சனிபொன் னுன்னு
மொழிந்தவையு மிவ்வகையே யுண்பரென வுரையே.

(இ-ள்.) சென்ற நாழிகையை சு-ல்பெருக்கி அன்றைத்திதியை அதனுடன்கூட்டி ஆதித்த நின்ற ராசிமுதலாக ஒரு ராசிக்கு முப்பதாகக் கழித்து நின்றது உதையராசியாம், அவ்வுதைய ராசியிற் சென்ற பாகத்தை அறிந்து மூன்றேபாறு மாவரை பாகைக்கு ஒரு அங்கசமென்றறிவது. அசுவனி முதற்கால் செவ்வாய், உ-ங்கால் வெள்ளி, ங-ங்கால் புதன், ச-ங்கால் சந்திரன், பரணி முதற்கால் ஆதித்தன், உ-ங்கால் புதன், ங-ங்கால் சுக்கிரன, ச-ங்கால் செவ்வா கார்த்திகை முதற்கால் வியாழம், உ-ங்கால் சனி, ங-ங்கால் சனி,

௪-ங்கால் வியாழம் இவ்வொழிந்த நாட்கள் இவ்வகையே யொட்டிக் கொள்வது. எ-று. 70

திரேகாணம் காலவோரை.

உரைத்திடிலோ ரிராசியொரு மூன்று கூறும்
வோரையுடை பவனுண்ணு முதலஞ்சா மோரை
கருத்துடைய நடுவொன்பா னோரை காப்போன்
கடையுண்ணுந் திரேகாண மிவைகால வோரை
யருக்கன்முதற் சனியீறுங் கிழமை யேழு
மந்தணன்முன் புதனீறு வுண்பான் முன்னே
சரித்தவிவற் கவ்வாறுய கோட்கள் வந்து
தக்கவிரண் டரைகடிகை யுண்பரெனச் சாற்றே.

(இ-ள்.) ஒரு ருசியை மூணுகூறுக்கி யிராசியுடையவன் முதற் கூறுண்ணும், ௫-ம் இராசியுடையவன் நடுவிற் கூறுண்ணும், ௯-ம் இராசியுடையவன் கடைக்கூறுண்ணும், இவ்வகை யெல்லாராசிகளுக்குந் திரேகாண மொட்டிக்கொள்வது, காலவோரை கோள்வரும்படி ஞாயிறுமுதல் சனியீராக வேழுகிழமையும், வியாழமுதல் புதனீராக ௭-ம் அடைவே சிறுகால முதல்வந்து ௨½-நாழிகை யுண்ணும், முதல் ½ உண்டகோளுக்கு ௬-ங்கோள், பின்பு ௨½-நாழிகை யுண்ணும் இவ்வகையாய் யெல்லா கோட்களு முண்பர். 71

திரிமிசாமிசை அர்த்த வோரை.

சாற்றிடிலோ ரையொன்று பாகை முப்பான்
சமனிரட்டை யொற்றைவிய னெத்தை தம்மி
லேற்றவைந் தொடைந்தேட் டேழைந்து கூறு
வொரிகாரி யிரணியன்மால் புகருண்பா வியனில்
மாற்றுசமந் தனில்வெள்ளி மால்பொன் காரி
மண்மகற்கோட் கூறுண்ணு வளக்கை நல்லார்
தோற்றுவியன் முதற்பாதிக் கதிர்பின் திங்கள்
சுடர்சிலவு சமயந்திங்கள் முதற்பின்சூழ் கதிரே.

(இ-ள்.) ஒருராசியை முப்பது பாகஞ்செய்து ஒற்றித்த விராசியின் இரட்டித்தராசி சமன், இவற்றை ௫-ம், ௫-ம், ௮-ம் ௭-ம், ௫-ம் ஆக முப்பது பாகையையும் ௫-கூறுக்கி இதில் விஷமராசியில் முற்கூறு செவ்வாய், ௨-ங்கூறுசனி, ௩-ங்கூறு வியாழம். ௪-ங்கூறுபுதன் ௫-ங்கூறு வெள்ளி, ஆக இவ்வகையே யுண்பர். சமனிராசியில் வெள்ளி, புதன், வியாழம், சனி, செவ்வாய் என்றிவ்வடைவே கோட்கூ

றுண்ணுமென்றறிவது சுடற் சிலவுகோ ளுண்ணும்படி வியனிராசி யில் முதற்கூறு கரு-ம் பாகை ஆதித்த னுண்பிற்கூறு சந்திரனுண் சமனிராசியில முற்கூறு சந்திரனுண, பிறகூறு ஆதித்தனுண் யிவ் வகைப் பார்த்துக்கொள்வது. எ-று. 72

முகூர்த்த விதானங்கள்.

கதியுடை புணர்சி மந்தம் கருதிம்பர் தாது கல்வாய்
முதுமையிற கல்வி முந்நூல் முடிமணம் பொற்பூ விஞ்ஞன்
விதைமுலல் போக்குச் சாந்தி பதிட்டைவீ டெத்தல் மேலும்
பொதுவியல் விதான மெல்லாம் புவல்செய்வன் பூசையென்னுய்

(இ-ள்.) நிஷேகம், புங்கசவனம், சீமந்தம், காமகரணம், கரண வேதம், அன்னப்பிராசனம், சவுளம், வித்தியாரம்பம், உபநயனம், அபிஷேகம், விவாகம், கிருஷியாரம்பம், மீஜவாபனம், யாத்திரை, சாந்தி, பிரதிஸ்டை, கிரகாரம்பம், பொதுவியல் விதானங்களெல் லாஞ் சொல்லுவன். எ-று. 73

நிஷேகம்.

பூவையே யனையார் பூத்த நாள்முதல் மூன்று நாளும்
மேவிடார் புணர்ச்சி பினனை விரும்புநாட் பன்னி ரண்டா
மேவிய கருவ துண்டா மிங்கிதி விரட்டை நாளான்
பாரிய வொற்றை நாளேற் பெண்ணெனப் பகர்மி னீயே.

(இ-ள்.) ஸ்திரீ பூத்தநாள்முதல் மூன்றுநாளும் விலக்கப்பட் டன. மேற் பனிரெண்டுநாளுங் கெர்ப்பமுண்டா மிதில் இரட்டித்த நாளெல்லாம் ஆண் ஒற்றைநாளெல்லாம் பெண். எ-று 74

பகர்தரு சோதி மூல பனையுரு ளோணங் தோணி
தகவிலுத் திரங்கள் மூன்றுஞ் சதையகா ளத்தஞ் சாலப்
புதல்வர்கள் புணர்ச்சி விட்டஞ் சித்திரை புநர்தப்பூச
மகசிரங் குதிரை யிந்நாள் மத்திமந் தீது மற்றே.

(இ-ள்.) சோதி, மூலம், அனுஷம், ரோகணி, திருவோணம், ரேவதி, உத்திரங்கள் மூன்றுஞ் சதைய மத்த மிவை நிஷேகத்து க்குச் சுத்தமென்பது அவிட்டம், சித்திரை, புநர்பூசம், பூசம், மிருக சீரிடம், அசுவனி இவை மத்திபம் அல்லாதவையாகாது. எ-று.

தீதுவா வெட்டி ரித்தை தீயவர் வாரஞ் செப்பி
லோதரு பிரந்த நாட்கள் பகலுட னொழிக்கப் பட்ட

தாதவிழ் குழலி கௌவஞ் சராசி மிகவு நன்று
மேதகு கோட்க ணோக்கில் மிகவும் விழுமி தாமே.

(இ-ள்.) உவா, அஷ்டமி, ரித்தை, ஞாயிறு, செவ்வாய், சனி ஜென்ம நக்ஷத்திரங்களும் பசலும் விலக்கப்பட்டன. அல்லாதவைகளுஞ் சராசிகளு முத்தமம் மற்ற ராசிகளுக்குஞ் சுபக்கிரகநோக்குண்டாகில் நலம். எ-று. 76

விழுமிய மதிகெண் டங்கவ் வெள்ளிபொ னஞ்சோ டென்பா
னெழுமிடம் நல்லர் புந்தி யேழினோ டொன்பால னல்ல
னழிவுறு பாபர் பன்னொன் றுனொரு மூன்று நல்லர்
செழுமணிப் பூணி னார்கள் புணர்ச்சியைச் செப்புங் காலே.

(இ-ள்.) உதையம் ௪-மிட ௮-மிடம் சந்திர னல்லன், வெள்ளி வியாழமும் ௫-மிட ௯-மிட முதையத்தினும் நல்லர், புதன் ௭-மிடம் ௯-மிடம் நல்லன். பாபர் ௧௧-௯-௩-மிடம் நல்லர், எ-று. 77

புங்க வசனம்,

செப்பிய திங்கள் மூன்றில் திருவோணம் பூசஞ் சேர்ந்த
ஒப்பரு நற்கோள் வாரத் துதித்திட வெள்ளி திங்கள்
வெப்பரு விருத்தை கன்னி வீணைநண் டெட்டிற் கோழ்கள்
துப்புறு பரவாய் நீக்கித் துய்யபும் வசனஞ் சொல்லே.

(இ-ம்.) மூன்றுமாதத்திற் பூர்வபட்சத்திலே திருவோண பூச இந்நாட்களில் சுபவாரங்களிலே வெள்ளி திங்களுதையமாக ரித்தை கன்னி, மிதுன, கடகநீக்கி, அஷ்டம சுத்தியுண்டாகவு மாகாச நிர்மலமாகவுங் கொள்வது. எ-று. 78

சீமந்தம்.

சொல்லுநான் காறெட் டிங்கட் டோணிமான் றலைபா ரோணம்
புல்லுமுத் திரங்க ளத்தப் பூசங்கள் புகட்கோள் வாரம்
நல்லவே விரட்டைப் பக்க நவமியோ டுவாத்தோள் சிங்க
மல்லவே சீமந்தத்துக் கட்டம சுத்த மாக்கே.

(இ-ள்.) ௪-மாதம், ௯-மாதம், ௮-மாதத்திலேயேயாதல் பிராமணராகில் மூன்றிலுஞ் சீமந்தம் பண்ணுவது இரட்டித்த பக்கங்களும் நவமியுந்தீது தீயவிராசிசளில் விருச்சிகம் சிங்கம் ஆகாது ஒழிந்தவையிற்றிலே சுபக்கிரக வாரத்திலும் ரேவதி, மிருகசீரிடம், ரோகணி, திருவோணப், உத்திரங்கள் மூன்று பூசங்கள் இவ்விரு பக்கங்களு மிருத்தைநீக்கி அஷ்டமாசுத்தமாகக்கொள்வது, எ-று.

ஆக்கிய சீமந்தத்துக் கமை வாரந் திங்க ளெட்டில்
மாக்கதி ரேறு போதின் மருவுமுற் பக்கத் தேழி
லூக்கிய பன்னி ரண்டி லிரோகணி யோண ராசில்
பூக்குழல் மடவால் மாயோன் பெலியிடப் புலவர் சொன்னார்.

இ-ள். எட்டுமாதத்தி லேறும்பொழுது பூர்வபக்ஷத்திலே சத்தமி துவாதசியான பக்கங்களிலே ரோகணி, திருவோண மிந்நாட்களிலே சுபக்கிரகங்கள் நோக்குண்டாக விஷ்ணு பெலியிடுவது,

சூதகமனை புகுதல்.

புலந்திரு வணைபாய் கேளாய் பெருமனை புகுநா ளத்தஞ்
சிலம்பின்மான் றலைமா வோணஞ் சித்திரை யுத்தி ரங்கள்
கலம்பனை புனர்தஞ் சோதி காரிபான் புகர்மால் திங்கள்
நலங்குடந் தேளி ருத்தை யெட்டிற்கோள் தவிர நன்றே.

இ-ள். சூதகக் கிரகப்பிரவேசம் அத்தம், மிருகசீரிடம், அசுபதி, திருவோணம் சித்திரை உத்திரங்கள்-ங அனுடம், புனர்பூசம், சோதிசனி, வெள்ளி, புதன், திங்கள் இவை நல்லது கும்பவிருச்சிகம் இருத்தை இவைதவிர, அஷ்டமசுத்தியுண்டாக சுபக்கிரகங்கள் நோக்குண்டாகக் கொள்வது, எ-று.

பிள்ளைப் பிறப்பு.

நன்றுநற் குழவி தோன்றும் பொழுதினில் நன்னீ ராடிக்
கன்றொடும் பசும்பொன் பூமி கலைபல மறையோற் கீய்ந்து
சென்றுமைந் தனை யெடுத்து திருமுகங் கண்டு செவ்வேள்
ஒன்றிய சாதகங்க டோலையி லெழுதி வைப்பாம்.

(இ-ள்.) பிள்ளைபிறந்தபோது பிதா ஸ்நானஞ்செய்து பிராமணருக்குப் பசுவுங் கன்றும் பொன்னும் பூமி முதலிய தானம் பண்ணியப் பத்தியர் முகங்கண்டு சாதகமெழுதிவைப்பது நன்மை, எ-று.

நாமகரணம்.

எழிற்பெய ரிடுகோள் பத்தி லீராறி லோணத் தோணி
வழித்துமான் றலைபார்மூல மகமத்தஞ் சதையம் விட்டம்
விழுப்பனை யுத்தி ரங்கள் விருங்கிரு பூச நன்றும் [ளரார்.
வொழித்திடா னுவானவை யொன்பா னெத்தித்த பக்கத் துள்

(இ-ள்.) பிராமணருக்குப் பன்னிரண்டா நாள் அல்லாதவர்களுக்கு முப்பதாநாள் நாமகரணம் பண்ணுவது திருவோணம், ரே

வதி, மிருகசீரிடம், ரோகணி, மூலம், அத்தம், சதையம், அவிட்டம் அனுஷம் உத்திரங்கள் மூன்றுஞ் சோதி புநர்பூசம் பூசமிவையுமிரட்டித்த பக்கங்களும் நல்லது நவமியும் உவாவுமொழியு அல்லாதவைகள் நல்லது, எ-று. 83

உவள்ரு நிலை யிராசி வுதித்திட வுச்சி முன்னே
எள்ளிரு நம்பினற் கோள் வாரத்தெட்டி னிக்கொள் நீக்க
யொள்ளிய பகை நீச்சத்தை நோக்குங்கோ ளுதைய மாற்றி
பிள்ளைதன் னமஞ் சாற்றிப் பிறைநுதற் கருங்கட் பேதாய்.

(இ-ள்) ஸ்திரராசிகளிலே உச்சிக்கு முன்னே நற்கோள் வாரங்களிலே அஷ்டமசுத்தியுண்டாக பகை நீச்சக்கோள் நோக்குங்கோளுதையமாற்றி நாமகரணஞ் சாற்றுவது, எ-று. 84

உலநிஷ்கரணம்.

பேதைகள் மூன்றுந் திங்கள் பேணுமுத் திரங்கள் தன்னிற்
காதலன் றனக்குச் செவ்வை கதிரவன் றன்னைக் காட்டு
மாதநான் கான நாளின் மதுபசு தன்னைக் காட்டு
மோதுவா புரைக்குச் சொன்ன வுவநிடங் காலங் காணே.

(இ-ள்.) பிள்ளைபிறந்த மூன்றுமாதத்தில் பிள்ளைக்கு விதித்த நாளிலே அப்பிள்ளைக்குச் சூரியனைக் காட்டுவது நான்கா மாதத்தில் பொருந்திய நாளில் சந்திரனையும் பசுவையுங் காட்டி உவநிஷ்கரணஞ்செய்வது, எ-று. 85

காது குத்துவது.

காணுமா றேழென் திங்கட் கருகுநா ளீரா றீரெண்
வோணமான் றலைபூ சங்கள் விட்டமுத் திரங்க ளத்தந்
தோணிசித் திரையே செங்கை சுபவாரம் பன்முன் றீரா
ராணிய மிரண்டு மூன்றன் காறேழ்கா தமைக்க லாமே.

இ-ள். பிள்ளைக்கு ௬-ம் மாதம், எ-ம் மாதம், அ-ம் மாதம், இம்மாதத்தில் ௨௰-ம் நாள் ௱௬-ம் நாள் திருவோணம், மிருகசீரிடம், புநர்பூசம், பூசம், அவிட்டம், உத்திரங்கள், ௩-ம் அத்தம் இரேவதி, சித்திரை, திருவாதிரை, இந்த நட்சத்திரங்களில் சுபவாரமும், சுபகோளுதையமுமானால், காது குத்துவது நன்று. பக்கங்களில் துவாதசி, திரயோதசி, துதிகை, திரிதிகை, பஞ்சமி, சஷ்டி, சத்தமி இவை நல்லது. எ-று. 86

ஆளரி குளமேள் தீது வாடுமான் சுறு விரண்டு
நாளிரு பக்கஞ் சேருங் கிழமைகள் நடுகிற் சேடாங்
கோளவை யெட்டின் மாற்றிக் கொடுங்கதி ருச்சி முன்னே
வாளனை வென்ற கண்ணுப் வைத்திடுங் காறு வல்லே.

இ-ள். மிதுனஞ், சிங்கம், கும்பம், விருச்சிக மிவைகள் தீது; மேஷம், மகரம், மத்திபம்; அல்லாதவை நல்லது. இரண்டுநாளு மிரண்டு பக்கமுஞ் சேருங் கிழமைகளாகாது, அஷ்டமசுத்தி யுண்டாக உச்சிக்கு முன்னே கொள்வது, எ-று. 87

வல்விமூன் றிரண்டைந் தொன்பான் பன்னொன்றேழ் மதிய ன
புல்லிய மூன்று பன்னொன் றழகிய தொன்பத் தாறுஞ் [ல்லன்
சொல்லிய வேட்டந் தீயன் சுங்கனெட் டாறேழ் பொல்லா
நல்லனெட் டொழியப் புந்தி காதிட னவிலுங் காலே.

(இ-ள்.) ங-ம் இடம் உ-ம் இடம் ரு-ம் இடம் கூ-ம் இடம் கக-ம் இடங்களில் சந்திரனல்லன், பராக்கிரமம் ங கக-ம் இடங்களில் நல்லன், வியாழம் கூ-ம் இடம் அ-ம் இடம் ஒழிய நல்லன், வெள்ளி அ-ம் இடம் எ-ம் இடமொழிய நல்லன், புதன் அ-ம் இடமொழிய நல்லன் இந்த சுபதினத்தில் காதிட நல்லது எ-று. 88

அன்னப்பிராசனம்.

வாலமா ரெட்டீறுரிற் கலமூருள் கைபூ சனங்கள்
சீலமா வுத்தி ரங்கள் சித்திரை சவைய மோணங்
கோலமான் றலைபுட் சோதி பனைகுரு புகர்மால் நன்றாண்
மேலுவா விரட்டை யொ ன்பான் மீன்தேளா டொழிய மேவே

(இ-ள்.) கூ-ம் மாதமுதல் அ-ம் மாதமாதல் ஆண்டு நிரம்பினுத லால், பூர்வபட்சத்திலே ஆகாசம் நிர்மலமானபோது, அன்னபிராசனம் பண்ணுவது இரேவதி, ரோகணி, அத்தம, புனர்பூசம், பூசம், உத்திரங்கள் மூன்று; சித்திரை, சதையம், திருவோணம், மிருகசீரிடம், அவிட்டம், சோதி, அனுஷ மிவை நன்று; வியாழம், வெள்ளி புதன், இவ்வாரங்கள் நன்று; உலாவும், நவமியு மிரட்டித்த பக்கங் களு மாகாது; மீன மேட விருச்சிக மிவைகள் விலக்கப்பட்டன அல்லாதவை நன்று எ-று. 89

சோற்பயிற்றல்.

மேதையொன் பானீ ராறும் வெள்ளியா றேழீ ராறு
தீதுப்பத் தடையத் தீது திங்களக் குடைய வாகா

கோதில்சான் கிருமூன் றெட்டுங் குருதியன் கெடியோர் மூன்
மாதரா யாறுபன் னொன் றழகிய வாயு ரைக்கே. [று

(இ-ள்.) கூம் இடம் கஉ-ம் இடம் புதன் தீயன், வெள்ளி கூ-ம் இடம் எ--ம் இடம் ௰-ம் இடம் தீயன், ௰-ம் இடம் எல்லாருந் தீயர் சந்திரனுடையவை யெல்லாம் விலக்கப்பட்டன. ச-சூ-அ-ம் இடம் வியாழன் பொல்லான், பாபர் ரு-சா-௰க-ம் இடம் நல்லவர் இந்த சுப தினத்தில் சொற்பயிற்றல் நன்று, எ-று. 90

அரைநாண்கட்ட கோடியுடுக்க.

வாய்ந்தசீர் மகவுக் காண்டு நிறம்பிட வந்த நாளிற்
றோய்ந்துநீர் தன்னிற் றாய மறையினாற் சுத்தி செய்தால் [சே
வேய்ந்தபொன் னரைநாண் கட்டு மெழிற்பெறப் பிறந்த நாட்
காய்ந்தவேற் கண்ணாய் கோடி கலிங்கங்கள் கடிது சேர்த்தே.

(இ-ள்.) பிள்ளைபிறந்த நரு௰-ம் நாளிலே குளிப்பாட்டி, புண்ணிய யாகமும்பண்ணி, பொன்னரை நாண்கட்டுவது, பிள்ளைபிறந்த நாளிலே கோடிப்புடவை யுடுத்துவது, எ-று. 91

சவுளம்.

சேருமுத் திர நான்குஞ் சிறந்தவுத் திராட நான்கு
மோருமான் றலை பூசங்க ளுத்திரட் டாதி மூன்றும்
பாருட னிருத்தை பெட்டா றுவா முதற் பக்கம் பொல்லா
வாரநற் கோள் நன்றாண்டு மூன்றைந்து மயிர்நாட் சொல்லே.

(இ-ள்.) உத்திர முதல் நான்கும், உத்திராட முதல் நான்கும், மிருகசீரிடம் புநர்பூசம் உத்திரட்டாதி முதல் மூன்றும், ரோகணியும் நல்லது, ரித்தை, அஷ்டமி, சஷ்டி, உவா, பிரதமையு மொழிந்தவை நல்லது நற்கோள் வாரங்கள் நன்றென்பது பிள்ளைபிறந்த மூன்றாமாண்டிலு மைந்தாமாண்டிலுஞ் சவுளம் பண்ணுவது எ-று.

சவுளத்துக் காகாதநாள்.

சொல்லிய மகரங் கன்னி துலையெரு தியாழ்மீ னண்டு
நல்லவெண் மதிய மாறோ டீராறுந் தோற்ற நாசம்
புல்லர்மூன் றாறுபன் னொன் றினியர்கள் புகரே பொல்லா
னெல்லையிற் குருவீ ராறு தீதெட்டி தெல்லாந் தீதே.

(இ-ள்.) மகரங், கன்னி, துலாம், ரிஷபம், மிதுனம், மீனங், கற்கடகம் கக-ம் நல்லன், சந்திரன் கூ-கஉ உதையம் பொல்லான் பாபர்

டு-சு-ம் கக-ம் நல்லர் வெள்ளி எ-மிடமொழிய நல்லன் வியாழம் கஉ-மிடமொழிய நல்லன் அ-மிடத்து எல்லாருந் தீயர், எ-று.

தீயபொன் வெள்ளி மூடந் தெக்கண வயண மாசி
யாய்தரு பிறந்த நாட்க ளட்டம ராசி நாட்கள்
காயசோ மகஞ்செய் யார்கள் தொன்மணம் புணர்க்க வாண்டு
தாய்மரு கருப்பை நாளு மயிரணை நாச னுரி.

(இ-ள்.) சுக்கிரன் பிரகஸ்பதி பிரகாச மில்லாதநாளும் தெக்ஷணாயனத்திலு மாசிமாதத்திலும்பிறந்த நாட்களினும் விவாகம் பண்ணினவாண்டுக் தன்னிட ஸ்திரீ கெற்பமுண்டான நாளும் மயிர்வினைகளையப்படாதன, எ-று. 94

பல்விளக்க நாள்.

காறியற் காகுந் திங்க ளுதையஞா யிற்றுக் குள்ள
சீரிய மறையோர்க் காகுஞ் சேயவன் வேந்தற் காகுங்
காரிசூத் திரற்காம் வெள்ளி பிறந்தவர் தங்கட் காகா
வீரவேற் கண்ணா யின்னாட் பல்லுகிர் விளங்குந் நாளே.

(இ-ள்.) திங்கள் ஸ்திரீகளுக் காம், ஞாயிறு பிராமணற்காம் செவ்வாய் க்ஷத்திரற்காம், சனி சூத்திரற்காம், வெள்ளி பிதிற்களுக்கு விளக்கப்பட்டன சவுளத்துக்குச் சொன்ன காலங்களிலே பல்லுமூகிரும் விளக்குவது, எ-று. 96

சரஸ்வதி யோகம்.

விளங்கிய கதிரோன் மேவ மேதைமூ வைந்து பாகை
இளங்கொடி தன்னி லெய்த விந்துவெய் யோனு திப்பத்
தனங்கொள்மாற் கிழமை வந்தாற் சரஸ்வதி யோக மாகுங்
குளங்கொடி ரன்ன மென்று கொடுப்பிக்க நாம கட்கே.

(இ-ள்.) ஆதித்தன் கன்னியிலேநிற்க, புதன் கன்னியில் கரு-ம் பாகையில் நிற்க, சந்திராதித்த ருதையமாக புதன்கிழமை வந்தவன்று சரஸ்வதியோகமென்று பெயராம், அற்றைநாளிற் கருப்பங்கட்டியும் பாற்சோறுமாய்க் பணபதியையுஞ் சரஸ்வதியையு மமுதுசெய்விக்க எல்லாவித்தையு மெய்தும், எ-று. 96

வித்தியாரம்பம்.

மகவினுக் கைந்திற் பெண்ணை மாவிரு பூசஞ் செங்கை
யகலிய வேணை மாதி மூன்றத்த மாதி மூன்று

பகருமுத் திரங்கள் தோணிப் பார்நல விருத்தைப் பன்மூன்
றிகலுமெட் டுவாவி ராறு நீக்கிமே லினிது கூறே

(இ-ள்.) பிள்ளை ஐந்து வயதுக்கு புகுந்தவாரே உத்தராயணம் பிறந்தவாரே ஆசாரியனைப் பூசித்து வித்தியாரம்பந் துவக்குவது, அநுஷ மசுபதி புநர்பூசம் பூசந திருவாதிரை, திருவோணம், அவிட்டஞ், சதையம், அத்தஞ், சித்திரை, சோதி, உத்திரட்டாதி, உத்திரம், ரேவதி, ரோகணி இவை நல்லது இருந்தை திரயோதசி அஷ்டமி உவாவும் துவாதசியும் விலக்கப்பட்டன, எ-று. 97

கூறிய சனிசெய் வாரம் நிலையோரை கொள்ளார் திங்கள்
ஏறிய பத்து மாறு டீராரே ழிபம்பார் புந்தி
சீறுடு மாறில் வெள்ளி யாறேழெட் டனைத்துந் தீபர்
வாறுபன் னொன்று மூன்று பாபர்நன் ருகு மாய்ந்தால்.

(இ-ள்.) சனி செவ்வாயும், ஸ்திர ராசிகளும் விலக்கப்பட்டன, திங்கள் ௰-மிட முதையம், ௬-௰௨-௭-மிடம் பொல்லான், புதன் ௬-மிடம் பொல்லான், வெள்ளி ௬-௭-மிடம் பொல்லன், அ-மிடத்து எல்லாருந்தீயர், பாபர்-௬-௩-௰௧-மிடம் நல்லரென்க, இனி யொன்று சிற்பித்தவனல் சத்த சாஸ்திரஞ் சாமுத்திய சாஸ்திரங் காந்தருவ நீதி சாஸ்திர மிவை யீற்றுக்குப் புநர்பூசம் நன்று, ஆயுர்வேதாகஞ் சர்வசாஸ்திர மிவையீற்றுக்கு மவிட்டம் நல்லது, சோதிட சாஸ்திரத்துக்கு சோதி நல்லது, கூபசாஸ்திரத்துக்கு மதற்க சாஸ்திரத்திற்குந் திருவாதிரை நல்லது, அசுபசாஸ்திரத்துக்கு அசுபதி நல்லது கன்ம சாஸ்திரங்களுக்குத் திருவோணம் நல்லது, யோகசாஸ்திரத்துக்கு சதையம் நல்லது, எ-று. 98

உப நயனம்.

ஆய்ந்தமுப் புரிநூ லேழி லணிபுநா டௗனு மத்தம்
வாய்ந்தவுத் திரங்கள் சோதி மான்றலை யுரோணி வாசி
எய்ந்தசித் திரை பூசங்கள் தேணிநன் றிருத்தை யெட்டுங்
காய்ந்தபன் னொன்று பத்து முதலுவாக் கழிமுற் பக்கம்.

(இ-ள்.) ஏழாவது வயதில் உபநயனம் பண்ணுவது அநுஷம் அத்த, உத்திரங்கள் ௩-ம், சோதி, மிருகசீரிடம, ரோகணி, அசுபதி, சித்திரை, புநர்பூசம், ரேவதி இவைநன்று. பக்கங்களில் ரித்தையு, மஷ்டமி, ஏகாதசி, பிரதமை, உவா விலக்கப்பட்டன. எ-று.

பக்கம்பின் னைந்து பின்பு பாபர்தம் வார வோரை
தெக்கண மயனந் திங்கட் குடையன செம்பொன் புந்தி
சுக்கிர னிற் சோமன் றேற்றமு மீரா றெட்டிற்
புக்கவ ரேழின் மூன்றி லாறுபன னென்று பொல்லார்.

(இ-ள்.) அமரபக்ஷத்துப் பஞ்சமிக்குப் பின்பு பாபவாரங்களி லும் அவருடைய ராசிகளிலும் தெட்சணாயனமும் சந்திரனுக்கு டையன வியாழமும் வெள்ளியும் ௬-மிடம் நல்லர், ௯-மிடத்துக்குச் சந்திரனுதையமும், ௧௨-மிடமிம் பொல்லான், ௮-மிடத்தில் எல்லா கோளும் விலக்கப்பட்டன, ௩-௬-௧௧-மிட பாபர் நல்லார். எ-று.

பொல்லாத யோகம் விட்டி விதிபாதம் புகர்பொன் மூடஞ்
சொல்லாத கரணங் கம்பஞ் சூனியந் தூக ணங்க
ளில்லாநாட் பிறந்த நாட்கள் பொல்லாநா ளிவையொ ழித்து
நல்லார்க ணோக்க முந்நூல் சேர்த்தினன் மறையி னுலே.

(இ-ள்.) பொல்லாதயோகங்களும், விஷ்டியும், விதிபாதமும், சுக்கிர பிரகஸ்பதி மூடங்களும், சூனியம், ஸ்தூகணம் குருட்டுநா ட்பிறந்த நாட்களொழித்து பொருந்தாதநாள் தவிர சுபக்கிரகங்கள் நோக்குண்டாக ஆகாய நிர்மலமாகக் கொள்வது. எ-று. 101

வாகன மேற்றல்.

நான்மறை யதனுற் சிங்க ஞாயிற்றில் மூன்று வாவில்
தானமர் தருநா ளோணந் தையல்ஞா யிற்று வாவி
லூனமி லத்தஞ் சோணு ளோங்குவா கனஞ்சேய் மீன
மானநா யமிர்த நாளில் மயிர்தனைக் குரைத்தல் மாண்பே.

(இ-ள்.) ஆவணிமாதத்திலே பௌரணையோடு கூடின வோண மும் புரட்டாசிமாதத்தில் அத்த அவிட்டமுங் கூடின பௌரணை மீனத்தில் செவ்வாய்நிற்க உவா கர்மத்துக்கு தந்தான் சுபக்கிரகங் களிலே சவுளத்துக்குச் சொன்ன காலங்களிலே வாகனங்கொள்வது

சமாவர்த்தனம்.

மாண்படை யோண மத்த மகசிர மனுஷம் பண்டி
காண்பரு முத்தி ரங்கள் பூசங்கள் கடைமீன் நன்றாந்
தீண்டரு மிருத்தை யொட்டோ டுவாமுதற் சனிசேய் திங்கள்
கூண்டதேள் மேடமெட் டிற் கோளொழி குளிக்கக் கோதாய்.

(இ-ள்.) திருவோணம், அத்தம், மிருகசீரிடம, அனுடம், ரோ கணி, உத்திரம்-௩, பூசங்கள்-௨, ரேவதி இவை நல்லது ரித்தை

அஷ்டமி, உவா, பிரதமை, சனி, செவ்வாய், திங்கள், விருச்சிகம், மேஷ மிவையாகாது. அஷ்டமசுத்தி யுண்டாக ஆகாச நிர்மலமாக 103
சமாவர்த்தனங் கொள்வர். எ-று.

முடிசூட்டல்.

கோதில்மான் றலையு ரோணி குதிரையுத் திரங்க ளத்தஞ்
சோதிசித் திரைபூ சங்கள் தொணியோ டனுட மோண
மேதமி லவிட்டம நன்று மிரண்டைந் தேழ்பன்மூன் றீரா
ரோதியி மூன்றும் பக்க முயர்முடி சூட்டல் நன்றே.

(இ-ள்.) மிருகசீரிடம், ரோகணி, அசுபதி, உத்திரம்-ங, அத்தஞ், சோதி, சித்திரை, புநர்பூசம், ரேவதி, அனுஷம், திருவோணம், அவிட்ட மிவை நன்று. பக்கங்களில் துதிகை, பஞ்சமி, சத்தமி, திரயோதசி, துவாதசி, திரிதிகை இவை நன்று. எ-று.

நன்றுநற் கோட்கள் வார மங்கிசம் நவிலு மோரைக்
கன்றிய தீக்கோட் டீது கன்னியுந் துலாமு மாகா
வன்றிரல் முடிசூட் டோரை யுடையவாள் கோளை நற்கோள்
நின்றிடி னுறவு நன்று நோக்கிட வறிவுண் டாமே.

(இ-ள்.) இவர்கள் நட்சத்திர ஹோரைகளிலும் சுபவாரங்களிலுங் கன்னி துலாமொழிய நன்று, அபிஷேகஞ் செய்கிறபோது திக்கிற ராசியுடையகோளை நற்கோள் மித்திரஸ்தானத்தில் நின்றுநோ
க்கில் பந்துக்களை யுடையதாம். எ-று. 105

உண்டாய உச்சம் நின்ற கோளுச்ச நோக்கு மாகில்
கொண்டா னென்பிறநா டெல்லாம் கோளவை நீச நன்று
தண்டாது நீச நோக்கிற் சால நோய் கொண்டு சாவர்
பண்டாவுமொழியாய்வெய்யப் பகைநோக்கிற் பகையாம்பாரே.

(இ-ள்.) அபிஷேகஞ் செய்கிறவன் ராசியுடையகோள் உச்சஸ்தானத்திலே நின்று உச்சஸ்தானத்துசகோளை நோக்குமாகில் பிறநாடெல்லாங் கொள்ளுமென்பது, அந்தக்கோள் நீசக்கோளை நோக்குமாகில் நோய்கொண்டு மரணமென்பது, சத்துரு ஸ்தானத்திலே நின்று சத்துரு ஸ்தானத்தின்கோளை நோக்குமாகில் சத்துருக்கள்
பலருமுண்டாம். எ-று. 106

பார்த்திடிற் றீக்கோ ளாறும் பன்னொன்று மூன்றும் நல்லர்
சிற்றவேழுதைய மைந்துஞ் சிறந்தபன் னொன்றோ டொன்பான்

ஏற்றநற் கோள்கள் நன்று மெட்டிட மெல்லாம் பொல்லா
ராற்றலை யுடைய மன்ன ரணிமுடி சூடு நாளில்.

(இ-ள்) பாபர் ௩-௬௧௧-ம் நல்லர், சுபர் ௪-உதைபம் ௫-௯௧-௩ நல்லர், அஷ்டமத்திலெல்லாரும் பொல்லார், இந்த சுபதினத்தில் முடிசூட்டல் நன்று. எ-று. 107

விவாகம்.

சூடிய மணநாள் மூல மிரேவதி மகமண் சோதி
யோடுமான் றலைய ரோணி யனுடமுத் திரங்க ளத்தங்
கூடுநன் றுவானி ருத்தை யட்டமி கொடியோர் வார
மாடிமார் கழிபு ரட்டை மாசிதீ தன்ன மன்னுப்.

(இ-ள்.) மூலம், ரேவதி, மகம், திருவோணம், சோதி, மிருகசிரீடம், ரோகணி, அனுஷம், உத்திரம்-௩ அத்த மிவைநன்று உவாரித்தை, அஷ்டமி, சனி, செவ்வா, ஞாயிறு, ஆடி, மார்கழி, புரட்டாசி, மாசி விலக்கப்பட்டன, எ-று. 108

அன்னமே மிதுனங் கும்ப மலவனே யிடபம் வில்லு
கன்னிகோல் நன்று பன்னொன் றுறுமூன் றினிய தீக்கோள்
பொன்னவ னெட்டிற் றீயன் புகர்புத னறெட் டாக
ரன்னவ ரேழற் றீயர் மதிநல்ல னிரண்டில் மூன்றே.

(இ-ள்.) மிதுனம், கும்பம், கடகம், ரிஷபம், தனுசு, கன்னி, துலா மிவைநன்று. ௧௧-௩-௬-மிட பாபர் நல்லர், வியாழம் அஷ்டமத்தில் பொல்லான், வெள்ளி புதன் ௩-அ-ல் பொல்லார், எ-மிட மெல்லாருந்தீயர், சந்திரன் உ-௩-ல் நல்லன். எ-று. 109

அக்கினி பரிகிரகிக்க.

மூன்றரே முத்தி ரங்கள் சித்திரை முற்பார் வோணி
மான்றலை யாரல் நாளில் மகரமீன் கடகங் கும்ப
மேன்றசேய் சனியி ருத்தை யிவைபெழிற்றெழிற்கோனோக்க
வான்றநூன் மறையோ ரேத்த வங்கைக் கொள்ள லாமே.

(இ-ள்.) உத்திரங்கள் மூன்றுஞ் சித்திரை, விசாகம், ரோகணி ரேவதி, மிருகசிரிடம், கார்த்திகை இவை நல்லது, மகர, மீன, கடக கும்பஞ், செவ்வாய், சனி, உவையாங்கம், ரித்தை யிவை சுபக்கிரகங்கள் நட்பாட்சி யுச்சத்து நின்று நோக்க விசேஷிந்துள்ள மறையோர் அனுக்கிரகிக்க அக்கினிபரிக்கிரகம் பண்ணுவது. எ-று.

பூமி தரிசனம்:

ஆதிரை பரணி மூல மனுடமுத் திரங்க ளோணஞ்
சோதிசித் திரையே பூச மகமிவை தய்ய பக்கந்
தீதுபத் திரையோ டொன்பான் செங்கதிர்க் காதி வாரம்
மாதுநே ளிடபந் தய்ய மறியெழ வயல்செய் பாரே.

(இ-ள்.) திருவாதிரை, பரணி, மூல, மனுஷம், உத்திரமூன்றுங், திருவோணம்; சோதி, சித்திரை, பூச, மகமிவைநன்று. பத்திரை நவமியுந்தீது. ஞாயிறு, சனி பொல்லாது கன்னி, விருச்சிகம் ரிஷப, மேஷ, மிதுன, மீன மிவைநன்று, அஷ்டமத்திதி யுண்டாக பூமிதரிசனம் பண்ணுவது. எ-று. 111

கிருஷியாரம்பம்.

பார்கிழக் குத்தி ரங்கழ் படவிரு பூச மத்தஞ்
சீரிய வாகு மொன்பா னிரட்டித்த பக்கந் தீதாங்
கூறிய மகர நண்டு குண்டைமீன் மிதுனம் நன்றாங்
காரிருங் கதிருந் தீதாஞ் செய்யுக கருது வாற்கே.

(இ-ள்.) ரோகணி, மூலம், உத்திரங்கள்௩-ம், ரேவதி, புநர்பூசமத்த மிவைநன்று. நவமியு மிரட்டித்தப் பக்கங்களுமாகாது இராசிகளில் மகர, கடக, ரிஷப, மிதுன, மீன மிவை நன்று. சனி ஞாயிறு ஆகாது. பூர்வபக்ஷத்திலே யோகாக்கிர சித்தனைப் தானஞ்செயது சில புஷ்பங்களினாலும் நீராலும் பூமியை அர்ச்சித்து கிருஷியாரம்பஞ்செய்வது. எ-று, 112

எருவிட.

கருதுமுத் திரங்கள் மூன்றுங் கரும்பனை புநர்தம் பூசம்
பொருவில்சித் திரையே செங்கை பொன்றிங்கள் செவ்வாய் பு
யெருயிட நல்லவாகு மிருத்தை யெட்டு வாவுந் தீதாந் [ந்தி
திருவநா யுழுவான் சொன்ன காலமே யெருவுஞ் செய்யே.

(இ-ள்.) உத்திர மூன்றும், அனுஷம், புநர்பூசம், பூசஞ், சித்திரை, திருவாதிரை இவை நன்று, வியாழன், தங்கள், செவ்வாய், புதன் இவை நன்று, இருத்தை அஷ்டமி, உலாவப் பொல்லாது, உழவுக்குச் சொன்ன முகூர்த்தங்களிலே யெரு யிடுவது, எ-று. 113

விதைக்க.

செப்பிடு மூல மத்த மிரேவதி யனுடந் தீபந்
தப்பிலுத் திரங்க ளோண மகமுறஞ் சதையம் பூச

மொப்பிலா வுரோணி யிந்நா ளுத்தமம் புனர விட்டம்
ஐப்பசி மகரசி ரங்கள் மத்திமம் விதைய ணங்கே.

(இ-ள்.) மூலம், அத்தம், இரேவதி, அனுஷம், சோதி, உத்திர மூன்றும், திருவோணம், மகம், விசாகஞ் சதையம், பூசம், ரோக ணி இந்நாட்களுத்தமம், புநர்பூசம், அவிட்டம், அசுபதி, மிருசீரிட ம் மத்திமம், எ-று. 114

அணங்குரேக ளஞ்சேழ் பன்மூன் றமைத்தபன் னொன்று மாகு
மிணங்குமுன் னுவாவு நன்னு மீரைந்து மிரண்டு மாறுங்
குணங்களிமக் கிமமாங் குன்டை நண்டரி மகர மீனம்
வணங்குநன் றென்று வீணை குடந்துலாஞ் சமம் வருத்தே.

(இ-ள்.) பஞ்சமி, சத்தமி, திரையோதசி, ஏகாதசி, திரிதிகை, பூரணை, இவை உத்தம்; தசமி, துதிகை, சஷ்டி இவை மத்திமம்; ரிஷபம், கடகஞ், சிங்கம், மகர மீன மிவை உத்தமம்; மிதுன, கும்ப துலா மிவை மத்திமம்; எ-று. 115

வழுக்கிடில் நற்கோள் வார வுதையநன் றெட்டிற் கோளைக்
கழுச்சிடு மருக்கன் வாரங் காலமே நெல்லை விக்கு
வொழித்திடிற் சனியின் வார வுச்சியி லெல்லை வித்து
கொழித்தசெய் வாரம் வித்தக் கொள்ளுடன் வரகு வித்தே.

(இ-ள்.) நற்கோள்வாரம் நன்று தீப்கோள் வாரந் தீது, அ-ம் இடக்கி லெல்லாருக் தீபர், ஞாயிற்றுக்கிழமை உதையத்திலே நெல் லை விதைக்கலாம், சனிக்கிழமையி லுச்சியில் எள்ளை விதைக்கலாம், செவ்வாய்க்கிழமை யுதயத்திலே கொள்ளும் வரகும் விதைக்கலாம்.

கூறிய முதல்நாள் நன்று கரும்பிடக் கொடிக்காற் காயி
லேறிய மூலம் நன்று மெள்விதைக் கனுடஞ் செக்காம்
மாறிலா மரங்கள் வைக்க வுரோணி யாம் வழுதலைக்குந்
தேறிய பரணி நன்றுஞ் சித்திரை பயறு வித்தே.

(இ-ள்.) கரும்பிட அசுவதி, கொடிக்காலுக்கு ஆயிலியம், மூலம் எள்ளுக்கு அனுடஞ், சதையம், மரம் வைக்க உரோகணி, வழுதலை வைக்க பரணி, பயறுக்கு சித்திரை, இந்நாட்களில் இப்பயிரிடுவது.

கதிரறுக்க.

வித்தக மகமு ரோணி விசாகமா திரையோ டாணம்
மத்தமே பரணிச் சால மழகிதா மிருத்தை யாகா

வொத்தபொன் றிங்கள் புந்தி யுதையவா ரங்கள் நன்றுங்
குந்துமே றரிதேள் நண்டு குடங்கதி ருக்க நன்றே.

(இ-ள்.) மகம், ரோகணி, விசாகம், திருவாதிரை, திருவோணம், அத்தம், பரணி இவைநன்று; ரித்தை யாகாது, வியாழம், திங்கள், புதன் இந்த வாரங்களு மிவர்க ளுதையங்களும் நன்று; ரிஷப சிங்க விருச்சிக கற்கடக கும்ப மிவை கதிரறுக்க நன்றென்பது.

நவபோசனம்.

நன்றிரு பூசம் பார்மா னல்கல மோண்புட செக்கு
ஒன்றிய நவ்வி மூல முறம்பனை யுத்தி ரங்கள்
துன்றுசித் திரையைந் தானஞ் சுபரின்பம் புதிதூண் டூய்தாங்
கன்றுவா விருத்தை மீன்தேள் மறிதர்க்காந் தட்கை யாய்வர்.

இ-ள். புநர்பூசம், பூசம், ரோகணி அசுபதி, இரேவதி, திருவோணம், அவிட்டஞ், சதையம், அத்தம், மூலம், விசாகம், அனுடம், உத்திரங்கள் ந-ம் சித்திரை, மிருகசீரிட மிவை நன்று; நற்கோள்வார வுதையங்கள் நன்று; இருத்தை உவா மீன விருச்சிக மேட மிவை தவிர மற்றுள்ளவை யெல்லாம் நவபோசனத்துக்கு நன்று; கதிரறுப்பாரு மிதுவே காலமாகக் கொள்வர், எ-று. 119

தானியமிட்டு வைக்க.

கைவரு மத்தஞ் செங்கை மகமுரு ளனுலங் கங்குற்
பொய்யி லுத்திரங்க ளோண மகசிரஞ் சனிபொன் வாரந்
தைடல்மா விருத்தை விட்டி சராசி யொழித்தா லாகிற்
றைபலாய்க் குளியந் தன்னில் தாளமை தானியந் தான்

(இ-ள்.) அத்தம், திருவாதிரை, மகம், ரோகணி, அனுட்டம், பரணி, உத்திரங்கள் ந-ம், திருவோணம், மிருகசீரிட மிவைநன்று. சனி வியாழம் நல்லது. ரித்தை, சஷ்டி, சராசியுந்தீது மற்றுள்ளவை யீற்றில் குளியனிலே கர்ப்பிணியாவது கன்னிகையாவது தானியமிட்டு வைப்பது, எ-று. 120

தானியம் வாங்க.

தாஉபா வத்தஞ் சோதி சதையமுத் திரங்கள் விட்ட
மூனமில் விசாகந் தோணி யுருளிரு பூச மோண
ரானசித் திரையைத் தான மனுடநாள் மகமூ லத்தில்
வானுறை சனிபொன் கூடில் வைத்ததா னியங்கள வாங்கே.

(இ-ள்.) அசுபதி, அத்தம், சோதி, சதையம், உத்திரங்கள்-க அவிட்டம, விசாகம், இரேவதி, ரோகணி, புனர்பூசம், பூசம், திருவோணம், சித்திரை, மிருகசீரிட, மனுட, மக, மூலமிவை நன்று. சனி, வியாழம் நன்று இவர்கள் உதைய காலங்களிலே வைத்ததான்யம் வாங்குவது. எ-று, 121

தனுசு யிறுக்க.

வாங்கிய தனுசு விட்ட மருவிய விருத்தை நந்தை
யோங்கிய சனிபொன் வார யுதையத்துக் குளியன் கூட
சீஞ்சுறு மனுட நாளி லிருகாலிற் றிங்கள் சேர
வாங்கவன் தன்னைக் கோட்கள் நோக்கிடி லழகி தென்றார்.

(இ-ள்.) தனுசு, அவிட்டம், ரித்தை, நந்தை இவர்கள்பக்கமாக அனுட மிரண்டாஸ்காலிலே சந்திரனிறை அசசந்திரனை கிரகங்கள் நோக்க அந்நாளிலே தனுசுயிருகக பிலலைத் தனுசு கொள்ளார்.

யாத்திரை.

ஆரலே யாதி யேழ்நாள் நந்தைசேய் கிழக்காந் தெற்குச்
சீரிய மகத்தோ டேழ்நாட் பத்திரை சனிசேய் திங்கட்
சாறுமேற் கனுட மாறு சயைபுதன் குருவ டக்கும்
பூரணம் விட்டமேழ் நாட் புகர்கதிர் நனறு போக்கே.

(இ-ள்.) கார்த்திகை முதல் ஏழுநாளும் நந்தையும் செவ்வாய்க்கிழமையுங் கிழக்குப்போகலாம். மகமுதல்லழுநாளும் பத்திரையும் சனி திங்கள் தெற்குப்போகலாம், அனுடமுத லாறுநாளும் சயையும் புதன் வியாழமும மேற்குப்போகலாம், அவிட்டமுத லேழுநாளும் பூரணையு மமாவாசையும வெள்ளி ஞாயிறு வடக்கு போகலாம்

யாத்திரைக் காகாதநாள்.

போக்கினிற் பரணி யார லாதிரை பூர முன்றுந்
தீக்குமா யிலியங் கேட்டை சித்திரை விசாகஞ் சோதி
யாக்கிய மக மிருத்தை யாதியட் டமியு மாக்கள்
நீக்கிடு மருக்கன் சேய்மால் நிலையோரை நினைக்க லாகா.

(இ-ள்.) பரணி. கார்த்திகை, திருவாதிரை, பூரம் ங-ம், ஆயிலியம், கேட்டை, விசாகம், சோதி, மக, மிருத்தை பிரதமை, அட்டமி, உவாக்கள்; ஞாயிறு, செவ்வாய், புதன் ஸ்திரராசியும் யாத்திரை விலக்கப்பட்டன, எ-று. 124

நினைவுறு விட்டி வில்லு விதிபாதம் நெடிய வட்டந்
துனிவுறு கிராணஞ் சூலந் தூயசங் கிராந்தி தூமம்
வனிதைகே ளிடித்தல் மின்னல் மழைபெய்த விமறல் தும்மல்
இனையன செய்யப் போகி லெய்திடு நாச மெல்லாம்.

(இ-ள்.) விட்டி, வில்லு, விதிபாதம், பரிவேடம், கிரகணம், சூலம், சங்கிரமம், தூமம், இடித்தல், மின்னல், மழைபெய்தல், விட றல், தும்மல் இவையெல்லாம யாத்திரைக்கு விலக்கப்பட்டன.

சன்மராசியில் யாத்திரை.

எல்லையிலி யாத்தி ரைக்கங் கேகுவா ராசிக் காறிற்
சொல்லிய மூன்றே டொன்பான் பதினொன்று சுகத்தை நல்கு
மல்லல்சேய் பகையைக் கோலி லாங்கவ னிராசிக் கெட்டிற்
செல்லிடிற்பகையைக்கொன்று திரும்பித்தன்பதியைச்சேரும்.

(இ-ள்.) தன்னுடையவிராசிக்கு ௩-௬-௯-௧௧ போகில் சுகத்தை யுண்டாக்கும் சத்துருவை செயிக்கப்போகில், அவனுடைய இராசி க்கு அ-ம் இராசியிலே புறப்படில் சத்துருவைச் செயம்பண்ணி சுக மேவுரு மென்பது தன்னுடைய விராசிக்கு ௧௨-ம் இராசியு மஷ்டம விராசியும் புறப்படில் சரீரவாதை யுண்டாகும். எ-று. 126

பதியிடை நற்கோ ளெங்கும் நன்றைந்திற் பலரும் பொல்லார்
மதியிரண் டெட்டு நாலோ டொன்ப தீராறு மாயக்குந்
திதியுடை வெள்ளிதீய னைற்றீயக் கோள்கள் பதநுங்
கதியுடை மூன்று மாறும் பதினொன்று மினியர் காணே.

(இ-ள்.) நற்கோள் உதையாங்கம் நன்று ரு-மிட மெல்லாரும் பொல்லான் சந்திரன் ௨-அ-௪-௯-௧௨-மிடந் தீபன், சுக்கிரன் எ-மி டம் பாபர் ௩-௬-௧௧-மிடம நல்லர், எ-று. 127

சமுத்திர யாத்திரை.

காண்டகு குதிரை விட்டங் கலம்பணை யத்தஞ் சோதி
தூன்றுமான் றலைபோ டோணந் துலையெழக் கடலிற் போகி
லீண்டிய நிதியு மெய்து மெழிற் புகர் புந்திவார
மாண்டசீர் பிரட்டை யாடி மாசிமா தமுமா காதே.

(இ-ள்.) அசுபதி, அவிட்ட, ரேவதி, அனுஷ, அத்த, சோதி, மிருகசீரிட, திருவோண மிந்நாட்களிலே துலாமுதைபமாகு முன்பு சொன்ன வாரங்களிலே சமுத்திர யாத்திரை மிகவும் நன்று. வெள் ளி, புதன், புரட்டாசி, மாசி, ஆடியும் யாத்திரை விலக்கப்படும்,

மாடு முதலானவை கொள்ள.

மாதராய் பரணி கேட்டை சித்திரை சதையம் வன்மை
சோதியுத் திரங்க ளாயி லாதிரை புந்தி சுங்க
ணேதுவா விருத்தை யெட்டிற கோளெழுந் தொழிந்த நாளில்
மீதறி கருவிற கன்னி கோலொடு யிவைக ணன்றாம்.

(இ-ள்.) பரணி, கேட்டை, சதயம், அத்தப், சோதி, உத்திரங்கள் ௩-ம, ஆயிலியம, திருவாதிரை, புதன், வெள்ளி, உவாவும் இருத்தை யிவையொழிந்துநின்ற நாட்களில் சிங்கம, மகரம், தனுசு கன்னி முகூர்த்தமாக அஷ்டமசித்தி யுண்டாக மாடு முதலானவை கொள்ளவுங் கொடுக்கவும நன்றென்றவாறு. 129

நட்சத்திர பட்சணம்.

யாத்திரை புரவி முன்னுடை பயறறஞ்சோ றெழிற்பாற் சாதம்
மாத்தயிர் நுரைதத வெண்ணெ மானினூ னுதிரம் பாகு
சீர்த்தநெய் பாலின் சோறு கிச்சிலி சென்னெற் சோறும்
வாய்த்தநற் சாதம் பாலின் வெம்பல வன்னச் சோறே,

(இ-ள்.) அசுபதி முதலாக உகள-நாளுக்கும் பக்ஷணம் பயத்தஞ்சோறு, பாலில்வெந்த இலைக்கறி, தயிர்நுரை, வெண்ணெ, மானிரைச்சி, உத்திரம, புடோல, நெய் பாற்சோறு, கிச்சிலி, சென்னெற் சோறு, இலைக்கறி, பாலிலவெந்த அப்பம், வன்னச்சோறு. எ-று.

வன்புகழ் நெல்லி மாவிற் கரைத்தநீர் முதிரை யெள்நீர்
கண்சிறு மூலந் தாது மாதளை தருப்ப ணத்தோ
டென்செந்நெற் கழுநீர் பூந்தேன் சர்க்கரை யேனத் தூன்பால்
கண்டகு பருப்பும் நாட்க ளனைத்துக்கு முணவு தானே.

(இ-ள்.) நெல்லிக்காய், மாக்கரைத்தநீர், கொள்ளு, யெள்ளு கழுவினநீர், சிறுமூலம், தாடிமம், தருப்பணம், செந்நெலரிசி கழுவினநீர், தேன், சர்க்கரை, பன்றிமாமிசம், பால், பருப்பு ஆக இருபத்தேழுங் கண்டுகொள். எ-று. 131

திதி பட்சணம்.

காணெருக் கரிசி நீர்நெய் கஞ்சியோ டுப்பிற் சேறு
பூணும்பொன்றேய்த்த நீர்தேன் புளித்தமா தளங்காய்தண்ணீர்
ஊனமாங் கோவி னீரோ டரிசிபாற் சோறு கட்டி
பூன்மதி யுதிதை மற்றை யுளுத்தஞ்சோ றாறும் பக்கம்

(இ-ள்.) திதிக்குப் பக்ஷணங் கொடுக்கும்படி பிரதமை முதலாக எருக்கிலை, அரிசிகழுவின நீர், நொய்கஞ்சி, உப்புச்சோறு, பொன்தேய்த்த நீர், தேன், புளித்த மாதளம்நீர், கோமூத்திரம், அரிசி, பாற்சோறு, சர்க்கரை, உதிரம், உளுத்தஞ்சோறு இவை திதிப்பக்ஷணம். 132

வார பட்சணம்.

பக்கணம் நெய்பாற் கட்டி பயறுமெட் டயிறு நெல்லு
முற்கமே கிழமைக் கூணும் விரும்புநெய் யெட்பாற் கட்டி
திக்குண லினுக்கு முணுஞ் சிறுகால் பால்தயிறு மூச்சி
யொக்குமெள் ளந்தி சந்தீத னள்ளிரு ளுணவா மன்றே,

(இ-ள்.) நெய், பால், சர்க்கரை, பயறு, எள்ளு, தயிர், நெல்லு இவை ஞாயிறு முதலாக ஏழு வாரத்துக்கும் நிறைபாக வறிகது கொள்வது நெய், எள்ளு, பால், சர்க்கரை திக்கு நாலுக்கும் நேரே நிறையாக அறிவது கிழக்கு முதலாகப் பொழுது நாலுகருஞ் சிறுகாலே பால் உச்சிக்குத் தயிர் அந்திக்கு எள்ளு மத்தியானத்திற்குத் தேன் ஆகயிற் தடைவே பட்சித்துப்போவது பட்சிக்கவொண்ணாதவை தரிசித்துப்போவது காணக் கிடையாதவை நினைத்துப் போதவென்றவாறு. 133

வார அடியாற் செய்யும் வகை.

அன்றடி பதிதொனன் றின்சொ லருக்கற்கே ழறைதிங் கட்கு
ஒன்றிய கிடைசேயக் கொன்பா னீறசுற் றேழ்மால்நீ ரார்த்தல்
பொன்றனக் கெட்டில் மாற்குச் சந்தணி புகற்கைம் முக்கால்
கன்றிய சுள்ளி கிள்ளிற சனிக்கஞ்சிற் கரும்பு சூடே.

(இ-ள்.) ஞாயிறுக்கு கக-அடியிலினியவார்த்தை சொல்லிப்போவது, திங்களுக்கு எ-அடியிற் கடந்துபோவது, செவ்வாய்க்கு கூ-அடியில் நீர்சுற்றிப்போவது, புதனுக்கு எ-அடியில் நீரிட்டுப்போவது, விபாழத்துக்கு அ-அடியில் சந்தனம் பூசிப்போவது, வெள்ளிக்கு ரு-முக்கால் அடியில் சுள்ளிகிள்ளிப் போட்டுபோவது, சனிக்கு ரு-அடியில் கரு புசூடிப்போவது இவை யெல்லாங் காரியசித்தத்துக்குத் தக்கபடிசெய்து போவதென்றவாறு. 184

சூழ் திசை வடக்காலச் சுடருச்சி கிழக்குத் தென்பால்
வீழ்தரு மாலை மேற்கு நள்ளிரா விரையப் போகில்

வாழ்பெருங் கிளை ஞாங்கி மறைபவர் தமை வணங்கித்
தாழ்வில்கோள் நோக்கப் போகிற் சமைந்திடுங் கருமந் தானே

(இ-ள்.) வடகதுப் போகில் உதையத்துக்கு முன்பும், கிழக்கு உச்சிக்குப் பின்பும், தெற்கு அந்திப்பொழுதிலும் மேற்கு அர்த்த ராத்திரியிலும், போகும்போது தன்னுடைய பந்துக்களையும் அக்கினியையும் பெரியோரையும் நமஸ்காரம் பண்ணி சுபக்கிரகங்கள் நோக்கப்போவ தென்றவாறு. 135

எண்ணெய் வார்க்க.

கருதுமுற் பிறந்த நாட்கள் கதிர்புகர் பொன்சேய் கேட்டை
பொருவுமுக் திரங்க ளோணம் பூரமா கிரைபன் னான்குந்
தகுழுவர் வாரெட் டீலை றென்றுசங் கிரந்தி யெண்ணெய்
பரிசியா னேயர் பாலர் விருத்தற்குக் கால மில்லை.

(இ-ள்.) ஜென்மநக்ஷத்திரங்களும் ஞாயிறு, வெள்ளி, வியாழம் செவ்வாய், கேட்டை, உத்திர மூன்றுந் திருவாதிரை சதுர்த்தசி, உவர், சஷ்டி, அஷ்டமி, துவாதசி, பிரதமை, சங்கிரமகால மிவை யெண்ணெய் வார்க்கலாகாது, வியாதியாளர்க்கும், விருத்தற்கும், பாலற்குங் காலமில்லை, எ-று. 136

பதாபிஷேகம்.

காலமா யிரத்தெட் டிங்கள் கழிந்தபி னத்த மோணஞ்
சாலுமுத் திரங்கள் தோணி சதையநாள் மகமே ரோணி
மேலுமுத் தராய னத்து மிசைந்தநற் கிழமை யெய்துஞ்
சீலமா தங்க டன்னிற் செய்சதாபி ஷேகந் தானே.

(இ-ள்.) ஆயிரத்தெட்டு மாதஞ் சென்றபின்பு அத்தம், திருவோணம், உத்திரங்கள் ந-ம் ரேவதி, சதையம், மகம், ரோகணி, நற்கோள் வாரங்களிலே சதாபிஷேகஞ் செய்வது, எ-று. 137

சிரார்த்தம்,

தானமாம் பரணி யோணஞ் சதையமான் றலைபூசங்கள்
மான்மகம் பூச மத்த மாதிமூன் றனுடம் விட்டம்
போனபிற் பக்க மைந்தில் மேன்மாட புரட்டை தன்னிற் [யே
றேன்மொழி தெள்ளி நந்தை யொழித்துநற் சிரார்த்தஞ் செய்

(இ-ள்.) அசுபதி, பரணி, திருவோணம், சதையம், மிருகசீரிட மும்பூரங்கள், மகம், பூசம், அத்தம், சித்திரை, சோதி, அனுடம்,

அவிட்டம், அமரபட்சத்து பஞ்சமிக்கும் பின்பு மாசி, புரட்டாசி மாதங்களிலே வெள்ளியும் நந்தையு மொழிப சிரார்த்தம் பண்ணு வதென்றவாறு. 138

செப்பவன் மனைவி மக்கள் சென்மமூன் றிருபத் தேழு
மையமி லதுநான் காறு லட்டம ராசி யாக
வெய்துமட்டமியோன் பானிற் கேட்டையேழ் பரணி பன்மூன்
றையமில் மகன்பின் போது சிராபய மாந்துகொள்ளே.

(இ-ள்.) சிரார்த்தம் பண்ணுகிறவன் சென்மத்திரியங்களும் பாக்கிய புத்திரருடைய சென்மத்திரயங்களும் கர்த்தாவினுடைய ௪-௬-ம் நாளும் அஷ்டராசியும் இவை விசேஷிக்க விலக்கப்பட்டன அஷ்டமி நவமியுடன் கூடின கேட்டையுஞ் சத்தமியுடன் கூடின பரணியும் திரயோதசியுடன் கூடின மகமும் இவை மிகவும் நல்லது என்பது அபராயனத்திலே சராசியாதல் உபயமாக கொள்வது.

அஷ்டகை.

கொள்விருத் தச்சி ரார்த்தங் குறிக்குசங் கிராந்தி தீர்க்கந்
தெள்ளுவா வாகும் பின்னுந் தென்புலக் கவர்கட் செல்லா
மெள்ளுநக் காலநாள் நாதை பத்திரை யிரோழ் காரி
வெள்ளியிந் துதைய மேகா தசியிற் கோள் விரும்பார் மேலோர்

(இ-ள்.) சங்கிராம காலங்களிலும், தீர்த்தகாலங்களிலும் விருத்த சிரார்த்தம் பண்ணுவது பிதிர்க்களுக்கு முக்கால் நாட்களும் நந்தை, பத்திரை, சதுர்த்தசி, சனி, வெள்ளியும், சந்திரோதயம், பூர்வபட்ச மல்லாதவை யீற்றிலே பாபக்கிரகம் நோக்க ௧௧-மிடஞ் சுத்தமாகக் கொள்வது மிக்கோரென்று சிறப்பித்தவனுல் மாசி, புரட்டாசி மாதங்களிலே அமரபட்சத்து சஷ்டியில் சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்ட நாட்களில் பாபக்கிரக வாரோதயங்களில் அஷ்டகை பண்ணுவது. எ-று. 140

சாந்திகம் பவுடிகம்.

விரும்பிய பூசக் தோணி யோணம்பார் மக விளக்குக்
கரும்பனை யுத்தி ரங்கள் கையொடு சதயந் தன்னில்
விரும்புதன் கதிர்சேய் காரி யிருத்தையெட் டுவாக்காள் நீக்கி
தரும்பிறை வளர்நாட் செய்ய சாந்திகப் பவுடிகந் தான்.

(இ-ள்.) பூசம், ரேவதி, திருவோண, ரோகணி மகம், சோதி அனுடம், உத்திரம்-௩ அத்தஞ், சதைய மிந்நாளிலே புதன் ஞாயர்

செவ்வாய், சனி, ரித்தை, அஷ்டமி, உவாக்களு மொழியப் பூர்வ
பட்சத்திலே சாந்திகம் பவுஷிகம் பண்ணுவது. எ-று. 141

கேஜசாந்தி.

தானிரு பூசந் தோணி சதயமுத் திரங்கள் விட்ட
மான்மகஞ் சோதி யத்தஞ் சித்திரை பனைபார் வாசி
பான்மதி வெள்ளி செம்பொன் பண்டிதன் வாரந் தன்னி
லானையின் சாந்தி செய்கை யிருத்தைநீக் கினிய சொல்லாய்.

(இ-ள்.) புனர்பூசம், பூசம், ரேவதி, சதையம், உத்திரங்கள்-௩ அவிட்டம், மகம், சோதி, அத்தம், சித்திரை, அனுஷம், ரோகணி, அசுபதி இவை யிற்றிலே வெள்ளி, வியாழம், புதன், திங்கள் இவர்கள் வருகிற வுதையங்களிலே இருத்தை யொழித்து கஜசாந்தி பண்ணுவது, எ-று. 142

அசுவ சாந்தி.

சொன்முறம் விட்ட மாறல் தோணிமான் றலையே வாசி
மன்னுகை பூசம் நற்கோள் வாரத்தை யிருத்தை மாற்றிப்
பன்னிய சரோப யத்திற் பரிசாந்தி செய்மின் பாங்காம்
மின்னனாய் கதிரோன் சோதி நிற்குநாள் மிகவு நன்றே.

(இ-ள்.) விசாகம், அவிட்டம், கார்த்திகை, ரேவதி, மிருகசீரிடம், அசுபதி, அத்தம், பூச மிந்நாட்களில் உதையங்களிலே சரராசி உபையராசிகளிலே ரித்தை கூடாத பக்கங்களிலே அசுவசாந்தி பண்ணுவது ஆதித்தன் சோதியில் நிற்கும்நாள் அசுவசாந்தி மிகவும்நன்று, எ-று. 143

மானுவி சாந்தி.

நன்றுகார்த் திகைமா தத்தில் நளிர்மதி வளர்பக் கத்தி
லன்றுமட் டமியீ ராறி லமைந்தவான் பூச நாளில்
வன்றிர லுதையஞ் சுத்தி மானுவி பண்ணுஞ் சோதி
யொன்றுநாள் வெய்யோன் சாந்தி யானவை வேந்தற் கோதே

(இ-ள்.) கார்த்திகை மாதத்தில் பூர்வபட்சத்தில் அஷ்டமி துவாதசியில் இவை யிற்றிலே பூசத்திநன் றுதையஞ் சுத்தியாக மானுவிபண்ணுவது, சோதியிலாதித்த நிற்கும் நாளிலே ராசாவானவன் சரசாந்தியும் பண்ணுவது. எ-று. 144

ஓதுமுத் திரங்க ளத்த மோனமான் றலைமா விட்டஞ்
சோதிசித் திரையோ டாரல் தோணிநா ளிருத்தை நீக்கி

மேதைபொன் கதிரோன் வெள்ளி மெந்நிலே யோரை தன்னில்
மாதராய் மறையோர்க்கெல்லாச் சுகங்களுஞ்செய்கை மாண்பே

(இ-ள்.) உத்திரங்கள் ந-ம், அத்தம், திருவோணம், மிருகசீரிடம், அசுபதி, அவிட்டம், சோதி, சித்திரை, கார்த்திகை, ரேவதி, இந்நாளில் ரித்தை யொழிந்த பக்கங்களிலே ஞாயிறு, புதன், வியாழம், வெள்ளி இவை வாரவுதையங்களிலே நிலைராசியில் ராஜாக்களுக்கெல்லாம் சுப கன்மங்களுக்குஞ் செய்யலாம், எ-று, 145

வாகன மேறவும் ஆயுதம் பயிற்றவும்.

மான்றலை யுத்தி ரங்கள் மகமத்தம் புநர்த மோணம்
வன்றசித் திரைபார் சோதி ரேவதி பனைமா நந்தை
தோன்றுபூ ரணைபொன் புந்தி சுகன்மதி கதிர் வாரங்க
ளான்றவா கனங்க ளேற வாயுதம் பயிற்ற லாமே.

(இ-ள்.) மிருகசீரிடம், உத்திர மூன்றும் மகம், அத்தம், புநர்பூசம், திருவோணம், சித்திரை, ரோகணி, சோதி, ரேவதி, அனுடம், அசுபதி இந்நாளிலே நந்தை பூரணை இந்த பக்கங்களிலே வியாழம், புதன், வெள்ளி, திங்கள், ஞாயிறு இவ்வார வுதையங்களிலே வாகனங்களேறவும் ஆயுதம் பயிற்றவும் நன்று, எ-று. 146

யுத்தஞ் செய்க.

ஆதிரை பரணி யாரல் மகம்பூச மாயில் கேட்டை
யோதுசித் திரைபூ ராட டோணம்பார் விளக் கிருத்தை
காதிய வெட்டி செம்பொன் கடுங்கோள்க ளுதைய வாரந்
தீதிலாப் படையைக் காணச் செருச்செய்ய வழகி தன்றே.

(இ-ள்.) திருவாதிரை, பரணி, கார்த்திகை, மகம், பூசம், ஆயிலியம், கேட்டை, சித்திரை, பூராடம், திருவோணம், ரோகணி, சோதி இந்நாளுக்கும் ரித்தை விஷ்டியும் வியாழம், ஞாயிறு, சனி, செவ்வாய் இவர்களுடைய வாரோதயங்களும், படைகாணவும், யுத்தஞ் செய்யவும் நலம், எ-று. 147

பொன் பூண.

அழகிய குதிரை யத்தஞ் சித்திரை யனுஷம் பூசந் [திங்க
தொழில்கொள்வான் றலைபார் தோணி சுங்கன்மாற் சனிபொன்
எழில்கொள்பூ ரணையே நந்தை யெருகியாழ் தனுமீன் கன்னி
தொழுதுபொன் பூணு மாதற் கணியெலாம் புகழ்ந்து காணே.

D: 8627 P7

(இ-ள்.) அசுபதி, அத்தம். சித்திரை, அனுடம், பூசம், மிருகசீரிடம், ரோகணி, ரேவதி இந்நாட்களிலே வெள்ளி, புதன், சனி, வியாழம், திங்கள் இவ்வாரங்களிலே பக்கம் பூரணை நந்தையிலே இராசிகளில் ரிஷபம், மிதுனம், தனுசு, மீனம், கன்னி இவையில் பொன்பூண நன்று இது விசேஷித்து ஸ்திரீகளுக்கு அழகு, எ-று.

கோடி யுடுக்க.

பூட்டுமுத் திரங்கள் தோணி புரவிபா ரிருபூ சங்க
வீட்டிய வத்த மாதி யைந்தெழில் விட்ட நற்கோள்
சூட்டிய வார நன்றூ் துயரமெட் டிருத்தை சிங்கங்
கோட்டிய சரங்கள் நீக்கி நின்றதிற் கூறை சாத்தே.

(இ-ள்.) உத்திரங்களிம்மூன்றும் ரேவதி, அசுபதி, ரோகணி, புநர்பூசம், அத்தம், சித்திரை, சோதி, விசாகம், அனுடம் அவிட்டம் இவைநன்று, நற்கோள்வார உதையங்கள் நன்று அஷ்டமி; ரித்தை, சிங்கம், மேஷம், கற்கடகம், துலாம், மகரம் இவை யீற்றில் கோடிப்புடவை யுடுக்கலாகாது, எ-று. 149

சாத்திடு கூறை நற்கோ ளுதைபத்துத் தண்ணி யோர்கள்
வகத்து மூன்று பன்னொன் றினியரேல் மிகமாழ் நல்லன்
நீத்திடு மெட்டிற் கோளை நின்றபன் னிரண்டு நான்கு
மாற்றவன் புகரோன் றீய னுடைமாட் டதிக நல்லாய்.

(இ-ள்.) நற்கோள்வார வுதையங்கள் நன்று பாபர் ௩-௬-௧௧-மிடம் நல்லர், புதன் எ-ம் நல்லன் அ-மிடத்து எல்லாரும் பொல்லார் ௧௨-௪-ல் வெள்ளி பொல்லான் அல்லாதவை யெல்லாம்நன்று, எ-று.

தெய்வப் பிரதிஷ்டை.

அதிகநன றுளபூ சங்க ளனுட மைந் தானந் தோணி
குதிரைபுத் திரங்கள் மூன்றுங் கோணுக நன்று சோதி
புதியமா வீச னத்த மத்திமம் புகட்கோள்வாரங்
கதிர்வடக் குருநாள் தெய்வப் பிரதிட்டைசெய் கமலக் கண்ணே

(இ-ள்.) ரோகணி, புநர்பூசம், அனுடம், மிருகசீரிடம், அசபதி ரேவதி உத்திரங்கள் ௩-ம்மாத மிவை யுத்தமம் சோதி, திருவோணம், அத்தமிவை மத்திம; மல்லாத இவை மத்திமம்; அல்லாதவை யாகாது நற்கோள்வார உதையங்கள் நன்று, உத்தராயணம் பிறந்த வாரே பிரதிஷ்டை பண்ணுவ தென்றவாறு. 151

கண்ணிலா நாட்கள் மாசி கடியபிற் பக்க மொன்பான்
எண்ணுவா விரட்டை பக்க மிராப்புகர் செம்பொன் மூடன்
தண்ணிய சகடம் விட்டி சரராசி தலையாய் நின்ற
வண்ணல்தன் னேரைக் காறெட் டீராறு பிரதிஷ்டைக் காகா.

(இ-ள்.) கண்ணில்லாத நாட்கள் மாசிமாதம், அமரபட்சம், நவமி, உவா, இரட்டித்தபக்கம் இராத்திரி சுக்கிரன், பிரகஸ்பதி, அஸ்தமனம், சகடம், விஷ்டி, சரராசிகளில் கர்த்தாவினுடைய ராசிக்கு கூ-அ-கஉ-மிராசியுமிவை பிரதிஷ்டைக்கு வற்சிக்கப்பட்டது, எ-று.

ஆகாத பாபர் மூன்றோ டாறுபன் னொன்று நல்லர்
ஏகார்க ளெட்டி லியாரு மேழிடம் வெள்ளி பொல்லான்
மாகாறு மதிய நான்கு மீராறு மறுவிற் றீயன்
பாகாரும் பவிடையில் வெள்ளை மிகநன்று பிரதிஷ்டை பண்ண

(இ-ள்.) பாபர் ௩-௬-௧௧-மிடம் நல்லர், அ-மிட மெல்லோரும் பொல்லார், எ-மிடம் வெள்ளி தீயன், சந்திரன் ௪-௧௨-மிடந் தீயர், ரிஷபத்தில் வெள்ளி யுதையமாகப் பிரதிஷ்டை செய்யப்பெறில் விசேஷித்து நன்று, எ-று. 153

பண்மொழி சரஞ்சேய் பின்னிற் பதினான்கு முன்னிலெட்டுப்
பெண்ணெழு வற்கு நன்றும் பெருகிய சரோபயங்க
ளெண்ணும்பெண் தெய்வ நாட்டா மிறைவர் மூவர்க்கு மா
டண்ணிய சங்கி ராந்தி மாதாந்தத் திருநாள் சாற்றே.

(இ-ள்.) சரராசியும், செவ்வாய்க்கிழமையும், அமரபட்சத்து சதுர்த்தசியும், பூர்வபட்சத்து அஷ்டமியு மிவை சத்தமாதாக்களை எழுந்தருளவிக்கலாம், சரராசிகள் உபையராசிகளும் ஸ்ரீ தெய்வப் பிரட்டைக்கும் ராஜாவினுடைய நாளுக்கும், ஊர்பிறந்த நாளுக்கும் பொருந்து நாட்களிலே சங்கிரம காலத்திலும் மாதாந்தங்களிலுந் திருநாளெழுந்தருளிவிப்பது நன்று, ரித்தையு மிரட்டித்த பக்கங்களும், உவாவும் மூதேவி பிரதிஷ்டைக்காமென்பது முன் சொன்ன நாட்களிலே சுபக்கிரகங்கள் நோக்க பதின்மூன்றும் பிரதிஷ்டை பண்ணுவதென்றவாறு. 154

திருவமர் தேவர்க் கெல்லாஞ் சிறந்தவை காசி திங்க
ளுரியநற் பக்கந் தன்னி லுபர்ந் தயர்ந் தநாள வாரமேத்தத்
தருமிகப் பவுத்தி ரங்கள் தருமருக் கொழுந்து சாற்றும்
பொருவரு மாடி திங்கள் பதினான்கட் டமியும் போற்றே.

(இ-ள்.) வைகாசிமாதத்தில் பூர்வபட்சத்தில் சுபகன்மங்களுக்குச் சொன்னநாளில் நற்கோள்வார உதையநாளில் ஆகசம் நிர்மலமாகத் தேவர்களுக்கெல்லாம பவித்திரமும் மருக்கொழுந்து சாத்துவது அமரபக்ஷத்து ஆடிமாதத்திலேயாவது அஷ்டமிநன்னிலாவது சாத்துவதென்றவாறு. 155

வாஸ்துயிட.

போற்றுமுத் திங்க ளோணம் பூசங்கள் மகம்பார்த் தோணி
தோற்றிய சதையஞ் சோதி மான்றலை யனுடன் தூய்தா
மாற்றலெட் டுவா விருத்தை மந்தனில் நற்கோள் வாரத்
தோற்றமூர் கருப்ப திக்க வியம்பினர் நிலையோ ரைக்கே.

(இ-ள்.) உத்திரமூன்று திருவோணம், புநர்பூசம், பூசம், மகம் ரோகணி, ரேவதி, சதையம், சோதி, மிருகசீரிடமிவை நன்று அஷ்டமி உவா விருத்தையாகாது, சனி, வியாழம், வெள்ளி, புதன், திங்கள் இவ்வா ரோதயங்களிலே ஸ்திரராசிகளிலே ஊர்க்குப் பதிக்க வித்துவான்களுடனே கூடப்போய் சுப நிமித்தங்களுஞ் செய்யப் பூமியிலேசென்று கந்தம் பார்த்து மண்ணையள்ளி வாஸ்து நிச்சயிப்புது, எ-று. 156

அகமேடுக்க.

நிலைதருங் கீழ்சா ரில்லந் தைமாசி நின்ற தென்சா
ரலகில்சித் திரை வைகாசி யாடியா வணிமேற் சார்வாய்
மலருமைப் பசியே வாய்த்த கார்த்திகை வடசார் வாகு
மூலகர்டங் குனியோ டானி புரட்டாசி வில்லொ ழித்தார்.

(இ-ள்) தை, மாசிமாதம் கீழ்சார், சித்திரை, வைகாசி, தென் சார், ஆடி, ஆவணி மேல்சார், ஐப்பிசி, கார்த்திகை வடசார், அகமெடுப்பது பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இவையொருதிக்கிலும் அகமெடுக்கலாகாது, எ-று. 157

ஒழுக்கிய குண்டை யாழ் நண்டுயர் கிடன் வடக்கா
மழற்புரி யரிவை கோலுக் கழகிய கிழக்குந் தெற்கும்
விழித்திடுந் தேளும் வில்லு மகரமும் மேற்குந் தெற்கும்
வழுத்தினர் குடமீன் மேடல் வாசலாம் வடக்கு மேற்கே.

(இ-ள்.) ரிஷபம், மிதுனம், கடகம் இவை வீற்றுக்கு வடக்குங் கிழக்கும் வாசற் பொருந்தும், தனுசு, விருச்சிகம் மகரம் இவைவீத்

றுக்கு மேற்கும், தெற்கும் பொருந்தும், கும்பம், மீனம், மேஷம், வடக்கும், மேற்கும் வாசல்பொருந்தும், எ-று. 158

வடங்கொள்பார் ரோணி பூச மிருகசீர் மனுஷ மத்தந்
திடங்களுத் திரங்க ணன்று சித்திரை புநர்த மூலந்
தடந்தருவிட்டஞ் சோதி சதையப்பத் திம்முற் பக்கந்
தெடமபெரு விட்டி ருத்தை யிவைவெட்டிற் கோள்கள் நீக்கே

(இ-ள்.) ரோகணி, ரேவதி, பூசம், மிருகசீரிட, அனுஷ, அத்தம் உத்திரங்கள்-௩ இவை யுத்தமம, சித்திரை, புநர்பூசம், மூலம், அவிட்டம, சோதி, சதைய மிவை மத்திபம் அல்லாத நாட்கள் அதமம் பூர்வபட்சத்து அஷ்டமி, ரித்தை, உவா ஆகாது நீக்கி நின்றபக்கங்களிலே அஷ்டமசுத்தியுண்டாக கிரகமெடுப்பது. எ-று.

கிரகாரம்பம்.

நீத்திடும் பாபவாரம் நிலையோரை யுபையங் கோண் மீன்
கோதம்தாட சுங்களு மசமயபான குலமபுகர் திங்க ளேற்றி
லேதுமால் வெள்ளி நன்று மேளபுகா கொடிதீ ராறிற்
றீததிர மதிபார் பன்னொன் றுமூன் றினிய தீக்கோள்.

(இ-ள்.) பாபக்கிரக முதையங்கள் விலக்கப்பட்ட சுபக்கிரகவார வுதையங்களும், ஸ்திரராசியும் உபையராசியும் நன்றென்பது, விருச்சிகத்திலும ரிஷபததிலே புதன் சுக்கிரனும் விசேஷித்து நன்மை பண்ணுவான வெள்ளி ஏழாமிடமொழியநல்லன் சந்திரன் புதன் ௧௨மிடமொழிய நல்லன் பாபக்கிரகங்கள் ௧௧-௬-௩-மிடம் நல்லனென்பது தேவாலயஙகளுக்கும் கிரகங்களுக்கும் வாஸ்துவகுக்கவுங் கிராரம்பத்துக்கு சொன்ன காலங்களிலே கொள்வது. எ-று. 160

குடிப்புக திருவாண்டெழு.

தீங்கிலா வில்லெ டுக்கச் செப்பிய காலந் தன்னி
லோங்கிய மாசி யாடி யொழித்துள்ள கால மெல்லா
மாங்குடி புகுத மாதே யாடியி லாதி ரைக்கு
ஈங்கிவை மன்னர்க் கெல்லா மெழுத்திட மினிதென் றூரே.

(இ-ள்.) கிரகாரம்பத்திற்குச் சொன்ன நாட்களிலே மாசி ஆடியொழிய அல்லாதவையெல்லாங் குடிப்புக நன்றென்பது ஆடிமாதத்திலே திருவாதிரையினன்று உச்சிப்பொழுது இராசாவுக்குத் திருவாண்டெழுத்திடுவது. எ-று. 161

தீட்சை.

இனியதே ருத்தி ரங்க ளிரேவதி யவிட்ட மான
மனுடமான் றலேபூ சங்க ளாதிரை யத்தங் கேட்டை
துணிவுறு மகமே மூலஞ் சோதிசித் திரைசெய் வாரங்
குனிசிலே நுதலாய் நன்று குருவுரை கொள்ளு வார்க்கே.

(இ-ள்) ரோகணி, உத்திரங்கள்-ந, ரேவதி, அவிட்டம், திருவோண, மனுஷ, மிருகசீரிட, புனர்பூச, திருவாதிரை, அத்தங் கேட்டை, மகம், மூலம், சோதி, சித்திரை இவை நன்று கிழமைகளில் செவ்வாய் நன்று. 162

ஒல்லேயி லுவா விருத்தை யட்டமி யெட்டிற் கோளே
புல்லிய மாசி யாடி புரட்டைமார் கழியொ ழித்து
நல்லமுற் பக்க நிற்கு மோரைகோ ளமைந்த நாளிற்
சொல்லுவார் சங்கி ராந்தி தோன்றில்மெய்ச் சுத்தி பண்ணே.

(இ-ள்.) உவா, இருத்தை, அஷ்டமி, மாசி, ஆடி, புரட்டாசி, மார்கழி இவை யொழித்து பூர்வபட்சத்திலே ஸ்திரராசிகள் உதையமாக அஷ்டமசுத்தியுண்டாக ஆகாசம் நிர்மலமாகக் கொள்ளுவது சிஷன் பிறந்த நாட்களிலேயாதல் மற்ற புண்ணிய யோகங்களிலேயாதல் சிஷனே சரீரசுத்தி பண்ணுவது. எ-று. 163

குளங் கிணறு கேல்ல.

சுத்தமுத் திரங்கள் கேட்டை தோணிசித் திரைபா ரோண
மத்தமான் றலே பூராட மகமைந்தேள் மூன்று பன்னொன்
றொத்தபன் மூன்று மொன்று திதியோரை குடமீன் கேது
குத்திய வெறுதி நண்டிற் குளங்குழி கூவல் கெல்லே.

(இ-ள்.) உத்திரங்கள்-ந, கேட்டை, ரேவதி, சித்திரை, ரோகணி, திருவோண, மத்த, மிருகசீரிட, பூராட, பஞ்சமி, சத்தமி, திரிதிகை, ஏகாதசி, திரையோதசி, பிரதமை ராசிகளில் கும்ப மீன மகர ரிஷப கடக மிவை யீற்றிலே சுபக்கிரக வாரோதயங்களிலே அஷ்டமசுத்தி யுண்டாக குளங் குழி கிணறு கெல்லுவது. எ-று.

கெல்லுமாக் குளங்கள் கூவல் கதிர்துலா மத்தி மத்திற்
செல்லிநாட் பெருநீ ராகுஞ் சித்திரை நடுவிற் பத்தில்
மல்லமாக் கரைகள் கட்டி மலேயகா மெட்டிற் சுத்த
மல்லறு குழலாய் கோள்க ளழகிதோற் கிழமை யாய்ந்தே.

(இ-ள்.) ஐப்பசிமாதம் நடுவிற் பத்தில் முன்புசொன்ன நாட்களிலே குளங் கிணறு வெட்டப் பெருநீராம் சித்திரை மாசத்தில்நடுவிற்பத்தில் கரைகட்டில் மலைபோலேயாம் சுபக்கிரகங்களிலே அஷ்டம சுத்தியுண்டாக முன்புசொன்ன முகூர்த்தத்திலே கொள்ளுவது.

வியாதி நீங்காதபலன்.

ஆயில்மூப் பூரஞ் சோதி யாதிரை பரணி கேட்டை
ஏயுநற் சதையம் பக்க மீராறு நான்கா றென்பான்
காய்கதிர் செவ்வாய் காரி வாரங்கள் கலந்த நாளில்
நோய்கொளில் மரண மென்று நவின்றனர் நூல்கள் வல்லோர்

(இ-ள்.) ஆயிலியம், முப்பூரஞ், சோதி, திருவாதிரை, பரணி கேட்டை, சதயம், துவாதசி, சதுர்த்தி, சஷ்டி, நவமி இவைகளும் ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமைகளுங் கூடினநாளில் வியாதிபட்டவனுக்கு மரணமென்பது. எ-று. 166

வியாதியஸ்தர் மருந்துண்ண.

வல்லிரு பூசமத்த மான்சோதி யுருள் மாப் பெண்ணை
சொல்லுமுத் திரங்க ளவிட்டந் தோணிமான் றலைசெக்கோண
மெல்லிய சரனல் வாரம் வெய்யவ னென்கோள் சுத்தம்
செல்வமா ருத்தை நீக்கி கருந்துண்ணத் தெரிந்து கொள்ளே.

(இ-ள்.) புனர்பூசம், பூசம், அத்தம், சித்திரை, சோதி, ரோகணி, அசுவதி, அனுஷம், உத்திரங்கள்-ந, அவிட்ட, ரேவதி, மிருகசீரிடம், சதையம், திருவோண சராராசிகளும், வியாழம், வெள்ளி திங்கள், ஞாயிறு, புதன் பக்கங்களில் இருத்தையொழிப மற்றுள்ள வையிற்றில் சுபக்கிரகங்கள் நோக்க அஷ்டமசுத்தி யுண்டாக மருந்துண்பது. எ-று. 167

அறுக்க வேதுப்ப.

தெரிதரு மாயில் கேட்டை செங்கைமூ லஞ்சேய் காரி
விரிதரு விருத்தை கன்னி மேடகோள் கடகம் தம்மை
எரிதரு தீக்கோள் நோக்க வெட்டிடஞ் சுத்த மாக்கி
கருதுகோ யருத்துச் சுட்டுக் காரம்வைத் தட்டை கட்டே.

(இ-ள்.) ஆயிலியம், கேட்னட, திருவாதிரை, மூலம், செவ்வா சனி, இருத்தை, கன்னி, மேடம், துலாம், கடகம் இந்தராசிகளைப் பாபக்கிரகங்கள் நோக்க அஷ்டமசுத்தி யுண்டாக வியாதிகளறுக்கவுஞ் சுடவுங் காரம் வைக்கவு மடைதட்டவு நல்லது. எ-று.

வியாதியஸ்தர் குளிக்க.

கட்டிய வுரோணி சோதி கலமகம் புநர்த மாயி
லொட்டிர வுத்திரங்கள் தவிர்த்திவை யொழிந்த நாளி
லட்டமி ருத்தை யான்ற தசமியில் வெள்ளி திங்கள்
சுட்டிய வுதைய வாரந் துயர்கெடக் குளிக்க நன்றே.

(இ-ம்.) ரோகணி, சோதி, ரேவதி, மகம், புநர்பூசம், ஆயிலி யம், உத்திரம்-ங இவை யொழிந்தநாளிலே அஷ்டமி, இருத்தை தசமி இப்பக்கங்களிலே வெள்ளி திங்கள் இவ்வாரவுதையங்களிலே வியாதியஸ்தர் குளிப்பது. எ-று. 169

மரண தோஷம்.

நன்றுணர் முக்கால் காலாம் வருநாட்பத் திரையாம் பக்கம்
வென்றிகொள் பொன்சேய் வெள்ளி வாரத்தி ல்வித்தல் கூட்
என்றிவை யுளவன்ஞளி யிறந்தவன் மரபு தன்னிற் [டம்
பொன்றுவர் மூவ ரென்று புகன்றனர் புலவர் பொன்னே

(இ-ள்.) முக்காலுங்காலுமாக வருநாட்களிலே பத்திரை வியா மும் செவ்வாய் வெள்ளி இவைகூடினநாளில் சாதல் சுடுதல் செய்யில் அவனுடைய வங்கிஷத்திலே மூன்றுபேர் மரணமுண்டென்பது.

மரணதோஷ நிவாரணம்.

பொன்னனுய் தருப்பை யாலே புனர்தேக வுருவம் பண்ணி
பின்னுமர் தணரை யூட்டிப் பிறப்பிலாத் தெவர் தம்மை
யுன்னிய பூசை செய்தா லொழிந்திடுஞ் சாக்கா டென்று
மின்னிடை மடந்தை நல்லாய் விளம்பினர் தமிழ் விரித்தோர்.

(இ-ள்.) தருப்பையாலே பிரேதம்பண்ணி புநர்தேகத்தை தக னஞ் செய்வித்து பிராமண போசனத்துடன் தேவர்களைப் பூசிக்கத் தோஷந்தீரும். எ-று. 171

க்ஷேத்திரலபிதம்.

விரிந்தவான் பரணி யோணம் விசாகமோ டத்த நாளில்
கருந்துடை நாலாங் காலிற் கடகம்வந் துதிப்பக் கண்டு
திருத்திய செயயில் மண்ணைத் தின்றிடச் செல்வ மிஞ்சி
பொருத்தமும் புகழு முண்டாம் பூமியுந் தன்னு தாமே.

(இ-ள்.) பரணி, திருவோணம், விசாகம், அத்தம் இவை யிற் றிலே நாலாங் கால்களிலே கற்கடக முதையமாக க்ஷேத்திரத்தில்

பூமியைப் பார்த்து மண்ணைத்தின்ன அந்தப்பூமி தன்னுதாய் ஐஸ்வரிய முண்டாம், எ-று. 172

நாவாயுங்கள்ளறுப்புகாமல்.

நாவிய விலங்கு கள்ளர் தன்செய்யிற் புகாமல் வேண்டி
லோவில்கார்த் திகையாம் நாளின் மான்றலை யுதிக்கும் போது
மேவுபாழ் மனையே றப்பில் விறகினைக் கொணர்ந்து செய்யின்
பூவைகோள் வரம்பு தோறு மெரித்திடிற் புகுகா தொன்றும்.

(இ-ள்.) மிருகங்களும் கள்ளரும் தன் செய்யிற் புகாது வேண்டில், கார்த்திகை நட்சத்திரத்தில் மிருகசீரிடம் உதிக்கும்போது பாழ்மனை யெறப்பின் விறகைக் கொண்டுவந்து செய்யின் வரப்பு தோறு மெரிக்க யாதொன்று மாகாது, எ-று. 173

ஒன்றிய சேயின் வாரத் துவர்பதி னன்கு தன்னில்
வன்றிற விட்ட மதத மகசிர நாளிற் சிங்கந்
கன்றிப வில்லு திர்ப்பக் காஞ்சிர மூளைய நாட்ட
வென்றிகோள் விலக்கு செய்யில் மேவிடா மேவில் வீயும்

(இ-ள்.) செவ்வாய்க்கிழமையும், சதுர்த்தசியாதல், உவாவாதல், இப்பக்கமும், அவிட்ட அத்த மிருகசீரிட இந்நாட்களுங்கூடி வந்த நாள் சிங்கம் தனுசுவாதல் முகூர்த்தமாகக் காஞ்சிரமுளையைச் செய்யில் வரம்பில் நாலுமூலையும் நாட்டமிருகங்கள் நாவாய்கரை புகாது புகுந்தால் மரிக்கும், எ-று. 174

மேவுமா திரையு நன்று வில்லெழ மனைபிற் செய்பி
லேவிய கோணம் நான்கு மெட்டியின் முளையை நாட்டத்
தீமிரு கங்கள் வாழ லெலிநாவாய் விட்டிற் செய்யில்
தாவிடா மனையிற் சாரச் சாருமேல் மரணஞ் சாற்றே.

(இ-ள்.) திருவாதிரையினன்று தனுசு உதையமாக மனையிலுஞ் செய்யில் நான்கு கோணங்களிலும் எட்டிமுளையை நாட்ட மிருகங்கள் எலியாழல் நாவாம் புகுதா தென்பது, எ-று. 175

சத்துருநாசம்.

சாற்றுமா திரையுற் செவ்வாய்க் கிழமையிற் றகறி யாதல்
சீற்றமா மகரத் தாலே சேயெழ விரப்பி காலிற்
றேற்றிய விறகை வாங்கிச் சுடலினிற் றீயை மூட்ட
மாற்றலர் மாய்ந்து போகுஞ் சூனிய மயிலே யன்னாய்.

(இ-ள்.) செவ்வாய்க்கிழமையில் திருவாதிரை யன்று மேஷத்திலாதல் மரகத்திலாதல் செவ்வாயுதிப்ப அப்போது சத்துருவின் மனைபெறப்பில் விறகை வாங்கிச் சுடுகாட்டிலிட்டெரிக்கச் சத்துருக்கள் மாய்ந்து போவார்கள், எ-று. 176

குமரீநீங்க.

அன்னைசித் திரைமக ரத்துச் சித்திரை யான நாளில்
முன்னரை தன்னிற் றிங்க ளுதிப்பது முகூர்த்த மாகக்
கன்னியைப் பஞ்ச வர்ன நூல்புனைந் தரையிற் கட்டி
மன்னிய குமரி நீங்கி வாட்கையு மெய்து மண்மேல்

இ-ள். சித்திரை மாதத்துச் சித்திரைநாள் முன்னரையிற்றிங்களுதையமாகக் கன்னிகையா யிருப்பவனை குளிப்பாட்டி, பஞ்சவர்ண நூலாலே குளிகையாக்கி அரையிற்கட்ட குமரி நீங்கி, வாட்கையுமெய்தும், எ-று. 177

புருஷனை ஸ்திரீயுடன் சேர்ப்பிக்க.

மண்ணுடை மகளைப் போத வேண்டாராய் வாழ்வார் தம்மை
பெண்ணுடன் கூட்ட வேண்டிற் பெரியசித் திரைநா ளத்தஞ்
திண்ணிதா வுதிப்பத் திங்கட் கிழமையிற் றிருவன் னளைப்
புண்ணிய நறுநீ ராட்டிப் புணர்முலை சாந்தம் பூசே.

(இ-ள்.) ஸ்திரீகளுடன் சேராமல் யோடிப் போவோரை சேர்க்க வேண்டில், சித்திரைமாதநாள் அத்தமுதையமாகத் திங்கட்கிழமையில் ஸ்திரீயைக் குளிப்பாட்டி சந்தனத்தைப் பூசிக் கூட்டினால் ஒருநாளும் பிரியார், எ-று. 178

வாரவிசேஷம் தற்கால விசேஷம்.

சந்திரன் விதைசேய் பூசல் சனிதவங் கதிர்சே வித்தல்
மந்திரி மணமால் கல்வி மயிர்வெள்ளி வார நன்று
மந்தமில் முடியே யிஞ்ஞை யரும்பொருள் கன்னி தானம்
வந்துரு பகைநோய் தீர்க்க வருவதே கோல மானே.

(இ-ள்.) முன்பு சொல்லிப் போந்தவை யிற்றில் விசேஷங்கள் விதைக்கும், செவ்வாய் பூசல், சனி தவசு, ஞாயிறு சேவிக்க, வியாழம் விவாகஞ்செய்ய, புதன் வித்தியாரம்பண்ண, வெள்ளி செளளத்துக்கும் விசேஷம், அபிஷேகம் வந்தெய்தினபோதும் வித்தை அர்த்தம் வந்தெய்தியபோதும் சத்துருவை செயித்தால் உயிததியம் யுர்

தெய்தினபோதும், கன்னியாதானம் வந்தெய்தினபோதுஞ் சந்துருவையழிக்கலானபோது மெய்தினபோதே காலமாய்ச்செய்வது.

மேல்நோக்கு முகடு கீழ்நோக்குநாள்.

மாமுதல் நான்கு மற்றை மகமுதல் நான்கு மூலந்
தான்முதல் நான்கு மேலாந் தங்கமான் றலைய விட்டம்
மேவுசித் திரையு முச்சி விதித்திடுஞ் செங்கை நான்கும்
தாவிய சோதி நான்குஞ் சதையமும் கீழாங்காலே.

(இ-ள்.) அசுவதிமுதல் நாலும், மகமுதல் நாலும், மூலம்முதல் நாலும், இவை மேல்நோக்கினநாள் இவையிற்றில் அகமெடுக்கவும் கூடம் வைக்கவும் ஊரேற்றவும் நன்றென்பது; மிருகசீரிடம், அவிட்டஞ், சித்திரை இவை மூன்று முகட்டு நாவும் இவையிற்றில் மகரம் வைக்கவுங் கோபுரம் பண்ணவும் நன்றென்பது திருவாதிரை முதல் நாலும் சோதி முதல் நாலும் சதையம் முதல் நாலுமிவை கீழ்நோக்கினநாளிவையிற்றில் ஏரி, குளம், கிணறு கெல்லவும் நன்றென்பது.

காரிய சுத்தி.

கால்கொண்ட மணத்துக் கேழுங் கருதும்வா யுறைக் கிரண்டும்
மால்கொண்ட மனைக்கு நான்கும் வழிபோக்குக் கீரைந்து வாஸ்து
மேல்கொண்ட பிரதிட்டைக் காது மியிர்வித்தை முடிசீ மந்தம்
மேல்கொண்ட நாம முன்னூற் கெட்டிடஞ் சுத்த மன்றே.

(இ-ள்.) விவாகத்திற்கு ஏழாமிடமும், அன்னப்பிராசனத்துக் கிரண்டாமிடமும், கிரகாரம்பத்துக்கு நான்காமிடமும், யாத்திரைக்குப் பத்தாமிடமும், சுத்திகொள்ளுவது, வாஸ்துபிரதிஷ்டை கருணர்வேதம் சவுளம் வித்தியாரம்பம், அபிஷேகம், சீமந்தம், நாமகரணம் உபநயன மிவையிற்றுக்கு எட்டாமிடஞ் சுத்தமாகக் கொள்வதென்றவாறு. 181

இராச சுத்தி.

சுத்தமா மணஞ்சி ரார்த்தம் யாத்திரை சோலை வைத்தல்
புத்திசேர் குருவைக் காண்டல் புணர்ந்திட லகமெ டுத்தல்
வைத்தயே ருழவு கூவல் மரக்கல மயிரே கல்வி
கத்தியே மடமாதி சயலீ ருய்க் கழித்தாற் கற்றோர்.

(இ-ள்.) விவாகத்திற்கு மேடமும், சிரார்த்தத்துக்கு ரிஷபமும் யாத்திரைக்கு மிதுனமும், விருட்சம்வைக்க கடகமும், ஆசாரியனை காணச் சிங்கமும், புணர்ச்சிக்குக் கன்னியும், அகமெடுக்கத் துலாமு

முழவுக்கு விருச்சிகமும், கிணறுவெட்டத் தனுசும், மரக்கலயாத்திரைக்கு மகரமும், க்ஷவரத்துக்கு கும்பமும், வித்தியாரம்பத்துக்கு மீனமுமாகாது இவை விலக்கப்பட்ட விராசிகள். எ-று. 182

சென்மத்திரையநாள் தோஷமும் அனுகூலமும்.

கற்புநாள் மூன்றி லெண்ணெய் கடிமணஞ் சிரார்த்தம் போக்கு
வற்புறு பிணி மருந்து மயிர்வினை மருவ லாகா
விற்புக வுழுதல் வித்த லினிதுண்ட லறங்கள் செய்தல்
பொற்பணி மகுட மாடை புனையெலாம் புகலின் மாதே.

(இ-ள்.) பிறந்தநாள் மூன்றி லெண்ணெய்வார்க்க விவாகம் சிராத்தம், யாத்திரை, வியாதி, மருந்து, க்ஷவர மிவை விசேஷித்துத் தவிர்க்கப்பட்டன. குடிப்புக, உழவு, விதை விதைக்க, நவபோசனம் பண்ண, தருமஞ்செய்ய, ஆபரணம்பூண, அபிஷேகம் பண்ண, கோடிபுடவையெடுக்கவும் விசேஷித்த நன்மை. எ-று. 183

மணப் பொருத்தம்.

மாதவர் மணப் பொருத்தம் வழுத்துநாட் கணப்பொ ருத்தம்
மாதுமா கேந்திர மோடு ஸ்திரீ தீர்க்கம் யோனிராசி
மேதகு மதிபதிக் கோள் வசியமி ரச்சு வேதன்
றீதரு மரங்கள் புல்லு தெரிந்திட வுரைப்ப தேனே.

(இ-ள்.) தினம், சணம், கேந்திரம், ஸ்திரீதிர்க்கம், யோனி, ராசியாதிபதி வசியம், இரச்சுவம், வேதையென்று சொல்லப்பட்ட தசப்பொருத்தமும் அடைவேன். எ-று. 184

உரைத்திலி ரண்டு நான்கா றெட்டொன்பா னீரா றீரேழ்
பரித்தவென் னிரண்டு பத்தொன் பானிரு பத்தி ரண்டும்
இருத்திய விருபன் மூன்று மிருபத்தா றிருபத் தெட்டும்
பொருத்நன் றிருபத் தொன்பா னுளிவை பூவின் றாமே.

(இ-ள்.) உ-ச-சூ-அ-கூ-கஉ-கச-கசு-கஅ-உஉ-உங-உசு-உஅ-உகூ-ம் நாள் இவை யெல்லாக் கன்மங்களுக்கும் பொருந்து நாளென்பது இவை பத்துச்சென்றால் தொட்டெண்ணிக் கொள்வது இருபதாநாளுந் தொட்டெண்ணுவது. எ-று. 185

மான்றலைபு நற்ற மாரல் வயப்பரி சதைய மாடி
யான்றசித திரைபங் கூனி யனுடமத் தியம்பா செங்கை
யூன்றிய வறிவன் ரேணி மகம்பூச மோன மத்தம் [தோர்.
தோன்றினன் னொருநா ளல்லா தொழித்தனர் துணிந்து தோந

(இ-ள்.) மிருகசீரிடம், புநர்பூசம், கார்த்திகை, அசுபதி, சதையம், உத்திராடம், சித்திரை, உத்திர, மனுட மிவை யோன்பதுஞ் ஸ்திரீயும் புரு-னு மொருநாளாகில் மத்திமம் ரோகணி, திருவாதிரை, உத்திரட்டாதி, ரேவதி, மக, பூச, திருவோண, மத்த மிவை யெட்டு மொருநாளாகில் உத்தமம். மூல, மாயில்ய, விசாக, கேட்டை பூர மூன்றும், பரணி, அவிட்டம், சோதி இவை பத்து நக்ஷத்திரங்களும் இருவருடையதும் ஏக நக்ஷத்திரமாகி லாகாது. எ-று.

கணப் பொருத்தம்.

தோடப் புத்தி ரங்கள் செங்கைமுப் பூர மக்கள்
பாரமான் றலைபூ சங்கள் பனைவிளக் கோணந் தோணி
மூரிமா வத்தந் தேவர் முறங்கேட்டைப் பயறு மூல
மாரல்பாம் பவிட்டஞ் செக்கு மகங்கண மாக்கா ரங்கே.

(இ-ள்.) உரோகணி, பரணி, உத்திரத்திரயம், திருவாதிரை, முப்பூர மிவை கூ-ம் மனுஷகணம். மிருகசீரிட, புநர்பூச, பூச, மனுஷஞ், சோதி, திருவோண, மிரேவதி, அசுவதி அத்த மிவையொன்பதுந் தேவகணம். விசாகம், கேட்டை, சித்திரை, மூலங், கார்த்கை, ஆயிலிய, மவிட்டஞ், சதைய, மக மிவை யொன்பது மிராட்சதகணம். எ-று. 187

அரக்கருந் தேவர் தாமு மலைப்பகை யரக்க ரோடே
பெருக்கவு மனிதர் சேரிற் பிணம்படு மக்க ளோடே
செருக்கிய தேவர் சேரின் மத்திமஞ் செல்வ முண்டா
மிருக்குமேற் கணங்க ளொன்றே யிவைநல மாது மொன்றே.

(இ-ள்.) இராட்சத கணமுந் தேவகணமுமாகில் சிலுகு, ராட்சதகணமு மனிதகணமுமாகில் மரணம் மனுஷகணமுந் தேவகணமுமாகில் மத்திம மிரண்டு மொருகணமாகில் உத்தமம். எ-று.

மகேந்திரமும் ஸ்திரீ தீர்க்கமும்.

ஒன்றுநான் கேழு பத்துப் பதின்மூன் றெண்ணிரண்டா நாட்க
ளொன்றொழித் திருபா னையந் திருபதோ ரிரண்டு மாகில்
நன்றுமா கேந்திரந் தான் நாட்பதின் மூன்றப் பாலே
சென்றிடின் மிகவு நன்று ஸ்திரீதீர்க்க மென்று செப்பே.

(இ-ள்.) க-ச-எ-ய-யங-யகூ-யசு-உரு-உஉ-இந்நாளும் மகேந்திரப் பொருத்த முண்டென்பது (முன்புபோல தொட்டெண்ணுதயிருபத்தேழும் கண்டுகொள்வது) மகேந்திரம் (ஸ்திரீ தீர்க்கங்கொ

ள்ளும்படி) ஸ்திரீநாளிலே நின்று புருடநாளளவு மெண்ணினல் பெ நாளுக்கு மேற்படில் உத்தமம் பதிமூன்றில் குறைவ தாகாதென்று சொல்லுவர். எ-று. 189

யோனிப் பொருத்தம்.

செப்பிய குதிரை யானை யாடுதீய் நாகஞ் சாரை [டை
தப்பிற்பெண் ணுய்பெண் பூனை தகர்புஞ்ஞை யெலியாண் பெட்
யொப்பரு தெருமை வேங்கை கிடாப்புலி யோடு புல்வாய்
கொப்பிறு கலைநாய் வல்லாண் குரங்கவன் பசுக் குரங்கே.

(இ-ள்.) அசுவதி ஆண்குதிரை, பரணி ஆண்யானை, கார்த்தி கை பெண்ணுடு, ரோகணி நாகப்பாம்பு, மிருகசீரிடம் சாரைப்பாம்பு திருவாதிரை பெண்ணாய், புனர்பூசம் பெண்பூனை, பூசம் ஆணுடு, ஆயிலியம் கடுவன்பூனை, மகம் ஆணெலி, பூரம் பெண்ணெலி, உத்தி ரம் எருது, அத்தம் பெண் எருமை, சித்திரை ஆண்புலி, சோதி ஆணெருமை, விசாகம் பெண்புலி, அனுஷம் பெண்மான், கேட்டை ஆண்மான், மூலம் ஆண்நாய், பூராடம் ஆண்குரங்கு, உத்திராடம் மலட்டுப்பசு, திருவோணம் பெண் குரங்கு. எ-று. 190

குரமிகு மனையிற் பெண்டீர் குதிரையிற் பேடு கூறில்
நார்களிற் புருஷர் நல்லர் பாற்பசு மிடியீ ராக
விருபதோ டேழு நாளும் யோனியிப் பரிசே யென்று
துரகமே யாதி யாகச் சொல்லிடாய் துடியே யன்னுப்.

(இ ள்.) அவிட்டம் பெண், சதையம் பெண்குதிரை, பூரட்டா தி புருஷன், உத்திரட்டாதி பாற்பசு, ரேவதி பெண்யானை இவ்வ கையால் இருபத்தேழு யோனியு மசுபதி முதலாகக் கண்டுகொள்க.

துடிபிடி யானை தன்னிற் பகைநரர் துரகங் கோக்கள்
கடியுடை பெருமை பல்வாய் கடாப்புலி பகைய தாகுங்
கொடியபாம் பதனுக் காடு குரங்குக்கு நாய தாகுங்
கடியபே ரெலிக்குப் பூனை பகையெனக் கருது நீயே.

(இ-ள்.) ஆனைக்குப்பகை மனிதர், குதிரைக்குப்பகை பசு,எரு மை மான் கிடாவுக்குப் பகை புலி, பாம்புக்குப் பகை ஆடு, குரங்கு க்குப்பகை நாய், எலிக்குப்பகை பூனை. எ-று. 192

கருத்துடை யாணு மாணுங் கடும்பகை பெண்ணும் பெண்ணுக்
திருத்தமாம் பெண் பெண்ணுகி யாணுணேற் செல்வ முண்டாம்
விருத்தமாம் பெண்ணு ணுகி யாண்பெண்ணேல் மிகவும் யோனிப்
பொருத்தமா மாசி யேழில் மேற்படி புகழுண் டாமே.

(இ-ள்.) இரண்டுயோனியும் புருடயோனியாகில் உயுத்தமுண்டாம் இரண்டு யோனியும் பெண்யோனியாகில் உத்தமம் ஸ்திரீயோனியாய் புருஷன் புருஷயோனியாகில் மறுதலையுண்டாம் இவ்வகையால் யோனிப்பொருத்தம் பார்ப்பது இராசிப்பொருத்தங் கொள்ளும்படி ஸ்திரீராசியில் நின்று புருஷராசியளவு மெண்ணினால் எழாமிராசியாகிலும் எழுக்குமேற்படினு முத்தமம் எழிற்குறையலாகாது

இராசி அதிபதிப் பொருத்தம்.

உண்டாய மறிக்குந் தேட்கு முறவுமாண் விடையாழ் கோல்பெ
குண்டைகோக் குறவ வீணை கொடியதோ ளாதி யாறுங் [ண்
தண்டுபெண் டனக்குச் சிங்க மீனெழித் தெல்லாஞ் சார்வாம்
நண்டுச்கு விடையாழ் வில்மீ னரிநட் பென்று சொல்லே.

(இ-ள்.) முன்பே நட்புச்சொல்லி யிருக்கவும் விசேஷித்து அதிபதிப் பொருத்தஞ் சொல்லும்படி மேஷம் விருச்சிகத்துக் குறவு மகர, ரிஷப, மிதுன, துலாங், கன்னி இவ்வைந்து மென்பது ரிடப துலாத்துக்குறவு மிதுன விருச்சிகமுதல் ஆறுராசியாம். மிதுனத்துக்குங் கன்னிக்கு முறவு சிங்கமு மீனமு மொழிய மற்றெல்லாராசியு மென்பது கடகத்துக்கு ரிடப மிதுன தனுசு மீன கன்னியுமுறவு.

சொல்லிய சிங்கத் துக்குச் சுற்றமீன் மேட மாகும்
வில்லுமீன் றனக்குக் கும்பம் விடைமுத லாறு நட்பாங்
கொல்லைமான் கும்பத்துக்குக் கோதையாழ் விடைமீன் விற்கோ
லல்லல்மா குழலாய் கேண்மீ னதிபதிப் பொருத்த மாங்கே.

(இ-ள்.) சிங்கத்துக்குறவு மீனம். மேஷம் தனுசு, மீனத்திற்கு கும்பம், ரிஷபமுதலாறு ராசியுமுறவு. மகர கும்பத்திற்கு கன்னி மிதுன, ரிஷப, மீன தனுசு துலாமுறை வென்பது. எ-று.

இராசி வசியம்.

பொருந்திடு மறிக்குச் சிங்கம் விருச்சிகம் பொரு விடைக்கு
விருந்துநற் கடகங் கோலா மிதுனத்துக் கரிவை யாகுந்
திருந்திகற் கடகத் துக்குத் தேட்சிலை சிங்கத் துக்குக்
கருஞ்சுறு வசிய மாகுங் கன்னிக்கு விடைமுன் பொன்னே.

(இ-ள்.) மேடத்துக்குச் சிங்கமும் விருச்சிகமும், ரிஷபத்துக்கு கடகமுந் துலாமும், மிதுனத்துக்குக் கன்னியும், கடகத்துக்கு விருச்சிகந் தனுசும், சிங்கத்துக்கு மகரமும், கன்னிக்கு ரிஷப மீனமும் வசியமென்றது. எ-று.

பொன்னுப் துலைக்குப் புல்லாய் பொருந்துமே ளதற்கு நண்டா
கன்னியு வசிய மாகுங் கார்முக மதற்கு மீனுஞ் [ங்
சொன்னவில் காத் துக்குக் கும்பமாம் கும்பத் துக்கு
மன்னுமீன் மீனத் துக்கு மகரமும் வசியர் தானே.

(இ-ள்.) துலாத்துக்கு மகரமும், விருச்சிகத்துக்குக் கடகமும், கன்னியும், தனுசுக்கு மீனமும், மகரத்துக்குக் கும்பமும், கும்பத் துக்கு மீனமும், மீனத்துக்கு மகரமும் வசியம். எ-று. 197

ரச்சுப் பொருத்தம்.

வைச்சான் மதியிற் பாதி போல்மூன்று வரையைக் கீறி
மெய்ச்செய்த வரையின் மேலே விளங்குநால் வரையுங் கீறி
யச்சுவினி முதலாய் வைத் துயிர்ச்சுவை யடைவே யெண்ணி
யுச்சிட விருவர் நாளு மொருவரை யுறுமேற் கேடே.

(இ-ள்.) ஒத்தகிலத்திலே சந்திரன் பாதிபோலே மூன்றுவரை யைக்கீறி யதிலே குறுக்கே நாலுவரையுங்கீறிய அது இருபத்தே ழுரையுமாகில் முதல்வரையில் அசுவதியைநாட்டி இருபத்தேழு நாளையுமெண்ணுவது எண்ணிச் சென்றால் ஸ்திரீநாளும் புருஷ நாளும் ஒருவரையிலு மாகாதென்பது. எ-று. மேலுஞ் சிறப்பித் தது அதனால் அசுபதியும் ஆயிலியமும் மகமுங் கேட்டையும் மூல மும் ரேவதியும் இந்த ஆறுநாளும் அடிக்கயி றென்றும், பரணி பூசம், பூரம், அனுடம், பூராடம், உத்திரட்டாதி இவையாறுங் குர ங்கிற் கயிறென்றும், கார்த்திகை, புநர்பூசம், உத்திரம், விசாகம், உத்திராடம், பூரட்டாதி இவை ஆறும் வயிறென்றும், ரோகணி, திருவாதிரை, அத்தம், சோதி, திருவோணம், சதைய மிவை ஆறுங் கழுத்தென்றும், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் இம்மூ ன்றும் சிரசென்றும் பெயரா மிவையெல்லாந் தம்மிற் பொருந்தாது.

உறங்கயி ரடியதாகி லொண் பொருட் கேட தாகும்
குறங்கினிற் கயிற தாகினிற் கூறுக மலடி யென்றுங்
கிறந்தரும் வயிற தாகி னிச்சய மக்கள் சாவாம் [சாம்
சிறந்தவான் கழுத்த தாகிற் கொழுநன்சாஞ் சிரத்திற் பெண்

(இ-ள்.) அடிக்கயறால் பொருள் நாசமாகும், குறங்காகில் மல டாகும், வயிறாகில் புத்திர நாசமாகும், கழுத்தாகில் பத்தா மரண மாம், முகடாகிற் பெண் சாகும், இவ் வகையால் ரச்சு கண்டு கொள்க. 199

ரச்சுக் கயறு.

மிருகசீரிடம்.		சித்திரை.		அவிட்டம்.	
ரோ	திருவ	அஸ்	சுவா	திரு	சதைய
கிருத்	புநர்பூ	உத்	விசா	உத்	பூரட்
பரணி	பூசம்	பூரம்	அனு	பூரா	உத்திர
அசு	ஆயிலி	மகம்	கேட்	மூல	ரேவதி

வேதப் பொருத்தம்.

சாந்தமுச் சதிர மாகத் தலத்தினிற் கீறி யத்தி
சாய்ந்தமுன் னான்குங் கீறி யமைந்த வேதக் கயிற்றிற்
சேர்ந்தமா மூலை வைத்துத் தெரிந்தெண்ணத் தெரிவை நாளு
மாந்தநாட் டானு மேக வரையுரின் மணங்கு காணே.

(இ-ள்.) ஒத்த நிலத்திலே முச்சதுரமாகக்கீறி அதின்மேலே முன்னான்கு வரையுங் கீறிய வேதக்கயிற்றில் இருபத்துநாலும் மூன்று மூலையுமாக இருபத்தேழுங் கண்டு அதில் அசுவதியை ஒரு சூலையிலே நாட்டி ரேவதியீறாக வெண்ணினால் இருவர்நாளு மொரு வரையி லுறலாகாது மேலும் சிறப்பித்தது அதனால் அசுவதி மகம் மூல மிவை தம்மிற் பொருந்தாதென்க. பரணிக்குக் கேட்டைபகை, கார்த்திகைக்கு அனுஷம், ரோகணிக்கு விசாகம், மிருகசீரிடத்துக்கு சோதி, திருவாதிரைக்கு அவிட்டம், புநர்பூசத்துக்குப் திருவோணம், பூசத்துக்கு உத்திராடம், ஆயிலியத்துக்குப் பூராடம், பூரத்துக்கு ரேவதி, உத்திரத்துக்கு உத்திரட்டாதி, அத்தத்துக்குப் பூரட்டாதி, சித்திரைக்குச் சதையம் பகை. ஆதலால் பொருந்தாது இச்சொன்ன நாட்களொழிய மற்றுள்ள நாட்களெல்லாம் பொருந்தும். எ-று. 203

வேதக் கயிறு.

மகம்.

ஆயிலியம்
பூசம்
புநர்பூசம்
திருவாதிரை

பூரம்
உத்திரம்
அஸ்தம்
சித்திரை

மிருகசீரிடம்
ரோகணி
கிருத்திகை
பரணி
அசுவனி

சுவாதி
விசாகம்
அனுடம்
கேட்டை
மூலம்

ரேவதி
உத்திரட்டாதி
பூரட்டாதி
சதையம்

அவிட்டம்
திருவோணம்
உத்திராடம்
பூராடம்

விருட்சப் பொருத்தம்.

காஞ்சிரம் நெல்லி யத்தி நாவிற்றிண் கருங்கா லிப்பின்
நாஞ்செண் பகமே புன்னை யால்வாகை யரசு வெள்ளி
தீஞ்சுளைப் பலா வெருக்கு மாதளை சிறந்த வில்வம்
பூஞ்சனை மருது தாழை மகிழ்மூங்கிற் பொழிற்றே மாவே.

(இ-ள்.) அசுவதி காஞ்சிரம், பரணி நெல்லி, கார்த்திகை அத்தி, ரோகணி நாவல், மிருகசீரிடம் கருங்காலி, திருவாதிரை செண்பகம், புநர்பூசம் புன்னை, பூசம் ஆல், ஆயிலியம் வாகை, மகம் அரசு, பூரம் விளா, உத்திரம் பலா, அத்தம் எருக்கு, சித்திரை மாதளை, சோதி வில்வம், விசாகம் மருது, அனுஷம் தாழை, கேட்டை மகிழ், மூலம் மூங்கில், பூராடம் தேமா, எ-று.

பொழில்வஞ்சி பலாசு வன்னி மாப்புளி வேம்பி லுப்பை
பழுதின் றிப் பறிமுன் காணப் பால்மரம் பலாசு புன்னை
எழுசம்புப் புகழ்பலா மாவி லுப்பை செண்பக மெருக்கும்
கிழவஞ்சி யரசா லத்தி மாதளை வயிர மற்றே.

(இ-ள்.) உத்திராடம் வஞ்சி, திருவோணம் பலாசு, அவிட்டம் வன்னி, சதையம் மராமரம், பூரட்டாதி புளி, உத்திரட்டாதி, வேப்பு, ரேவதி இலுப்பை இப்படி யிருபத்தேழுநாளுங் கண்டுகொள்க இவையீற்றில் பலாசு, புன்னை, நாவல், மகிழ், பலா, மா, இலுப்பை, செண்பகம், எருக்கு, வஞ்சு, அரசு, ஆல், அத்தி, மாதளை இவைகள் பால்மரம் அல்லாதவை யெல்லாம் வயிரம். எ-று. 202

வயிரமா ணாகிப் பெண்பால் மரமெனின் மைந்த ருண்டாம்
வயிரமா தரிவை யாகி லாம்பலன் மலடி யாகும்
வயிரவ திரண்டு மாகின் மைந்தரும் பொருளு வாயின்
விவரம தொழிந் திரண்டு பாலெனின் வாழ்வுண் டாமே.

(இ-ள்.) புருஷன்வயிரமாய் பெண் பால்மரமாகில் புத்திருண்டாம், பெண் வயிரமாய் புருஷன் பால்மரமாகில் மலடாவார், இருவரும் வயிரமாகில் புத்திரசேதமும், அர்த்தசேதமும் இருவர்நாளும் பால்மரமாகில் இலட்சுமி கடாட்சமுண்டாம். எ-று. 203

பட்சிப் பொருத்தம்.

வாழ்பரி முதலா யைந்தும் வலலூரா திரைமுன் னாறுஞ்
சூழ்வலி யாந்தை யாகுந் துய்யவுத் திரமுன் னைந்துந்
தாழ்விலா வலிய னாகுந் தடம்பனை முதலா யைந்துங்
கோழி யா மோண மாதி யாறுமா மயிலின் கூறே.

(இ-ள்.) அசுவதிமுதல் ஐந்துநாளும் வல்லூறு, திருவாதிரை முதலாறுநாளும் ஆந்தை, உத்திரமுதலைந்துநாளும் வலியன், அனுடமுதலைந்துநாளுங்கோழி, திருவோணமுதலாறுநாளு மயில்.

பட்சிப் பகை.

மயிற்பகை வல்லூ ராந்தை கோழிக்கு மவையே யாகுஞ்
செயிற்பகை வலியற் காந்தை யாந்தைக்கு வலியன் றீதாம்
இயற்றிய வலிய னல்லா தெல்லாம்வல் லூரி னுக்கே
யுயிற்பகை யல்லான் மற்றுங் கொழிந்தவை யுறவா மன்றே.

(இ-ள்.) மயிலுக்கு வல்லூறும் ஆந்தையும் பகை, கோழிக்கு வல்லூறும் ஆந்தையும் பகை, வலியனுக்கு ஆந்தை பகை, ஆந்தை

க்கு வலியன் பகை, வல்லூருக்கு வலியனொழிய மற்றெல்லாமுறவு; (இவை உயிர்ப்பகை) எ-று. 205

ஸதிரீ தீர்க்கம் புருஷ தீர்க்கம்.

அன்றுபெண் பிறந்தநாள் தொட் டாணுநா ளளவு மெண்ணி
நின்றவந் நாட்கள தொட்டு நேரிழை நாளீ ருகச்
சென்றதை யேழிற் றக்கி யிருபததேழ்க் கீய்ந்த சேட [னே.
மன்றலங் குழலாய் தாழ்ந்தோர் மரணம்பின் முன்னென் மன்

(இ-ள்.) பெண்பிறந்த நாளிலேநின்று ஆண்பிறந்த நாளளவும் எண்ணி இதனை யேழிற்பெருக்கி இருபத்தேழுக் கீய்ந்து சேடத்தையறிந்து தாழ்வுள்ள நாள்பிந்த மரணம் முனபுசொன்ன பொருத்தமெல்லாம் ஸ்திரீ பிறந்த நாளிலே தொட்டெனபது. எ-று.

அங்குரார்ப் பணம்.

மன்னிய முளைக்குங் காலம் வரையின்றி மணஞ்செய் நாளில்
முன்னிலேந் தாநாளாக மொழிந்தன ரொழிந்த பின்னுள்
தன்னையு முறைத்தா ரென்று சாற்றுவர் நோன்பு தானு
முன்னைதான் வறைந்த விந்த மூன்றுநா ளைந்து மாமே.

(இ-ள்.) அங்குரார்ப்பணத்துக்கு திதி வார நட்சத்திரங்கள் பார்க்கவேண்டியதில்லை விவாகத்துக்கு யிட்ட நாளுக்கு முன்பிலேந் தாநாள் மூன்றுநாள் கொள்வது அதில் முடியாதாகிலன்று கொள்ளுவது உபனயனத்துக்கும், சீமந்தத்துக்கு முன்னே மூன்றுநாளைந்து நாளென்ன அங்குரார்ப்பணம் பண்ணுவது. எ-று. 207

நட்சத்திர தேவதை.

அஞ்சொல்பா ரதிதுர்க்கை யங்கியயன் றிங்கள்
அரணமா பொன்னுகம் பிருகாத்தின் றுயும்
மிஞ்சயமாவா ருக்கன் விஸ்கர்மன் சோதி
வேலன்வாயு வலாரிய வுணர்புனல் வேந்தன்
கஞ்சமலர் கணபதிமால் சசிகால நிதிமன்
றேனுமுதற் சனியாகக் கடவுளெனக் கொண்டங்
கெஞ்சவிலேப் பசிமுதனு ளிருபத் தேழு
மிவ்வடைவே வபயாராக வெண்ணிக் கொள்ளே.

(இ-ள்.) அசுபதிக்குச் சரஸ்வதி, பரணிக்கு துர்க்கை, கார்த்திகைக்கு அக்கினி, ரோகணிக்கு பிரமன், மிருகசீரிடத்துக்கு சந்தி

ரன், திருவாதிரைக்கு ஈஸ்வரன், புனர்பூசத்துக்கு தேவதைகள், பூசத்துக்கு வியாழம், ஆயிலியத்துக்கு ஆதிசேடன், மகத்துக்குச் சுக்கிரன், பூரத்துக்கு தேவர்கள், பூசத்துக்கு வியாழம், ஆயிலியத்துக்கு ஆதிசேடன்; மகத்துக்கு சுக்கிரன், பூரத்துக்கு பார்வதி, உத்திரத்துக்கு சாத்தான், அத்தத்துக்கு சூரியன், சித்திரைக்கு விசுவகர்மா, சோதிக்கு லட்சுமி, விசாகத்துக்கு சுப்பிரமணியர், அனுடத்துக்கு வாயு, கேட்டைக்குத் தேவேந்திரன், மூலத்துக்கு அசுரர், பூராடத்துக்கு வருணன், உத்திராடத்துக்கு விக்கினேஸ்வரன், திருவோணத்துக்கு விட்டுணு, அவிட்டத்துக்கு இந்திராணி சதையத்துக்கு இயமன், பூரட்டாதிக்கு குபேரன், உத்திரட்டாதிக்கு காமதேனு, ரேவதிக்குச் சனிபகவான் இவைகள் அசுபதி முதலான இருபத்கதழு நாட்களுக்குந் தேவதைகளென்றறிக. எ-று.

திதிதேவதையும், உவாசூழ்ந்த கரணமுஞ் சொல்லியது.

எண்ணிமயன மாலியமணிந்துகந்த
னிந்திரன்சீர்வசுக்கராத் தருமனீசன்
விண்ணில்வெயில் வேள்கசுமுனிந்ததேவர்
மெய்த்தேவர்திதிதேவர் விளம்புங்காலை
கண்ணர்பிரசாபதிசந்திரன் சயந்தனவன்வசுக்கள்
கனமணிபத்திரணியம னிவர்காணதேவ
ரொண்ணுதலாயியமனிடன் பிதிர்க்களராவீச
ருவாச்சூழ்ந்தகாணத்துக் கிறைவரெனவுரையே.

(இ-ள்.) பிர்மா, விஷ்ணு, யமன், சந்திரன், சுப்பிரமணியர், இந்திரன், வசுக்கள், சற்பம், தருமன், உருத்திரன், ஆதித்தன், கலி, காமன், பிதுர்க்கள், விசுவதேவர் இவர்கள் பிரதமை முதலாக திதி தேவதையென்றறிவது. விஷ்ணு, பிரசாபதி, சந்திரன், சயந்தன், வசுக்கள், மணி, பத்திரன், யமன் இவர்கள் சிங்கமுதல் காணதேவதையென்றறிவது. இயமன், பிதுர்க்கள், சர்ப்பம், உருத்திரன் இவர்கள் உவாச்சூழ்ந்த கரண தேவதைகள். எ-று. 209

ஆண் பெண் அலி நட்சத்திர மறிக.

உரைக்கிலத் தமிசமே கணம் பிசித்தோ
டொன்னையுத் திரட்டாதி பூரட் டாதி
தெரித்தபரி யாணிலிங்க மூலஞ் செக்குச்
சிறந்தமான் றலைமூன்றுந் தெளியு மலியென்க

வருட்பரணி முதல்மூன்று மாயில்முதல் நான்கு
மாதிரைசித் திரையாதி மூன்றவிட் டன்தோணி
வருத்தமில பூராட முத்திரா டங்கேட்டை
மற்றவைபெ ணிலிங்கமென வழுத்து மாதே.

(இ-ள்.) அத்தம், புனர்பூசம், பூசம், திருவோணம், அபிசித்து, அனுஷம், உத்திரட்டாதி, பூரட்டாதி, அசுவதி இவை யொன்பது நாளும் புருஷ நக்ஷத்திரம். மூலம், சதையம், மிருகசீரிடம் இவை மூன்றும் நபஞ்சகம். பரணி, கார்த்திகை, ரோகணி, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், திருவாதிரை, சித்திரை, சோதி, விசாகம், அவிட்டம், ரேவதி, பூராடம், உத்திராடம், கேட்டை இவை கசு-நாளும் பெண்ணிலிங்கமென் றறிவது. எ-று. 210

தெருட்சி நட்சத்திரப் பலன்.

மாவிதவை யாம்பரணி மைந்த ருண்டா
மலடிகார்த் திகைநன்மை யுரோகணி மகசிரத்தில்
மேவுகொழு நற்கினியள் செங்கை வெப்பு
மிகுபுநகதஞ் சுகம்பூசம் விளங்கிய நற்சீராம்
பூவாயில் வயிறிழவு மகங்கணவ னல்லன்
பூரமக வில்லைப்பய னுண்சித்தி ரத்திற்
றேவிநலம் பெரியளத்தஞ் சித்திரைநல் லறிவாந்
தீபத்திற் குடும்பிமுறம் விதவையெனத் தெருண்டால்.

(இ-ள்.) அசுபதி திரண்டால் விதவை, பரணி புத்திரர் உண்டாம், கார்த்திகை மலடி, ரோகணி நன்மையுண்டாம், மிருகசீரிடம் பத்தாவுக்கினியள், திருவாதிரை வெம்மை, புனர்பூசம் சுகம், பூசம் சீருடையாள், ஆயிலியம் வயிறிழிவு, மகம் பத்தானல்லவன், பூரம் புத்திரர்க்காணி, உத்திரம் பிரயோசனமுண்டு, அத்தம் நன்மை, சித்திரை நல்ல அறிவு, சோதி குடும்பி, விசாகம் விதவை. எ-று.

தெருளனுட னோய்கேட்டை பரத்தை மூலஞ்
சிறந்த பாலுடையவள் செழும்பூ ராடம்
புரியவடி யார்கெடுவு ருத்தி ராட
முயர்தனஞ் செயுமோணம் புண்ணியத்தை யுடையவள்
வருபொரு ளுண்டாம விட்டஞ்சதைய நிதியிழக்கும்
வாய்ந்தபூ ரட்டாதி மலடி யாக்கும்
பெரியவுத் திரட்டாதி வறுமை யாக்கும்
பிணிதோணி தெருட்சிநலம் பேசுங் காலே.

(இ-ள்.) அனுடம் வியாதி, கேட்டை பரஸ்திரீ, மூலம் பாலு டையாள், பூராடம் அடியார்க்கெடும், உத்திராடம் தனமுண்டாம், திருவோணம் பாக்கியமுடையவள், அவிட்டம் அர்த்தமுண்டாம், சதையம் அர்த்தநாசனம்; பூரட்டாதி மலடி, உத்திரட்டாதி வறு மை, இரேவதி வியாதியஸ்தராவார்கள். எ-று. 212

திதிபலன்.

காலமுதற் பக்கத்திற் றெருளிற் கள்ளி
கவினிரண்டின் முன்றின்பங் கருதா ருண்டாம்
நாவில்மகப் பேறஞ்சி லாறு சாரம்
நற்குழவி பெறுமேழில் நாலிரண்டிலி ழக்குஞ்
சாலவரும் நவமியினி லறஞ்செய்யும் பத்திற்
றருபலனும் பதினொன்றிற் பன்னிரண் டிற்கிறல்
மேலுறு பன்மூன்று தனைப்புகழு மீரேழ்
மிகுகோரம் பதினைந்தின் மிடுபடுமெல் லியலே.

(இ-ள்.) பிரதமைக்கு கள்ளி, விதியை அழகு, திருதியை இன் பம், சவுத்தி சத்துருக்களுண்டாம், பஞ்சமி புத்திரருண்டாம், சஷ் டி ஆசாரம், சப்தமி புத்திரருண்டாம், அஷ்டமி பெற்றிழக்கும், நவமி வாழ்வு, தசமி தருமஞ்செய்வாள், ஏகாதசி பலமுடையவள், துவாதசி கோபமுண்டாம், திரயோதசி தன்னைப்புகழும், சதுர்த்தசி சோரஸ்திரீயாம், பௌர்ணமி இடருண்டாக்கும். எ-று. 213

இராசிவாரபலன்.

மெல்லிமரி பரத்தைகள்ளி விடையாழ் சோர
மிகுமலவ னேக்கமீலி விறலரியும் பெண்ணு
செல்வமிகு மிடிதுலேதேள் பரத்தைக் கள்ளி
திண்சிலைமான் கற்புநிதி குடமீன் றீதாம்
பல்கதிரோன் வாகமர வில்லை திங்கள்
பத்தினியாஞ் சேய்விதவை பல்சிறுவர் புதற்குச்
செல்வமிகுங் குருவெள்ளி யழகு மிடிகாரி
தெருண்டவர்தம் பலந்தன்னைத் தெரிந்துரைக் குங்காலே.

(இ-ள்.) மேஷம் உதயத்தில் திரண்டால் பரஸ்திரீயாம், ரிஷ பம் கன்னி மிதுனம் சோரமுண்டாம், கடகம் துட்டை, சிங்கங் கன் னி நிதியுண்டாம், துலாம் மிடி, விருச்சிகம் பரத்தை, தனுசு கன்னி மகரம் கற்புடையவள், கும்பம் அர்த்தமுண்டாம், மீனம் தீதுண்டு,

வாரத்தில், ஞாயிறு புத்திரரில்லை, திங்கள் பதிவிரதை, செவ்வாய் விதவை, புதன் புத்திரருண்டாம், வியாழம் தனமுண்டாம், வெள்ளி அழகுண்டாம், சனி மிடிபடும், எ-று. 214

கிரக நோக்கு.

சேரு முதைய மேழி டங்கள் முழுநோக் கென்பான் றிகழ் முக்காற்
பாரி லைந்து மறை நோக்காம் பத்து நான்குங் கால் நோக்கா
மாறில் மூன்றுபன் னொன்று மறைக் கால்நோக்க மாறெட் டும்
நாரி யிரண்டும் பன்னி ரண்டு நயன மில்லை நவக்கோ ளே.

(இ-ள்.) உதையராசியும் எ-ம்ராசியும் மூழு நோக்கு கூ-ம் ராசி முக்கால்நோக்கு ரு-ம்ராசி அரைநோக்கு கச-ம் கால்நோக்கு சகக-அரைக்கால்நோக்கு உ-கூ-அ-கஉ நோக்கில்லை யென்பது இவை எல்லாம் தந்தமாட்சி நிலங்களில் நின்றபோது இதிற்சொன்ன நோக்கு முழுபலம் நட்பில் நின்றபோது சொன்ன இவை யீற்றில் நாலிலொன்று குறையும் உச்சத்தில் பத்திலொன்று ஏழும் பகையில் ஒன்று பாதி நீச்சத்தில் ஒன்றுகால் இவ்வகையெல்லாம் நோக்கென்க.

ஜாதகம்.

நவையிற் குழவி பிறந் திடினு நன்மை தீமை நாடுங் கா
லவமிக் கருப்ப முத லாக வாராய்ந் தறிக வறியா யேற்
பவுனி தன்னிர் சீர் நோக்கும் பொழுது கொள்க வுதைய முயிர்
தவரில் மதிசே ரோடை யுடல் தாமக் கூந்தன் மாமயி லே.

(இ-ள்.) செனித்தவர்களுச்கெல்லாம் நன்மை தீமை விசாரிக்குமிடத்து கெற்பதான முகூர்த்தமாகக் கொள்வது கொள்ளமுடியாதாகில் சிரோதைய மானபோது முகூர்த்தமாகக் கொள்வது பிறந்தபோது உதிக்கின்ற விராசி யுயிரென்றும் ஜென்ம லக்கினமென்றும் அறிவது சந்திரனின்ற விராசியை உடலென்றும் சந்திரலக்கினமென்றுமறிவது. எ-று. 216

மாமன் சிறுவன் றாய் தந்தை மர மைந்து மீ ரைந்தும்
பூமன் காரி மதிவெய் யோனிற் கிற்புகட் கோள் நோக்கி லவே
சோமற் கேழ்சேய் சநி நிற்கிற் றாய்ஞ்சுடற் கேள் பிதா மரணந்
தீவை கோட்க ளுட னுயிரைப் பற்றி நிற்கிற் சிறுவன் சாம்

(இ-ள்.) உதையவிராசிக்கு ரு-மிடம் ல-மிடத்தில் செவ்வா நிற்கில் மாமனுக்கும், சனிநிற்கில் பிள்ளைக்கும், சந்திரனிற்கில் மாதா

வுக்கும், சூரியனிற்கில் பிதாவிற்கும் மாணமுண்டென்க, சுபக்கிரக நோக்கில்லாமல் சந்திரனுக்கு எ-மிடத்தில் செவ்வாயாதல் சனியாதல் நிற்கில் மாதாமரணம், ஆதித்தனுக்கு எ-மிடத்தில் செவ்வாய் சனி நிற்கில் பிதாமரணமென்பது பாபக்கிரகங்கள் உடலையு முயிரையும்பற்றி நிற்கில் பிள்ளை மரணம். எ-று. 217

சாரு முதையர் தனக் காரிற் காதிரா பதற்கேழ் சனி செவ்வாய்
சேரில் மகவும் பிதாவுடன் சாந்திங்க ளாகிற் றுயுடன் சாம்
காரி யுதிப்பச் சேய் நான்கிற் கதிரோ னேழிற் கலந் திடினும்
பாரிம் மகவும் பகற் டடவாப் பாம்பி னுதைப மராக் கிடவா.

(இ-ள்.) உதையத்துக்கு சு-மிடத்தில் ஆதித்தநிற்க ஆதித்தனுக்கு ஏழாமிடத்தில் சனி செவ்வாய் நிற்கப் பிள்ளையும் பிதாவுமரணம், சு-மிடத்துச் சந்திரநிற்கத் தாயுடன் மரணம், உதையத்தில் சனிநிற்க ச-மிடத்தில் செவ்வாய் நிற்க ஏழாமிடத்தில் சூரியனிற்க சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் பிள்ளை அன்றைப்பகலே மரணமென்பது, உதையத்தே ராகு கேதுக்கள் நிற்கப் பிள்ளையன்றிரவே மரணமென்பது. எ-று. 218

கிடைத்தயுயிரோடுடல்தருனுள் வாருநாள் தீதேதற்கொழுமியகோட்
படைத்த நோக்க மின்றெ னினும் பாலன் மரணந் தேயு மதிக்
கடுத்த விருப்பாற் றீய்க் கோளே லன்னை புதல்வ னுடன் வீயுந்
தொடுத்த கூட லாரத் தீண்டிற் றேன்று மகவ மரண மன்றே.

(இ-ள்.) சென்மலக்கினத்திலும், சந்திர லக்கினத்திலும், பாபக்கிரகங்கள் நிற்க சுபக்கிரகம் பார்த்திருந்தால் பிள்ளை மரணமென்பது அமரபட்சத்துச் சந்திரனுக்கு முன்பின் பாபக்கிரக நிற்கத் தாயும் பிள்ளையுமரணம் ஜெனித்த பொழுது தூமாதிப் பஞ்சகிரகஞ்சூழ கிராணந் தூண்டில் பிள்ளையன்றே மரணம். எ-று. 219

சொன்ன பூசஞ் சித்திரைபூ ராட நாளில் மதி தோன் றிற்
பின்னு முதற்கால் நேரும் பிதா தாய் பிள்ளை மாமன் சாம்
பன்னொன் றென் பான் சனிசேயும் பாம்பொன்பதிலும்பிதாமரணம்
பொன்மீனுக்காதலெட் டேழிற் புதல்வன் பொன்றுஞ் சநிசெவ்வாய்

(இ-ள்.) பூசம் சித்திரை பூராடமிந்நாளில் சந்திரனிற்க முதற்காலிலே செனிக்கில் பிதாமரணம, இரண்டாங்காலிலே மாதாமரண மூன்றுங்காலில் பிள்ளைமரணம், நாலாங்காலில் மாமன் மரண மென்பது, கக-மிடம் சு-மிடமாதல் சனி செவ்வாய் நிற்கினும் சு-மிடத்

துப் பாம்புநிற்கினும் பிதாமரணம் இவையெல்லாம் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் நன்மையில்லை. எ-று. 220

செவ்வாய்மூன் றினுடன் பிறந்தார் சனிசேய் வெள்ளி யேழிற் பிள்ளை
தவ்வா மதிய மேழுற் றாய் தந்தை மரணங் கதி ரோழி
லவ்வா யலவ னுதிப்ப வதற் காறு மூன்று தீயக் கோளேல்
மைவார் குழலர் யீரா றில் நற்கோள் நிற்கில் மகன் போமே.

(இ-ள்.) ௩-மிடத்துச் செவ்வாய்நிற்கி லுடன்பிறந்தார் மரணம் எ-மிடத்தில் சனி செவ்வாய் வெள்ளி நிற்கில் பிள்ளை மரணம், சந்திரன் எ-மிடத்தில் நிற்கில் தாய் மரணம் ஆதித்தன் எ-மிடத்தில் நிற்கில் பிதா மரணம், கடக முதையமாக ௬-மிடத்திலும் பாபர் நிற்க கஉ-மிடத்தில் சுபக்கிரகம் நிற்கில் பிள்ளை மரணம். எ-று.

மகவி னுயிருக் காறே ழில் மற்றை யெட்டில் முன் னுன்கில்
மிகவுந் தேயு மதி யுடனே வெங்கோள் நிற்ப கற் கோள்கள்
திகழு நோக்க மின் றேனினுந் தேயு மதிக்கு நா லெட்டிற்
நிகழுந் தீய்க் கோள் நின் றிடினு மெச்ச மரண நிச்சய மே.

(இ-ள்.) உதையத்துக்கு ௬-எ-அ-கஉ மிடத்தில் க்ஷீணசந்திர நிற்க அவனுடனே பாபக்கிரகம் நிற்க சுபக்கிரகம் நோக்கா தொழியினும் க்ஷீணசந்திரனுக்கு ச-மிடம், அ-மிடத்தில் பாபக்கிரகம் நிற்கினும் பிள்ளை மரணம். எ-று. 222

நிச்ச மேவு கதி ருதையம் நிகழ்பாட் டதனி னில வுதிப்ப
வச்சந் தீக்கோட் பன்னி ரண்டின் மருவின் மரண மகற் கேற்பப்
பச்சை மதியுங் கதிர வனும் பாலனுயிர்க்குப் பன்னி ரண்டிற்
கச்சு முலையாங் நிற்பா ரேற் கண்போ மென்ப லொருகண் போம்.

(இ-ள்.) ஆதித்தனுஞ் சந்திரனுங்கூட உதையம்பண்ண அதற்குப் பன்னிரண்டாமிடத்தில் பாபக்கிரகம் நிற்க ஆதித்த னஸ்தமிக்கச் சந்திர னுதையமாக உதையத்துக்கு கஉ-மிடத்தில் சந்திராதித்தர் நிற்க பிள்ளை யிரண்டு கண்ணுங்கெடும். ஒருவர் நிற்கில் ஒரு கண்கெடும் கஉ-மிடத்தில் நிற்கிறவர்களைச் சனி செவ்வாய் நோக்கிற் கண்கெடும். எ-று. 223

போதுமி ராசி யிரண்டி னையும் பொன் னேக் கன்றித்திக்கோட்கள்
சீத மதிய முடனிற் டிற் சிறுவன் குருபுத் திர னல்ல
சாதித் ததிமேல் மறையவர் கோன் சனியே லீனர்க் கீழ்ப் பட்டா
ராதி வணிகர் சூத்தி ரற்கீச யரவேற் புலைய ரவன் றந்தை

(இ-ள்.) சந்திரலக்கினத்தையும், சென்மலக்கினத்தையும் சுபக்கிரகங்க்ள் நோக்காதொழியில் சந்திரனுடன் பாபக்கிரகங்கள் சேர பத்தாங்கள் இன்னுரென்று அறியவேண்டில் சந்திரனுடனே ஆதித்தநிற்கில் பிராமணராதல் க்ஷத்திரியராதலென்க. சனியாகில்யீனராதல் நாலுசாதிக்குங் கீழ்ப்படாரென்க, செவ்வாயாகில் வைசியராதல் சூத்திரனுதலென்க பாம்பாகில் புலையரென்று நிச்சயிப்பது.

தந்த வுடலைச் சனி நோக்கிற் றகரின் மதி சேய் தானிற்க
வந்த குழவி யிரந் துண்ணு மகவி னுடலோ டுயிர் தம்மை
முந்த நோக்கிற் சீர் கேடா முணர்செய் கால வோரையுடன்
றொந்தேன் மொழியாய் சனி கண்டஞ் சேர பிறந்தான் யிறைபுகுமே

(இ-ள்.) சுபக்கிரக நோக்கின்றி யிருந்த சந்திர லக்கினத்தைச் சனி முழுநோக்கு நோக்க சந்திரனும் செவ்வாயும் மேஷத்தில் நிற்கப்பிறந்தான் பிச்சை புக்குண்ணும் சந்திர லக்கினத்தையும் சென்மலக்கினத்தையும் சுபக்கிரகம் நோக்காதொழிய சனி முழுநோக்க பிறந்தான் சீர்கேடனும், செவ்வாயின்காலவோரையில் சென்மத்தில் சனி கண்டங்களில் சந்திர னிற்கப் பிறந்தான் சிறைபுகும். எ-று.

சிறந்த உதையஞ் சனியா யேழ் பாம்பாய் தெரிவை புகர் சேர
இறந்த மதிநாள் பிற வன்ற னிருகாற் கைகள் தறிப் புண்ணும்
பிறந்த வுயிர் காற் சேயாகிற் பெரிய கதிரோ னனி லுதிப்ப
குறைந்த மதிப்பாம் பொரு சாலிற் கூட லுடலு மறிப் புண்ணும்.

(இ-ள்.) சனி யுதையமாக அதற்கு ஏழாமிடத்தில் பாம்பு நிற்க கன்னியிலே வெள்ளிநிற்க அமரபட்சத்துச் சென்றழகின்ற சந்திரனின்றகாலிற் பாம்புங் கூடநிற்கப் பிறந்தான் கையுங் காலுந் தறிப்புண்ணும் செவ்வாயி னங்கத்தே ஆதித்தநிற்க அதுவே யுதையமாகத் தேய்ந்தழிகின்ற சந்திரனும் பாம்பு மொருகாலிலே யுறில் அப்போ பிறந்தானுடல் பிளப்புண்ணும். எ-று. 226

உடர்கட் கதிர்பாம் புறக் காரி யுதிப்பப் பிறந்தா னுடல் பிளகா
மடிக்கண் ணரவ னேக்க மதி யிழந்த மகப்பேர் தலை யறுமென்
கடித்த காதேட் சேய் நிற்பச் சனிவந் துதிப்பப் புதன் மூன்றிற்
குடிக்குமொருசே யெலைப் பிறந்தான் குறளாங் கோவைச்செவ்வாய்

(இ-ள்.) அமரபட்சத்து அமாவாசையின் கடக சந்திர லக்கினத்துநிறை சந்திரனுடனே ஆதித்த நிற்க அவர்களுடன் பாம்புநிற்க சனியுதையமாகப் பிறந்தான் உடல் பிளப்புண்ணும் ராகு கேதுக்கள்

நோக்குப்பெற்ற க்ஷீணசந்திரன் சுடற் சிலவாகப் பிறந்தான் தலை அறுப்புண்ணும் மேஷத்திலாதல் விருச்சிகத்திலாதல் செவ்வாய் நிற்க சனி உதையமாக உதையத்துக்கு மூன்ருமிடத்தில் புதனிற்க பிறந்தான் குருளுறவாம். எ-று. 227

வாய்ந்த கோட்க ளோ ரேழி லாறு மருத்த மதுச் சங்
காய்ந்த மடங்க லுதித்திடி னுங் கனக னுதிப்ப வைந்துக் கோ
ளேய்து முச்ச மெய்தி டினு மிசைந்த நாட்கோ ளுச்ச மற
வாய்ந்த குடத்திற் கரு திப்ப வரினு மரசர்க் கரசா மே.

(இ-ள்.) ஆதித்தன் முதலான ஏழு கேட்களினும் ஆறுகோட்கள் தந்தா முச்சத்து நிற்ப சிங்கம் உதையமாக வியாழம் நிற்கப்பிறந்தானும் ரு-கோள் தந்தா மூச்சத்து நிற்க வியாழ முதையமாகப் பிறந்தானும் ச-கோள் தந்தா முச்சத்துநிற்க கும்பத்திற் சுக்கிரனுதையமாகப் பிறந்தானும் அரசர்க்கரசனும். எ-று. 228

அரசாம் நண்டில் நிறைந்த மதி தன்னை யாறு கோள்கள் நோக்கப்
புரைசால் குண்டை யுதித் திடினு மொருகோ ளுச்ச முறந் தோர்
கரைசே ராட்சி நட்பெ னினுங் கன்னி புதனுய்க் கயற் புகராய்
விரைசேர் தனுபொன் மேவி டினு மிக்கோர் நட்பில் வேந்தா மே.

(இ-ள்.) கடகத்துப் பூரணச்சந்திரனை கூ-கோள்கள் நோக்க ரிஷப முதையமாகப் பிறந்தவனும் சுபக்கோளில் ஒருகோ ளுச்சத்துநிற்க மற்றக்கோள்கள் தந்தம் நட்பினு மாட்சியினும் நிற்கப்பிறந்தானும், கன்னியில் புதனிற்க மீனத்தில் வெள்ளி நிற்க தனுசில் வியாழம் நிற்க மற்றக் கேள்கள் தந்தம் நட்பினு மாட்சியினும் நிற்க பிறந்தானும், இராச்சிய பரிபாலனம் பண்ணுவான். எ-று. 229

வேந்த னலவன் தனி லுதிப்ப வெய்யோன் மேடம் விடைபுகர் மால்
சேர்ந்து வரினும் விடை மதியாப் சிங்கங் கதிராய்ச் சிலைக்குருவா
யாய்ந்த வெள்ளி யுதையத்து ளம்பொற் காலிற் பிறந்தி னினும்
வாய்ந்த மதிக்கா ரேமெழட் டில் மாற்பொன் புகரேல் மன்னனு மே.

(இ-ள்.) கடகத்தில் வியாழமுதையமாக ஆதித்தன் மேஷத்து நிற்க வெள்ளியும் புதனும் ரிஷபத்து நிற்கப் பிறந்தானும் சந்திரன் ரிஷபத்து நிற்க ஆதித்தன் சிங்கத்து நிற்க விறாழந் தனுசில் நிற்க, வெள்ளி யுதையமாக வியாழம் அங்கசந்து ஜாதகமானலும் சந்திரனுக்கு கூ-மிடத்தில் புதனிற்க சாதகமானவனும் சத்துருக்களையும் ஜெயித்து ராச்சிய பரிபாலனம் பண்ணுவான். எ-று 230

பன்னு மகரஞ் சனிமரி யேய் மதியங் கடகந் துலை வெள்ளி
பொன்னன் வில்லிற் கதிர் சிங்கம் புலவன் வீணை பொருந் திடி
சுன்னு மதியு முச்ச முறச் சுடரும் புதனு முயிற் காரில்
மின்னும் புகற்பொன் றம் மிடத்தே மேவு மெனினு மிக வாழ்வே.

(இ-ள்.) சனி மகரத்தும், செவ்வாய் மேஷத்தும், சந்திரன் கடகத்தும், வெள்ளி துலாத்திலும், வியாழம் தனுசினும், ஆதித்தன் சிங்கத்தினும், புதன் மிதுனத்தினும் நிற்க சனியுஞ் சந்திரனுந் தந்தாமுச்சத்தில் நிற்க, ஆதித்தனும் புதனும் ஜென்ம லக்கினத்துக்கு ௧௰மிடத்தே நிற்க, வெள்ளி வியாழமுந் தந்தா மாட்சியிலே நிற்கப் பிறந்தான் சத்துருக்களைச் செயித்து அதிக செல்வத்துடன் இராச்சியபரிபாலனம் பண்ணுவான். எ-று. 231

வாழும் வெள்ளி மிதுனத்து மதிபொன் தனுவில் மண் மகன் றேள்
சூழ மருவை புத னுதையங் தோன்றி லரசாஞ் சுடரி ரண்டும்
தாள்வி லுச்ச முறலவையே யுதிப்பக் குளிர் பொன் சனி குடத்தில்
ஆழில் மேதை தேட் செய்வந் தெய்தப் பிறப்பி னிறைபா மே.

(இ-ள்.) வெள்ளி மிதுனத்துநிற்ப சந்திரனும் வியாழமுந்தனுசில்நிற்ப செவ்வாய் விருச்சிகத்தில் நிற்க கன்னி யுதையமாகப்பிறந்தவன் எல்லாத் தேசமும் ஆளுவானென்பது, சந்திராதித்த ரிருவரும் தந்தா முச்சத்து நிற்ப அவையே யுதையமாக வியாழங் கடகத்தில்நிற்க, சனி கும்பத்துநிற்க, புதன் மிதுனத்துநிற்க, செவ்வாய் விருச்சிகத்து நிற்கப் பிறந்தான் எல்லாத் தேசத்திற்குஞ் சக்கிரவர்த்தியாவான். எ-று. 232

இறைவன் சேனைத் தலைவனுவா மூக்கோ லுச்ச மெழிற்புகர் பொன்
னறைய முச்ச மச்ச மூமா மருக்கன் மேடந் தனுக் குருவாம்
பிறையை வெள்ளி எழி டத்தே நோக்க காலிற் பிறந்தா னேற்
பொறையும் வலியு மிரு நிதியும் புகழுங் கொடையு மிகப் பூணும்.

(இ-ள்.) மேடத்தில் சூரியநிற்க, தனுசில் வியாழம்நிற்க, சந்திரனுக்கேழாமிடத்திலே சுக்கிரனிருந்து பார்க்க வொருகாலிற்சேர பிறந்தவன் பொருமையும், வலுவும் நவரத்தினங்களும், கீர்த்தியும், தனமும், நகையுமுடையவனுகை விருப்பான். எ-று. 233

பூண்டவிடையில்மதிக் கேழிற் பொன்னுய் பொற்கா லிற் பிறந்தான்
றாண்டபுதற்காற்பொன் னுதிப்பச் சுறுச் சேயடை யத்தோ ன்றின்
நீண்ட குருவு நிறைவு மதியுஞ் சேர நெடுமோற் பெண் சேர
ஆண்ட புகரி னுடையத்து வரிநுங் கல்வி னியா மே.

(இ-ள்.) சந்திரன் ரிஷபத்துநிற்ப அவனை ஏழாமிடத்தே வியாழம் நோக்க, வியாழ முதற்காலிற் பிறந்தானும், வியாழ முமையமாகச் செவ்வாய் மகரத்து நிற்ப, சக்கிரன் அங்கசத்துப் பிறந்தாலும் வியாழமும் நிறைமதியுங்கூடி நிற்க, கன்னியிலே புதநிற்க, வெள்ளி யுதையமாகப் பிறந்தானு லோகாதிபதியுமாய் கல்விக்கரசனுமாவன்.

நிதியு டைப் புகர்மீ னுள நெடுங்குரு வுதிப்ப நீண்ட
மதியினைத் தீக்கோ ணோக்க மாநிதித் தலைவ னுகும்
கதியுடைப் புகர்பொன் றிங்கள் கலந்திடக் காரி தூங்க
லுதையமாய் பிறந்தான் வாழி யொருவற்கு மொன்று மீயான்.

(இ-ள்.) சுக்கிரன் மீனத்து நிற்க, வியாழமுதையமாக வளர் மதியை தீக்கோள் நோக்கப் பிறந்தவன் சீமானும், வளர்மதியைச் சுக்கிரன் வியாழம் நோக்கத் துலாத்தில் சனி யுதையமாகப் பிறந்தவன் தனுதிபதியா யொருவற்கு மொன்றுமீயான், எ-று. 235

ஒன்றிய மதிக் கிரண்டு பாலும்நற் கோட்க ளுண்டேல்
என்னும்வாழ்ந் திடுமென் முன்னேல் முந்தியன் பின்றல் பின்னே
நன்றிரு பாலு நற்கோள் நின்றிட வுச்சக் கோட்கள்
அன்றவை நோக்கத் தோன்று மாயிழை யரசி யாமே.

(இ-ள்.) வளர்மதிக்கு முன்னும் பின்னும் நற்கோள்கள் நிற்கப் பிறந்தவன் மரிக்குமளவுஞ் செல்வனும் சுக சந்திரனுக்கு முன்னே நிற்கில் பாலியத்தில் ஸ்திரீயுண்டாம் பின்னே நிற்கில் விர்தாப்பியத்தில் ஸ்திரீயுண்டாம் சந்திரலக்கினத்தை சுபக்கிரகங்கள் பற்றி நிற்க உச்சக்கோள் அதை நோக்கப் பிறந்தவன் ராஜஸ்திரீயாம்.

அரசுறு புத னுதிப்ப வம்புலிக் கேழ்பன் றென்று
முரவிய புகர்பொன் கூடி னிற்பினு முடலு யிற்கு
விரவியைந் தேழிற் செம்பொன் வெள்ளினின் றிடினு மிக்க
புரவலர் பொற்றச் செல்வங் கல்விவந் தெய்தும் பொன்னே.

(இ-ள்.) புதனுதையமாக நிறைமதிக்கு எ-மிடத்து வியாழம் நிற்கப் பிறந்தவன் சேனதிபதியாம், வியாழமுஞ் சுக்கிரனுங்கூடி நின்றாலும் உடலுக்கு முயிருக்கும் ரு-மிடத்திலும், எ-மிடத்திலும் வியாழமும் சுக்கிரனுங்கூடி நிற்கப் புதனுதயமாகப் பிறந்தவன் அரசர்கள் போற்ற செல்வமுங் கல்வியு முடையவனுவான். எ-று.

பொன்னுடன் வெள்ளி புந்தி பொலிவுட நோக்க வந்த
மின்னிளங் குழவி தன்மேல் வலிந்ததீக் கோள்க ணோக்குப்

பன்னெடுங் கதிர்மாள் வீசும் மகலவன் றன்னைக் கண்ட
துன்னருள் போல மாய்ந்து சுகமிகப் பெருகு மன்றே.

(இ-ள்) வியாழமுஞ் சுக்கிரனும் புதனும் நோக்கப் பிறந்தவன் பாபக்கிரகங்கள் செய்யுந் தன்மைகள் ஆதித்தனைக் கண்ட யிருள் போல நீங்குமென்பது. 238

விஷம்- அயனம்- விஷ்ணுபதம் -சடாதாரிமுகம்

பெருவிஷ மறிகோல் நண்டு மகரமு மயனப் பேரா
மருவிடை குடங்கேதள் விண்டு பதமென்ப வரிவை வில்மீன்
றருமிது நங்க ணன்குஞ் சடாதாரி முகமு மென்க
இரவினில் வினை வுண்டாகும் பகல்வினை வில்லை யென்னே.

(இ-ள்.) சித்திரை அற்பிசி விஷமென்றும், ஆடி தை அயனமென்றும், ஆவணி வைகாசி மாசி கார்த்திகை விஷ்பதமென்றும், புரட்டாசி மார்கழி பங்குனி ஆனியும் சடாதாரி முகமென்றறிக. இந்த பன்னிரண்டு மாதங்களும் இரவினிற் பிறந்தால் வினைவுண்டாகும் பகலிற் பிறந்தால் வினைவில்லை. எ-று. 239

வருடாதி சித்திரை மாதம்-௧௨.

விளங்கிய கதிரோன் வாரஞ் சிறுமழை வெள்ளத் திங்கள்
களங்கொள்சேய் கலகம் புந்தி காற்றுப்பொன் கால நன்றும்
வளம்பெறு வெள்ளி வெள்ள மந்தனில் மழைகே டாகுந்
தெளிந்தசங் கிராந்தி விட்டி வெட்டுவா விருத்தை தீதே.

(இ-ள்.) வருடாதி சித்திரைமாதம் முதற்றேதி ஞாயிற்றுக் கிழமையாகில் சிறுமழை, திங்கள் வெள்ளம், செவ்வாய் கலகம், புதன் காற்று, வியாழம் நற்காலம், வெள்ளி பெருமழை, சனி மழையில்லை, விட்டி, அஷ்டமி, உவா, விருத்தை இவையுந்தீது. எ-று.

தீதிலுத் திரங்க ளத்தந் திருவோண மவிட்டந் தோணி
யோதுமான் றலையே மூல முத்தமஞ் சங்கிராந்தி
சோதிசித் திரைபார் செக்குப் பூசங்கண் மகவே வாசி
மாதரா யனுடங் கால மந் தீது மற்றே.

(இ-ள்.) உத்திரம்-௩, அத்தம், திருவோணம், அவிட்டம், ரேவதி, மிருகசீரிடம், மூல மிவையீற்றில் சங்கிரம மிருக்கில் உத்தம காலமாம். சோதி, சித்திரை, ரோகணி, சதையம், பூசம், அசுவதி, அனுடம் இவையீற்றில் சங்கிரக மிருக்கில் மத்திமகாலம். பரணி,

கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், பூரம் ங-ம். விசாகம், கேட்டை இவையீற்றில் சங்கிரம மிருக்கில் அதமகாலமென்பது. எ-று.

அ ஃ க ம்.

மற்திரு பூசம் பாருத் திரங்கள் மான் றலையு மேரும்
புற்றா வத்தஞ் சோதி யாதிரை பரணி போங்தை
விற்றதிர் குறையு மாக்க மிக்கவை நிற்கும் விட்டி
சுற்றுவா விருத்தை யெட்டுங் குளிகனுஞ் சுருங்கு மஃகம்.

(இ-ள்.) புனர்பூசம், பூசம், ரோகணி, உத்திரத்திரையம், மிருகசீரிடம் இவை யஃகமேறும். ஆயில்யம், அத்தம், சோதி, ஆதிரை பரணி, அனுட மிவை குறையும். இதில் சொல்லாத நாட்கடொத்து நிற்கும். உவா, ரித்தை, அஷ்டமி, குளிபனிவை அஃகங் குறையும்.

சுருக்கமில் சங்கி ராந்தி சுடர்சனி கிடக்குஞ் சோமன்
றிருக்குடைச் செவ்வாய் நிற்குஞ் செம்பொன் மாலி ருக்கும்
தருக்குடை நடை வயிற்றிற் றாழ்ந்திடுங் கிடையி லஃகம்
உரைத்தவை நிற்கி னிற்கு மொழிந்தவை யுயரு மன்றே.

(இ-ள்.) ஞாயிறுஞ் சனியுங் கிடக்கும் இவையீற்றி லஃகம் தாழும், திங்கட் செவ்வாய் நிற்கும் இவையீற்றி லஃகம நிற்கும் புதனிருக்கும் வெள்ளி நடக்கும் இவையீற்றிலக்கம் ஏறும். எ-று.

உயிர்விடை யிலைமீன் சிங்க மொளியிழை தகரில் வெய்யோ
னியல்புடை வெண்பூ வெண்பட் டணிந்திடு லிவற்றி லேறு
மயல்சிறு சிவப்புச் சாத்து மற்றவை தன்னிற் குன்றுஞ்
செயலள வுபைய நிற்குந் திருந்தாழுஞ் சரத்தி லேறும்.

(இ-ள்.) ரிஷபம், தனுசு, மீனம், சிங்கம், கன்னி, மேஷ மிவையீற்றில் ஆதித்தன் வெண்பூ, வெண்டுகில் சாத்தும் இவையீற்றில் அக்கம் ஏறும். மிதுன, மகா, கட க, துலா, விருச்சிக, கும்ப மிவையீற்றில் செம்பு, செந்துகில் சாத்து மிவையீற்றில் அக்கங்குறையும் உபயராசிகள் நிற்குமென்றும், திரராசிகள் தாழுமென்றுஞ் சராராசிகள் ஏறுமென்றுஞ்சொல்லுக. எ-று. 244

ஏறரி மேடம் வெய்யோ னியற்புலி யுருவா மித்தற்
பாறுமா மனிதர்மீன் சல்லா பாவையில் விடையா மாரி
யாறலைத் திடுமி யாழ்கோல் தேளறிய தாமரசர் தம்மில்
மாறுவா வருடை மற்றும் வந்ததே வந்து நிற்கும்.

(இ-ள்.) ரிஷபம், சிங்கம், மேஷ மிவையீற்றில் ஆதித்தன் புலி யுருவாம் மனிதரெல்லாமாயும், மீன, கும்ப, கன்னி யிவை யீற்றில் ரிஷபமாம் பெருவருஷமுண்டாம், மிதுன, துலக, விருச்சிக மிவை யீற்றில் சிங்கவுருவா மிவை ராசாக்களுக்கு யுத்தமுண்டாம், மகர கடக, தனுசு இவையீற்றி லாதித்தன் வருடையா மிவை முன்மாத த்திலே செய்தவகை செய்யும். எ-று. 245

நின்றசங் கிராந்தி நாடி நேற்பகுத் தொருகூ றென்பா
னென்றுவித் தேறிற் றுக்கி யொருமூன்றிற் கீய்ந்த சேடம்
ஒன்றெனிற் குறையு மஃக மோறிரண் டேறு மூன்றேல்
நின்றிமெ ருக்கன் பாட்டி னிலாவெழும் நிலையிற் றாழும்.

(இ-ள்.) சங்கிரமத்து நாழிகையை இருகூறுக்கி யொருகூறிலே யொன்பதுகூட்டி இதனை ஏழிற்பெருக்கி மூன்றுக்கீய்ந்து நின்றசே டம் ஒன்றாகிற் குறையு,மிரண்டாகி லேறும், மூன்றாகில் நிற்கு மாதி த்தன் அஸ்தமானமாகிலுஞ் சந்திரனுதையமாகிலுந் தாழுமென்பது இவை யெல்லாவற்றையும் பார்த்து மிகுதியாற் பலன் சொல்லுவது.

சங்கிராந்தி பலன்.

தாழ்புபற் பெய்யிற் பெய்யுந் தையுங்கார்த் திகையு மாற்றை
வாழுமைப் பசியி னேடு மார்கழி பெய்யிற் பொய்யாச்
சூழ்சனி யருக்கன் செவ்வாய் சொன்னசங் கிராந்தி யாமேல்
வீழ்புவ லில்லை நற்கோள் வாரவேல் வாரி மென்மேல்.

(இ-ள்.) தைமாதமுங் கார்த்திகை மாதமுஞ்சங்கிரமகாலத்தில் வருஷம்பெய்யில் அம்மாதங்களிலே வருஷமுண்டாம் ஐப்பசி, மார் கழியும் பெய்யிற்பெய்யாது அன்று செவ்வாய், சனி, ஞாயிர், ஆகில் வருஷமில்லை நற்கோள் வாரங்களில் சங்கிரமிருக்கில் பெருவருஷ முண்டு. எ-று. 247

சன்மநக்ஷத்திர பலன்.

மேவுசங் கிரமனுள் முன்பின் மிக்கவர் பிறந்த நாளே
லோவிலா தனத்தைப் போக்கு மொழிந்தநா ளாறு செல்வந்
தாவில்யாத் திரையா மூன்று தனபதி யிறுத்து மாறுங்
கோவினுர் பயனுன் டென்றுங் கொற்றவ னருள்மற் றூரே.

(இ-ள்.) சங்கிரமத்துக்கு நாளும் அதற்குமுன் பின்னாளும் பிற ந்தநாளாகில் அர்த்த ஆனி, அதன்பின் ௬-நாளும் செல்வம், அதன் பின் ௩-நாள் ஸ்தானபோதனம், அதன்பின் ௬-நாள் தனப்பிராப்தி,

அதன்பின் ௬-நாள் ராசபூசை, இவ்வகையால் இருபத்தேழு நாளுங் கண்டுகொள்க இவை பிறந்தநாள் தொட் டெண்ணுவாரு முளர்.

ஆனிமார் கழியின் றேரோ டாடியிற் றணியு வாவில்
வானிடிப் புதிரங் கூடல் மண்கம்பங் கிராணம் வட்ட
மீன்விழுந் திடுத லாலங் கட்டிகள் விழுதல் செய்யிற்
ருனிய துவற்றிற் கஞ்சா திங்களிற் சாய மன்றே.

(இ-ள்.) ஆனி, மார்கழி, கார்த்திகை, ஆடி இம்மாதங்களில்பவு ரணையில் இடிப்புன்திரமாக விழுதல், பூகம்பம், கிராணம், பரிவேடம், நக்ஷத்திரம் வீழ்தல் செய்யில் இம்மாதங்களுக்கு ௫-மாதங்களிலே அஃகமு மறிவுந்தாழும். எ-று. 249

சார்ந்தபங் குனியின் மாசி தையிவிக் குறிக ளுண்டே
லேய்ந்தசந் தனம்பொன் பட்டுக் குறையுமேழ் திங்க டன்னி
லூர்ந்தவைப் பசிபு ரட்டை யுளவெனிற் குதிரை யானை
மாய்ந்திடு மிவற்றிற் கைந்தாங் திங்களின் மயிலே யன்னாய்.

(இ-ள்.) பங்குனி, மாசி, தை இம்மாதங்களில் தலையுவாவில் முன்புசொன்ன குறிகளுண்டாகில் இவை யீற்றுக்கு ௭-மாதத்துக்குள்ளே பொன், பட்டு, சந்தனங்குறையும், ஐப்பசி, புரட்டாசி, யீற்றிலுண்டாகில் இதற்கு ௫-மாதத்துக்குள்ளே யானை, குதிரை நசிக்கும். எ-று. 250

அன்னைசித் திரைவை காசி யவற்றிநு ளேந்தாங் திங்கள்
தன்னினூல் பருத்தி யெள்ளு தானியங் கிழங்கு சாயு [ணெய்
முன்னதா வணியி லுண்டேல் முதிரைவெண் கலநெய் யெண்
தின்னுரு கிழங்கு திங்க ளிரண்டி னுட் குறையுஞ் செவ்வே.

(இ-ள்.) சித்திரை வைகாசி இவற்றில் உளவெனில் அவையீற்றுக்கு ௫-ம் மாதத்துக்குள் நூல், பருத்தி, எள்ளு, தானியப், கிழங்கு இவையெல்லாங் குறையுமென்க. ஆவணிமாதத்தில் முன்புசொன்ன குறியுண்டாகி லதற்கிரண்டா மாதத்துக்குள் முதிரை வெண்கலம், நெய், எண்ணெய், தின்கிழங்கு இவைகுறையும். எ-று.

உத்திராடக் காற்று.

செவ்வைகீழ் காற்றுந் தீதாங் தென்னகர் கோன்பின்னு மாரி
கவ்வைசேர் தென்கீழ் காற்றேல் கலசமும் பசிகோ ளுண்டாம்
வவ்வமில் தென்றற் போரா மில்லையேற் பசியால் மாய
வவ்வலங் குழலாய் தென்மேல் வளிதுளி வந்து போமே.

(இ-ள்.) ஆடிமாதத்தில் உத்திராடத்தினன்று உதையத்திலே கீழ்காற் றடிக்குமாகில் பாண்டியனுக்குப் பொல்லாது பின்மாரி வருஷமுண்டு, கீழ்மூலை காற்றடிக்குமாகில் கலகமும் பசியும் கோளருமுண்டாம் தெற்குக் காற்றாகில் யுத்தமும் பசியுமுண்டாம் தென்மேற்கு மூலைக்காற்றால் விளைவில்லை. எ-று. 252

போதுமேல் காற்றேல் மாரி பொழிந்துநற் கால மாகு
மேதகு வடமேல் காற்றேல் மிருகங்கள் பெருக்க வுண்டாம்
கோதிலா வடந்தை யாகிற் குவலயம் வெள்ளைக் கேடா
மேதகு வடகீழ் கால்முன் மாரியாய் விளையு மெங்கும்.

(இ-ள்.) மேல்காற் றடிக்குமாகில் மாரிபொழிந்து நற்காலமாகும், வடமேற்காகில் மிருகங்களாகிலும், விட்டில், நாவாயப்புழுக்கள் உண்டென்பது, வடகாற்றாகில் பூமியெல்லாம் வெள்ளக்கேடாம் வடகீழ் காற்றாகில் முன்மாரியாய் விளையும். எ-று. 253

எங்குள வளியு மீண்டி யெறிவது வலமே நன்று
மங்கவை யிடத்திற் றீதா மாலியுத் திராட மான
திங்களி லுலாவுங் கூடி னெழின்மிடை யுவா வுற்
செங்கதி ரவனை மேக மறைக்குமேற் சிவக்கு மாரி

(இ-ள்.) அடியிற்சொன்ன காற்றெல்லாம் வலமாக வீசுமாகில் உத்தமமென்றும், இடமாக வீசுமாகிற் பொல்லாதென்றும், உத்திராடத்துடன் உவாவுங்கூடில் உதையகாலத்தி லாதித்தனை மேகமறைக்குமாகில் ஊனமற வருஷிக்கும். எ-று. 254

பஞ்சமிக் குறி.

சிறப்புடை யாடி தன்னிற் சிறந்தமுற் பக்கத் தைந்தில்
விறற்கதிர் வார மற்ப மழைதிங்கள் வெள்ள மாகு
மறப்பரும் பூசல் செவ்வாய் மால்காற்று வியாழ மாரி
குறிப்பரும் வெள்ளி வெள்ளங் கொடுஞ்சனி குறையுங் கொண்டல்,

(இ-ள்.) ஆடிமாதம் பூர்வபக்ஷத்தில் பஞ்சமி ஞாயிற்றுக்கிழமையாகில் அற்பவருஷம், திங்களாகில் வெள்ளம், செவ்வாயாகில் காற்றும், வியாழமாகில் நிறைவிளைவும், வெள்ளியாகில் பெருவருஷம், சனியாகில் விளைவில்லை. எ-று. 255

சோதிக் குறி.

கொண்டல்மந் தாரங் காற்று குவலய முழக்க மின்னல்
நண்டின்முற் பக்கம் வந்த நவமியிற் சோதி ஞளி

லுண்டெனின் மாரி முன்னு முயர்முறந் தசமி தன்னிற்
கண்டில நடுவு பன்னொன் றனுடமேற் கடையிற் பெய்யும்.

(இ-ள்.) ஆடிமாத பூர்வபக்ஷத்தில் நவமியுஞ் சோதியுங்கூடின நாளில் மந்தாரமாதல், மழையாதல், மின்னலாத லுண்டாகில் முன் வருஷமாம். தசமியும் விசாகமுங் கூடினநாளில் இக்குறியுண்டாகில் நடுவில் வருஷமென்பது. ஏகாதசி அனுடமுங் கூடினநாளில் பின்னே வருஷமாம். எ-று. 256

ஆடிக் குறி.

கடையிற் றசமிபன் னொன்று ரோணிநாட் கதிரை மேக
யினுமாடிப் பூரம் வெள்ளி பொன் றிங்க ளேனு
மடைமழை யல்லா வார மற்பமென் றுத்தி ராடந்
திடமுடை யானி மூலம் வில்லுமேற் கிடினுந் தீதே.

(இ-ள்.) அமரபிட்சத்து தசமியும் ஏகாதசியுடன் கூடின ரோக ணிநாள் மந்தார முண்டாகில் அவ்வாண்டு வருஷ மிகுதியென்றும் ஆடிபூரம், வெள்ளி, வியாழம், திங்களில்வரில், அடைமழையென்று மல்லாத வாரம்வரில் வருஷ மில்லையென்றும், ஆடி யுத்திராட மாவ ணிமூலமும் மேற்கே வில்லிடில் அவ்வாண்டு விளைவில்லை. எ-று.

கேர்ப்ப வோட்டம்.

தீயபு ராடம் வெய்யோன் சேர்ந்திடு நாளில் வட்டந்
தூயமந் தாரந் தோன்றிற் சுடரவ னாதி ரைக்கே
பாயுநான் தொட்டு முன்பி லொருநாட்குப் பதினு லாகக்
காயும்னேற் கண்ணாய் சொல்லுங் கார்மழை கருப்பந் தானே.

(இ-ள்.) மார்கழி மாதத்தில் ௫௨ உ௰ - நாழிகைக்குப் பின்பு பூராடத்திலே யாதித்தன் சென்று பிரவேசிக்குமென்று முதலாகப் பதின்மூன்றுநாளும் உ௰-நாழிகையும் நிற்கு மிந்நாட்களில் மந்தார மாதல் பரிவேஷ மாதலுண்டாகில் ஆனிமாதத்து எ-தேதி ச௰.நாழி கைக்குப் பின்பு ஆதித்தன் திருவாதிரையிற்சென்று பிரவேசிக்கும் முன்பு சொன்ன குறியுறுநாள் முழக்க முண்டாகில் பின் சொன்ன நாளில் ௫ச-நாளும் அடைமழையென்று இக்கணக்கிலே பார்த்துச் சொல்லுவதென்றவாறு. 258

கிராண பலன்.

கருதும்பூ ரமகம் பூசங்கள் குலாரல் முறம் புரட்டை
விரியுமக் னிமண்ட லமரம் விட்ட மாயில் விளக்கத்த

மருவுங் குதிரை யுத்திரஞ் சித்திரையும் வாயுமண் டலமாந்
தெரியுமி வற்றி லரவுரு மேற்சேரும் பசிநோய் தெரிந்தரியே.

(இ-ள்.) பூரம், மகம், பூசம், பரணி, கிர்த்திகை, விசாகம், பூரட்டாதி இவை யக்கினிமண்டல மசிட்ட மாயிலியஞ், சோதி, அத்த மசுவனி, உத்திரஞ், சித்திரை இவை வாயுமண்டல மிவை யீற்றில் கிராணந்தீ இடில் பசியு நோயுமுண்டாம் மனுஷர் மாய்வர், எ-று.

அறிவன் சதையங் கடை மூல மணி மான் றலையே பூராட
மிறைவன் வருண மண்டல மா மெழிற்பா ராடி பனை கேட்டை
மருவிற் புணர் தம்பி சித்து மன்னு மோன கேந்திர மாம் [பார்
விறைகோ ளரவ மிவற் றுறுமேல் வெள்ளம் பெறுத்து விளங்கும்

(இ-ள்.) உத்திரட்டாதி சதைய மிரேவதி, மூலம், மிருகசீரிடம், பூராடந், திருவாதிரை இவை வருணமண்டல மென்றும் ரோகணி, உத்திராட மனுடங்கேட்டை புநர்பூச மபிசித்து திருவோண மிவை மாகேந்திரமண்டல மிவையீற்றில் கிராணந்தீண்டில் நிறைய வருஷித்துப் பூமியெல்லாம் விளையுமென்றவாறு. 260

விளங்குங் கதிர்கள் தம்மைப் பாம் புண்ணும் புழுது மின் முழக்கம்
வளைந்து கூடில் வளிதுனிவில் மருவில் மாரி வளஞ் சுரக்குந்
துளங்கு மச்சர் செங்கோற் கள் சோமன் றனையு மருக் கனையுந்
தளங்கொ ளரவம் பதினோங் திற் சாரிற் பசிநோய் தப்பாதே.

(இ-ள்.) சந்திராதித்தரைக் கிராணந் தீண்டும்போது மின்னுதல், முழங்குதல், பரிவேஷித்தல், காற்றடித்தல், வருஷித்தல், வில்லிடுதல் செய்யில் வருஷித்துத் தேசமெல்லாம் விளையும் ராசாக்களுக்குச் செய முண்டாஞ் சோமனைக் கிரகணம் பற்றிருக்கையில் பதினொந்து நாளையில் சூரியகிரகணம் வருமாகில் பசியு முண்டாம் மனுஷர் மரிப்பார்கள். 261

தற்பிற் கதிர்கள் தலைவநாகந் தான்கொண் டெழுமேன் மழை தவறு
மொப்ப வுண்ட வழிபா டேயு மிழி லுகம் விளைவுண் டா
மப்பி யுடனே விழுங்கி விழி லரசர் செங்கோற் கழி வுண்டாஞ்
செப்பின் முலையா யூட றுக்குற் றிண்ண முலகஞ் சிதைந் திடுமே.

(இ-ள்.) சந்திராதித்த ருதையங்களிலே இராகு கேதுக்கள் கொண்டெழுமாகில் வருஷமில்லை உண்டாப்போலவு மிழுமாகில் உலகமெல்லாம் விளைவு மஸ்தமான காலத்திலே பற்றி உடனே விழுங்கி

விடில் ராசாக்களுக்கு மரணமுண்டென்பது வூடறுக்குமாகில் பூமிக் கழிவுண்டு, எ-று. 262

ஜன்ம நட்சத்திர தோஷமும் பரிகாரமும்.

சித்தைவிற் பிறந்த பின் முன்னாட் செென்ம ராசி யாய்ச் சேரிற் [ன்று
புதல்வன் மனைவி சோய்பொழில் லாவிபொன்பே ருற்றூ ருடன்போ
மதனை யொழிக்கின் வெண் கலத்தி னெய்வார்த் தாவைப் பொன்னூ
மதியொண் ணுதலாய் சமைத் ததன் வைத்து கொடுக்க மறை [லே
[யோற்கே.

(இ-ள்.) பிறந்தநாள் முன்பின் மூன்றினுஞ், செென்மவாரத்தினுஞ், செென்மராசியிலுங், கிராணந்தீண்டில் விருட்சங், குளம் அநர்த்த மிவையு மழிந்து பந்துக்களுக்கும், புத்திரனுக்கும், ஸ்திரீக்குந் தனக்கும் மரணமுண்டா மது தவிர்க்க வேண்டில் வெண்கலத்தாலே வொரு பாத்திரஞ் செய்து நிறைய நெய் வார்த்து பொன்னாலே பாம்பாகச் சமைத்து அதிலே பிட்டு பிராமணருக்குத் தானமாகக் கொடு, எறு. 263

கிரகவெற்றித் தோர்வை.

மறுவெண் டிங்கட் சனி சேயை விழுக்கின் மன்னர் கோல் வளரும்
பிறைபொன் புதனை விழுங்கிடி னும் பின்னும் வெள்ளி வியா ழத்தை
யசவுண் டிடினு மனுப் பெரிதா மம்பொன் புகரோன் சனி சேயை
தீரவுண் டிடினும் பசி பெரிதாஞ் செவ்வாய் சனியுண் டிடிற் பெரிதாம்

(இ-ள்.) கிரகணகாலத்தில் சந்திரன், சனி, செவ்வாயை விழுங்கில் ராசாக்களுக்கு மிகவும் ராச்சியஞ்செல்லும், சந்திரன், வியாழம், வெள்ளியை விழுங்கில் மனுப்பெருக்கும், வெள்ளி சனி செவ்வாயை விழுங்கில் யுத்தமுண்டு. எ-று. 264

பேரா மதிக்குச் சேய் புந்தி பொன்னன் வெள்ளி சனி தோற்கிற்
சீரா ராசர் கோலோங் குஞ் சேய்க்குப் புந்தி மதி தோற்கி
லாரா யமைச்ச ரர சழிவா மமைசசர் தோற்கிற் பசி பூசல்
வாரார் முலையா யொன்றெய் நிது மந்தன் றோற்கிற் குறும்பறு மால்

(இ-ள்.) சந்திரனுக்குச் செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, தோற்கில் ராசாக்களுக்குத் தேசமெல்லாஞ் செல்லும், செவ்வாய்க்குப் புதன், சந்திரன் தோற்கில் மந்திரிகளுக்கு மாசர்களுக்கு மழிவுண்டாம், வியாழந் தோற்கில் பூசலாம், சனி தோற்கில் குறும்பரெல்லா மழிவர். எ-று. 165

அறியும் புதற்கு மதி தோற்க லரசர்க் கிடுக்கண் மைச்ச ரேற்
குறையுங் கொண்டற் சேய் சனிகள் தோற்கிற் குறும்பற் கழு வாகு
மறையந்தணர்க்குச்சேய் சனிகள் மதியந் தோற்கின்மழைபெரிதாம்
பொறைவன் புந்தி புகர் தோற்கிற் போகம் விளையும் புகலுங் கால்.

(இ ள்.) புதனுக்குச் சந்திரன் தோற்கில் ராசாக்களுக்கு விச னமுண்டாம், வியாழந்தோற்கில் கொண்டல் குறையும், சேய், சனி, மதி தோற்கில் மழை மிச்சமாம், புதனுக்கு சுக்கிரன் தோற்கில் போகம் விளையும். எ-று. 266

புகர்க்குச் சனிசேய் புதன் றோற்கிற் பொழியு மாரி மதி தோற்கிற்
பகைக்கு மரசர் பொன் றோற்கிற் பசிநோய் பூபற் பல வுண்டா
மிகைத்த சனிக்கு மதி தோற்கில் விளைவு குன்றும் பொன் றோர்கிற்
திகைக்கு பசியாற் புகர் தோற்கின் மழைபொன் சேய்மால் செருப்
[பெரிதாம்.

(இ-ள்.) வெள்ளிக்குச் சனி, செவ்வாய், புதன் தோற்கில் வரு ஷப்பெருக்கமுண்டாம், சந்திரன் தோற்கில் ராசாக்களுக்குப் பகை யுண்டாம், வியாழந்தோற்கில் பசியாதல், வியாதியாதல், பூசலாதல் மனுக்கள் மரணம், சனிக்குச் சந்திரன் தோற்கில் விளைவில்லை, வியாழந்தோற்கில் பசியால் மாயும், வெள்ளி தோற்கில் வருஷமில்லை செவ்வாய், புதன் தோற்கில் யுத்தம் பெரிதாம். எ-று. 267

செருக்குக் குஞ்சிங்க முத லாறிற் சேர்ந்த கோட்கள் வருங் கோளை
பெருக்க வெல்லுங் குட மாதி யாறில் நின்ற பெருங் கோளை [ப்
விறிக்கில் வருங்கோ ளவை வெல்லும் வெற்றி தோல்விமெல்லியலா
யுரைக்கில்வெற்றி புகர் தெற்கி லொழிந்தார் வெற்றி வடக் குறிலே

(இ-ள்.) சிங்கமுத லாறினும் நின்ற கோட்கள் வருங்கோளை வெல்லும், வெள்ளி தெற்குறில் வெற்றி, அல்லாதவர் வடக்குறில் விஜயம். எ-று. 268

வடித்த பொன்னி னுட னதற்கேழ் மந்தன் பாம்பு சேயுறி னுங்
கடித்த சேயோ டா வுறினுங் காரி செவ்வாய் பாம் புறினுந்
தடித்த மீன் றேற் கடையிளே சேவே றரிமுன் சனி வறினு
மிடுக்கண் பெரிதாம் மழை யின்றி யெட்டொன் றுகு மனுவெல்லாம்

(இ-ள்.) வியாழத்துடனு லதற்கு எ-மிடத்து சனியாதல் பாம் பாதல், செவ்வாயாதல் நிற்பினும் செவ்வாயோடு பாம்பு கூடினும், சனி செவ்வாயோடு பாம்புகூடினும், மீனத்தில் கடையிலாதல், விரு

ச்சிகத்துக் கடையிலாதல், ரிஷபத்துக்கு நடுவாதல், சிங்கத்துக்கு முதலாதல், சனிநிற்பினும் வருஷமின்றி விளைவுகுன்றி, தேசத்தில் சர்வ பிராணிகளும் வியாதியாலும் பசியாலும் மரணமெய்துவர்.

துர்விடய லக்ஷணம்.

மனுவே றறிதேட் கங்ல் தனுவில் மந்தன் செவ்வாய் வக்கி ரிக்கல்
வினையே பெருகும் வெந் தற்கு வெள்ளிக் கேழில் பொன் மேவில்
துனியாஞ் சுங்கன் படி நடத்தற் சுன்மாற் கெடையே கதிர் நிற்கில்
சனிசேர் கதிக்கு முன் சனிசேய் நடத்திற் பஞ்சம் நாடெல்லாம்.

(இ-ள்.) ரிஷபம், சிங்கம், விருச்சிகம், தனுசு, மீன மிவையிற்றில் செவ்வாயாதல், சனியாதல் நின்று வக்கிரித்தால் விசேஷித்து ராசாக்களுக்கு யுத்தமுண்டாம், வெள்ளிக்கு எ-மிடத்தில் வியாழம் நிற்கில் (சமசத்தம் உதகமென்று பெயராம்) சுபகர்மங்களுக்கு விலக்கப்பட்டன, படி கடத்தலென்பது வெள்ளி தேற்கேபோதல். சனி செவ்வாய் நிற்கில் பஞ்சமாய் மனுஷர் மாய்வர். எ-று. 270

நாடுங் கதிர் பொன் சனி சேயை நணுகி மாதம் நாலரைப் பின்
னேடுங் கோட்கள் வக்கிரமா முரைக்கிற் பிரியு மெட்டரை யாந்
தேடுங் கதிர்க்கு முன் புகரோன் செல்லச் செவ்வாய் பின் செல்லி
லாடுங் கோட்கள் பூராடம் வெள்ளி வெள்ள மழை கால.

(இ-ள்.) வியாழம், சனி, செவ்வா யிவற்றுடனே ஆதித்தன் கூடில் நாலரை மாதஞ்சென்று லிவர்கள் வக்கிரிக்க துடங்குவார்கள் ஆதித்தன்கூடி நின்ற மாதமுதல் எட்டரை மாதத்தில் வக்கிரம் நீங்குமெனக. ஆதித்தனுக்குமுன் வெள்ளிசெல்ல செவ்வா பின்செல்லினும் பூராடத்தில் வெள்ளி நிற்பினும் வெள்ளமாயிருக்கும். எ-று.

கிரகம் பரிவேடக்குறி.

சால வருக்க னுதை யத்துச் சாறில் வட்டந் தான மிவா
மேலை யுச்சி விளை வுண்டாம் வெய்யோன் பாட்டி லா சமிவா
மாலை மதியைப் பரி வேடம் வளைக்கி லடுக்க மழை பொழிதல்
கோல முலையாய் படை வேந்த குடை சாய்ந் திடுதல் பிழைவருதல்.

(இ-ள்.) ஆதித்தனை யுதையகாலத்தில் பரிவேஷிக்கில் வருஷமில்லை, உச்சிகாலத்திற் பரிவேஷிக்கில் விளைவுண்டாம், மத்தியான காலத்தில் பரிவேஷிக்கில் அரசருக்கழிவுண்டாம், மாலை மதியைப் பரிவேஷிக்கில் அடுத்து மழைபொழியும், அரசர்க்கீர்த்திக்கு அழிவாகும். எ-று. 272

பிழையாமதியைப்பொன் வெள்ளியுடனே வளைக்கிற் பெருமழையா
மழைதான் றூட்குஞ் சிறி தாகில் மதியைச் சனிசே யுடன்வளைக்கிற்
பழிதான் பசிநோய் பல வுளவாம் பாம்பு தீண்டும் பொழு தளவே
லவுவா மரசர் மதை விட்டா லனைத்து நாட்டுக் கழிவ மே.

(இ-ள்.) சந்திரனைச் சுக்கிரன் வியாழத்துடனே பரிவேஷிக்கில் வருஷம் பெரிதென்க. வட்டஞ் சிறிதாகில் மழைதாழும், சந்திரனை சனி, செவ்வாயுடனே வளைக்கிற் பசியும் நோயும் பெருக்கவுண்டாம் கிரணந் தீண்டும்பொழுது வளைக்கில் ராசாக்களுக்கு அழிவுண்டாம் விட்டபோது பரிசிக்கில் நாட்டுக்கழிவுண்டு. எ-று. 273

நட்சத்திரம் விழுங்குறி.

ஆடு கயல்தேள் தனு சிங்க மெழிமீன் விழுமே லரசழி வாங்
கோடு மகாந் துலைய லவன் கும்ப மக்கங் குறைந்திடு மால்
தேடு மிதுன மந்திரி சாந் தெரிவை யுதையம் பிணி பெரிதா
மோடு மிடப மழை யில்லை யுடுவீழ் குறியென் றுணர்ந் துறையே.

(இ-ள்.) மேடம், மிதுனம், விருச்சிகம், தனுசு, சிம்பம் இவை யுதையமாக நக்ஷத்திரம் விழில் ராசாக்களுக் கழிவுண்டாம் மகரம், துலாம், கடக, கும்ப மிவை யுதையமாகவிழில் மந்திரிமரணம், கன்னியில்விழில் வியாதியுண்டாம், ரிஷபத்தில் விழில் மழையில்லை.

பிறைக்குறி,

உரைசேர் பிறை மீதின் மேடத்தி லுயருந் தெற்கு விடை மிதுனம்
விரைசேர்குழலால் சமநோக்கு மிக்கதெல்லாம்வடக்குயரும் [பசியா
பெரியோர் சொன்ன நெறி யொழியப் பிறைகாண் தோற்றிற் பெரும்
கரைசேர் பக்க மொன் றிரண்டுங் கதிர்பொன் புகரு காண்பி றையே

(இ-ள்.) பங்குனியுஞ் சித்திரையும் பிறைகாணத் தெற்குயரும் வைகாசி ஆனியுஞ் சமனுகும் மற்ற பெட்டு மாதமும் வடக்குயரும் இதிற்சொன்ன நேரொழிட விபரீதமாகில் பூமியெல்லாம் பசியாம லேமாயும், பிறைகாணலாவது பக்கங்களில் விதியையும், கிழமைக ளில் ஞாயிறு, வியாழம். வெள்ளியுமென்ப விசேஷித்துள சதுர்த்த சியில் சுகப்படும். எ-று. 275

மகவோட்டம்.

காணு மாசி கலை மதியங் கருது மகமீ னுன்கி னையும்
பேணுந் தென் பால் மீன் சேரிற் பெரிதா மக்க மிரண்டா மீன்

சூடாமணி உள்ளமுடையான்.

பூணி லொன்று முக்கா லாம் பொருந்து மூன்றிற் பாதிய தாம்
சேனின் வடபால் மீன் சேறிற் செகத்தி லக்கஞ் சிறி தென்ன

(இ-ள்.) மாசிமாதத்தில் மகத்து நின்று சந்திரன் மகநக்ஷத்திரத்திலே தெற்கு மீனச்சேறில் மிகுந்த லக்க மிரண்டாம், நக்ஷத்திரத்திலொன்று முக்காலாம், மூன்றும் நக்ஷத்திரத்தில் ஒன்றுபாதியாம் எல்லாத்துக்கும்வடக்கு நட்சத்திரத்திற்சேரில் ஒன்றுகாலாம்.

வியாழ சரிதை.

சிறிய வேடங் குரு வாகிற் றேச மெங்கும் விளை வுண்டாம்
குரிய குண்டை பொன் சேரிற் கொண்டற் பொழியுங் கோ பல்கும்
பொறிகொள் மிதுனங் குரு நிற்கிற் பொன்முத் தரிதாஞ் சூலா ணுங்
கறவை பூசல் மழை பெரிதாங் கடகஞ் சிங்கங் கடும்பசி நோய்,

(இ-ள்.) வியாழம் மேடத்தில் நிற்கும்போது (ஐப்பசி யென்னு மாண்டாம் அவ்வாண்டில்) வருடங் குறைவறப்பெய்து தேசமெல்லாம் விளையும், ரிஷபத்தில் நிற்கிறபோது கார்த்திகையென்னு மாண்டா மவ்வாண்டில் அடமழை பெய்து காலிபல்கும் மிக கன்று விளையும் மிதுனத்தில் நிற்சிறபோது மார்கழியென்னு மாண்டா மவ்வாண்டில் பொன்னு முத்துங் குறையுஞ் சூல்கொண்ட கற்ப மாணுகப் பிறக்கும் பசு பால்கறக்கும் யுத்தமுண்டாம் மழைவுண்டாங் கடகத்திலுஞ் சிங்கத்திலும் நிற்கிறபோது தையென்னும் மாசியென்னு மாண்டா மவ்வாண்டில் விளைவின்றி பசியும் நோயும் பெரிதாகும்.

நோக்கும் பொன்னின் கன்னி யுரில் நூலுந் நூசு மெளி தாகும் [ய்
கோக்குங் கொண்டல் விளையுண் டாங்குறையும் பருத்தி யுப்புட நெ
யாக்குந் துலையின் மழை பெரிதா யாள மெலியு நிறை குறையும்
வீக்குந் தேளில் பசிமிடி நோய் வில்லில் மழைபோர் மிகவுண் டாம்.

(இ-ள்.) வியாழங் கன்னியில் நிற்கும்போது பங்குனி யென்னு மாண்டா மவ்வாண்டில் மிகவும் மழை பெய்து விளைந்து அக்கம்பெரிதாம் நூலும்புடவையு மெளிதாகும் பருத்தி, உப்பு, நெய் குறையுமென்க துலாத்தில் நிற்கிறபோது சித்திரையென்னு மாண்டா மவ்வாண்டில் மிகவும் வருஷம்பெய்து நானவித தானியமு மிக வுண்டாமக்கம் பொருத்து அளப்பனவெல்லா மலிந்து நிறுப்பன வெல்லாங் குறையுமென்க விருச்சிகத்தில் நிற்கிறபோது வைகாசி யென்னு மாண்டா மவ்வாண்டில் வருடமின்றி விளைவுங் குன்றிப் பசிநோய் மிகவுண்டாந் தனுசில் நிற்கிறபோது ஆனியென்னு மாண்டா மவ்

வாண்டில் வருடமிகப் பெய்து குளங்களெல்லா முடைந்துற்காலம் நாற்காலமாய் எங்கும்விளைந்து ராசாக்களுக்கு எங்கும் பூசலுண்டா மென்றவாறு, 278

மிகவி மகரம் பொன் சேரின் மிடியோர் பெரிதாய் விளை வில்லை
யகலுங் கும்ப மடை மழையா யக்கம் பெருக்கு மீனத் திற்
பகைநோய் பசியாய் விளை யின்றிப் பரிமா வானை மிக மாயும்
புகனி மாடைப் பசி முதலாய்ப் புரட்டை ஈறும் புவிக் கெல்லாம்.

(இ-ள்.) மகரத்தில் வியாழம் நிற்கிறபோது ஆடியென்னுமாண் டாமவ்வாண்டில் வருடமின்றி விளைவின்றிப் பசிப்பெருக்க முண் டாய் பருதித்தியு மெள்ளு மலியு மென்க கும்பத்தில் நிற்கிறபோது ஆவணியென்னுமாண்டா மவ்வாண்டில் அடை மழையாய் எங்கும் விளைந்து தானியம் பெருக்கும் மீனத்தில் நிற்கிறபோது புரட்டாசி என்னு மாண்டா மவ்வாண்டில் விளைவின்றிப் பஞ்சமாய் யானை, குதி ரை பசியாலும், நோயாலுமாயு மிப்படி அற்பிசி முதல் புரட்டாசி ஈறாக மேடமுதல் மீனமீறாக எண்ணிக்கொள்வது, எ-று.

சுக்கிர சரிதை.

பவியில் மரிசே யாழு லவன் புகரோ னிற்கிற் புயல் பெரிதாங், குவைகோ ளரிபெண் துளி யில்லைக் கோள்தேள் வெள்ளங் கொடுஞ் சிலைமேற், றுவலை தோன்றிற் றுளியாய்ப் போஞ் சுறவுங் குடர் மீ னம், ஈவயில் வெள்ளி நின்றிடு மேல் நாளு நாளு மழை பெரிதாம்.

(இ-ள்.) மேஷமுதல் நாலிராசியில் வெள்ளிநிற்கில் வருஷமுண் டாம், சிங்கங்கன்னியில்நிற்கில் வருஷமின்றி விரைத்தவிரையுந் தீயு மென்க, துலாம் விருச்சிகத்தில் நிற்கில் வெள்ளம்போம், தனுசில் நிற்கில் வருஷந் தோன்றித் துளியாய்ப்போம், மகரமுதல் மூன்று ராசியினும் நிற்கில் அடைமழையா மென்றவாறு. 280

சனி சரிதை.

பெயுய குதிரை சனி யேரிற் பெய்யு மாரி துயர் தோன்றல்
குறிதாம் பரணி வினை வுடனே பொருவா மாரம் முதல் மூன்றுங்
கரியே னனிற்கின் மனு மாய்ந்து கார்தா டவர்க்கு மாதிரை யிற்
சொரியா நிறகு மழை புனர்தங் துளியும் விளையு மளவா மே.

(இ-ள்.) அசுவதியில் சனிநிற்கில் வருஷம்பெய்துவிளையும், பர ணியில் அழிவுண்டாய், எல்லாத்தானியங்களும் விளையுங் கார்த்தி கைரோகணி மிருகசீரிட மிந்நாட்களில்நிற்கில் வருஷமின்றிப் பஞ்ச

மாம் மனுமாயுந் திருவாதிரையில் நிற்கிற் வருஷங் குறைவறப்பெய்
து தேசமெல்லாம் விளையும் புநர்பூசத்தில் வருஷமும் விளையும் மத்
திமமாய்க்கீழ் சாதிப்பல்குமென்றவாறு. 281

அளவிற் பூசஞ் சனி பெய்தி லற்பம் விளைவா யகம் பல்கும்
வளமி லாம கம் பூர மாயு மறுத்து மனு மாயுங்
களவஞ் சனியுத் திர மெய்திக் கார்சற் றாகி யெட்ட பயறு
விளைவு மத்த மூத னன்கும் வெள்ளம் பெறுத்து மிடி தீரும்.

(இ-ள்.) பூசத்தில் சனிநிற்கில் விளைவற்பமாய் மிருகங்களுங் கீழ்மக்களும் பல்கும், ஆயிலியம் மகம்பூர மிவையில் சனி நிற்கில் வருஷமின்றித் தேசத்தில் மனிதர் பசியாலும் வியாதியாலும் மரண மடைவரென்க. உத்திரத்தில் நிற்கில் மழையற்பம் எள்ளு, பயறு, வரகுவிளையும், அத்தமூதம் நான்கும் வருடங் குறைப்பெய்து தேச மெங்கும் விளைந்து அஃறும்பெருகுமென்றவாறு. 282

தீர நீலன் பனை யேறிற் றென்னங் கழிவு விளை வுண் டாங்
காரி கேட்டை முத லைந்துங் கருதிப் பசிநோய் பகை பெரிதாம்
வேரி யிட்ட முதன் மூன்றும் வெள்ளம் பெரிதாய் விளையும் பார்
பாரி லரிவன் கதஞ் சனிபோற் பசியான் மாயும் படி யெல்லாம்.

(இ-ள்.) அனுடத்தில் சனி நிற்கில் வருஷித்துக் குளங்களெல் லாம் நிறைந்து விளையும், பாண்டியனுக்கழிவுண்டாம், குறும்புக்கழி வென்க. கேட்டைமுதல் ரு-நாளிலும் நிற்கில் வருடமின்றி எல்லாந் தீய்ந்து மனுஷரெல்லாம் பகையாலே மாயும், அவிட்டமுதல் கூ-நா ளிலும் நிற்கில் தேசங் குறைவற விளைந்து கன்று காலியும் பல்கி மனுஷரெல்லாம் சுகமே யிருப்பார்கள். உத்திரட்டாதி, ரேவதி, இவையில் நிற்கில் வருடமின்றி மனுஷர் நோயாலும் பசியாலும் மரணமடைவர் இதிற்சொன்ன பலன் செவ்வாய்க்கு மொக்கும்.

புதனோட்டம்.

படியிற் கும்பம் விடை மீன மேடம் பரும முன் னோடு
நெடிய தண்டின் முத னன்கு முடனே னின்று பின் னோடுங்
கடிய கதிரைப் புதன் பிரிதல் கதிரோ னென்றிற் புணர்ந் திடுதற்
கொடியி னிடையாய்ப் புகர் தெற்கே வுறுதற் பஞ்சக் குறி யாமே.

(இ-ள்.) கும்பம், ரிஷபம், மீனம், மேட மிவ்விராசியில் புதன் ஆதித்தனுக்கு முன்னே யோடும் மிதுனமுதல் ச-இராசியு மாதித்த னுக்கு பின்னேவோடு மிவ்வகையொழிய ஆதித்தனுக்கு முன்னோடு

வது பின்னேடினு முடநிற்பது பிரிந்திடினும் பின்னேடுவது முன்னேடினும் வெள்ளி, தெற்கேபோம் நாலும் வருடமில்லை. எ-று.

கோள்நிலை.

குறித்த கதிரோன் புகர் புந்தி குலவி நிற்கு மொரு மாதஞ்
செரித்த மதினு ளிரண்டே காற் செவ் வாய் மாத மென்றமை யாம்
கறுத்த சனிபாண் டிரண்டரை யாங் கனகன் ருனு மோராண் டா
மிருத்த பாம்பாண் டொன்ற ரையா மிராசி யொன்றில் நின்றிடு நாள்

(இ-ள்.) ஆதித்தன், புதன், சுக்கிரன், ராசில் ஒரு மாதம் நிற்பார்கள் சந்திரனிரண்டேகால் நாள்நிற்பன் செவ்வாய் ஒன்றரைமாதஞ் சனி யிரண்டரை வருடம் வியாழம் ஒரு வருடம் ராகு, கேதுவொன்றரைவருடம் நிற்பார்கள், எ-று. 285

மனைப் பொருத்தம்.

நாட்டு மூற்கு மனைய தற்கும் நலங்கோ லெட்டெட் டரை செய்தா
மீட்டு நடுவு நால ரையும் விரிஞ்சன் மூலு நா லும்பர் [ல்
யீட்டுந் திசைக ளொரு நான்கி லிருநான் கறையு மிறை வற்காங்
கோட்டு நாற்பத் தெட்ட றையுங் குணமாய்க் கொள்கக் குல மனைக்கே

(இ-ள்.) ஏற்றுகின்ற ஆரையு மெடுக்கின்ற மனையையும் ௬௪-அறையாக்கினல் நடுவில் ௪-அரையும் பிரமஸ்தானம் நாலு மூலையுந் தேவர்க்காக்குந் திக்குநான்கில் ௮-அரையு மிந்திரன்முதலெண்பருக்காம் மற்ற ௪௮-அரையும் மனைக்கொள்வது, எ-று. 286

மனையைச் சிறுகோ லால ளந்து வந்த கிழியின் பேரா யா
மனையை யெட்டாற் பெருக்கிப் பன்னி ரண்டாற் கழித் தது வாக்கம்
மனையை யொன்ப தாற் பெருக்கிப் பத்திற் கழித் தழி வாகும்
கினையின் மூன்றாற் பெருக்கி யெட்டுக் கீய்ந்த சேடம் நிலை யோனி.

(இ-ள்.) மனையை சிறுகோலாலே யளந்து கண்ட குழியின்பேர் ஆயமா மவ்வாயத்தை ௮-ல் பெருக்கி ௧௨-ல் கழித்து நின்றதன்பேராக்கமா மாயத்தை ௯-ல் பெருக்கி ௧௦-ல் கழித்தது அழிவா மாயத்தை ௩-ல் கழித்தது நின்றசேடம் யோனியாமென்றவாறு. 287

நிலைகே ளாய்மெட் டேற்றி நெறி மூவொன் பான் கழித் ததுநா
ளிவகுஞ் சிலநான் காற் பெருக்கி மூவைந் ததனுர் கழித்த திதி
யிலகு மொன்பா னுட னேற்றி யேழிற் கழித் ததது கிழமை
யுலைவி மூவொன் பதிற் பெருக்கி யொன்பார் கழித் தங்கச மே.

(இ-ள்.) முன்புசொன்ன ஆயத்தை அ-ல்பெருக்கி உ௫-ல்கழி த்து நின்றசேடம் நாளென்பது ஆயத்தை ச-ல் பெருக்கி கஎ-ல்கழி த்தசேடம்பக்கமாயத்தை கூ-ல்பெருக்கி எ-ல்கழித்துநின்ற சேடங் கிழமை ஆயத்தை உஎ-ல் பெருக்கி கூ-ல் கழித்துநின்ற சேட மங்க மென்றவாறு. 288

அஞ்சொலி ரூபத் தேழ் பெருக்கி நூற்றிற் கழித் தது வாணாள்
செஞ்சொல யஞ்சி றுல வானம் வரினு மாக்கஞ் சிறுத் தழியு
மிஞ்சு மெனினும் யோனி நாள் பக்கங் கிழமை யெய்திடி னும்
வஞ்சு மான வஞ்ச கங்கள் வாணாட் குறைதல் மனைக் காகா.

(இ-ள்.) ஆயத்தை உஎ-ல்பெருக்கி ா-ல்கழித்து நின்ற சேட மாம், மனைக்கு ஆயுளென்பது இயற்றிலாயஞ் சிலவரினும் ஆக்கஞ் சிறுத்து அழிவு பெறுக்கினும் யோனி, நாள், பக்கம், கிழமை பொ ல்லாதவை வரினும், அங்கம் பொல்லாதவை வரினும் ஆயிசுகுறை யினு மனைக்கு ஆகாது. 288

யோனி யறிதல்.

ஆகும் கிழக்கு முத னெட்டு பரிந்து பூனை யரி சுணங்க
னுகங் கருப்பை கரி முசலாம் யோனி நல்ல னற் றிசையு
மேகஞ் சேர்தற் கற முணர்வு சத்தி விளைவோ டரசிடர்நோய்
சோகஞ் சுகமற் றிவற்றி னுள் சத்தி விளைவு சுகம் நன்றாம்.

(இ-ள்.) யோனியு மங்கமு மறியும்படி கிழக்குப்பருந்து, தென் கிழக்குப்பூனை, தெற்குச்சிங்கம், தென்மேற்குப் பாம்பு, வடமேற்கு எலி, வடக்குயானை, வடகிழக்கு முயல் ஆகயோனி எட்டுங்கண்டு கொள்க. இவை யீற்றும் யிருந்தும் சிங்கமும் பாம்பும் நன்றெனபது. அல்லாதவை தீதென்பது. எ-று. 289

அங்க மறியும்படி.

க-க்கு கற்கரம்	பிரமா	தருமவிர்த்தி
உ-க்கு புத்தி	க்ஷத்திரியன்	மந்திராலோசனை
ந-க்கு ரக்ஷகம்	வைசியன்	சத்தியம்
ச-க்கு தானியம்	சூத்திரம்	ஈகை
ரு-க்கு வெற்றி	பாஷாண்டி	நாபதி இடி நோய்
சு-க்கு துன்பம்	சண்டாளம்	பாபகுணம்
எ-க்கு ரோகம்	வேசி	தாபகுணம்
அ-க்கு தரித்திரம்	விப்பிரன்	சமசுகம்
கூ-க்கு தனம்	பசுக்குலம்	பாக்கியம்

இவை யொன்பதுங் கண்டுகொள்க இவற்றில் சத்தியும் விளை வும் சுதமும் நன்றும் அல்லாதவை தீது. 290

வாஸ்து புருஷன்.

நன்றுங் கிழக்கு முத லெட்டு மட்டில் நல்லான் றெழுக் குப்பை
குன்றுப் படப்பை மெருமை நிலை தொழுநெற் கூடு ணிடம் நீர்சால்
என்றூர் மனைக்குங் கிணறு கிழக் கீசன் மதிநீ ரெருற் கிழவன்
றன்றுட் கதிர்மேல் நீட்டித் தலை வைத்திடங் கீழ் தான் கிடக்கும்.

(இ-ள்.) கிழக்கே ஆடுகளைக் கொள்வது தென்கிழக்கே பசுத் தோழும், தெற்கே குப்பையிடுவது, தென்மேற்குத் தோப்பு, மேற் கெருமைத் தோழமிடுவது, வடமேற்கே நெற்கூடு, வடக்கே போச னசாலை, வடகிழக்கே தண்ணீர்சாலை வைப்பது, மனைக்குக் கிணறு வெட்டில் கிழக்கு சுகம், வடகிழக் கின்பம், வடக்கு சவுக்கியம், மே ற்கு சம்பத்து, தென்மேற்கு நலம், வடமேற்கு ஆயுதத்தால் மர ணம், தெற்கு ஸ்திரீமரணம், தென்கிழக்குப் புத்திர ஹானி, பிரம்ம ஸ்தானத்தில் அர்த்த ஹாணியென்று சொல்லது, வாஸ்து புருஷன் கிடக்கும்படி ஆதித்தனின்ற ராசியின்பேரிலே கால்நீட்டி அதற்கு எதிராசியிலே தலைவைத்து இடக்கை கீழாகக் கிடக்கும். எ-று.

கிடந்தான் மேட மொரு பத்திற் கிளரும் விடையின் மூ வேழு
லடங்கோல் கடகம் பதி ஞென்றி லரியோ ராறிற் றேளெட்டிற்
குடந்தா னிருபத் தொன்றை தனிற் கூறு மகரம் பன்னி ரண்டி
விடந்தா னெடிக்க லா மென்று ரெல்லாத் திசையு நல்லோ ரே.

(இ-ள்.) வாஸ்துபுருஷன் எழுந்திருக்கும்நாள் சித்திரைமாதம் ௰, வைகாசிமீ உகவ, ஆடிமீ ககவ, அற்பிசிமீ ஆவணிமீ கூவ கார்த்திகைமீ அவ, தைமீ உகவ, மாசிமீ உகவ இவை யீற்றில் எங்கும் அகமெடுக்கலாம். எ-று. 292

சுவர் பிளப்பு.

நல்ல மனையிற் சுவர் பிளக்கி லருக்கன் றிசையி நாசஞ் சே
யல்ல லுறும் பொன் சாவுபத னழகாம் புகர்மே லாக்கம தாங்
கொல்லுங் காரி மதி கியங் கூற்றும் பாம்பா மெனக் கொள்க [க்க.
வெல்லை யருக்கன் சேய் பொன்மால் புகர்சுன் மதியாம் பெண்டி சை

(இ-ள்.) அகத்திற் சுவர் பிளக்கில் கிழக்கு நாசம், தென் கிழ க்கு அல்லல், தெற்குமரணம், தென்மேற்கு அழகு, மேற்கு ஆக்கம்

வடமேற்கு சாவு, வடக்கு அர்த்தலாபம், வடகிழக்கு ஸ்திரீமரணந் திக்குயெட்டும் கிழக்குஆதித்தன், தென்கிழக்கு செவ்வாய், தெற்கு வியாழம், தென்மேற்கு புதன், மேற்கு வெள்ளி, வடமேற்கு சனி வடக்குச் சந்திரன் வடகிழக்கு பாம்புநிலை. எ-று. 293

புற்று.

எண்டிசையுங் கிழக்குமுத லாக வெண்ணி
விந்திரனக் கினிநிருதி வருணன் வாயு
வண்டமுறு மதியீச னட்ட திக்குங்
கலம்நடுவே லயன் மேபுற் றெடுக்கில்
மண்டியசா விந்திரன்மேற் செல்வ மங்கி
மண்யிடியு மயன்றுயரன் நிறுதி வாழ்வு
கொண்டல்வரு ணன்மகவு காற்றுக் கூற்றங்
குலமதியே னலமீசன் குறுகு நோயே.

(இ-ள்.) எட்டுதிக்கிலும் கிழக்கு இந்திரன், தென்கிழக்கு அக்கினி, தெற்கு யமன், தென்மேற்கு நிருதி, மேற்கு வருணன், வடமேற்கு வடக்குச் சோமன், வடகிழக்கீசானன், நடு பிரம்மஸ்தானம் இவை யீற்றில் பின்பு நட்டஞ் சொல்லும்பொழுது இன்ன தெய்வத்தின் பெயருடையோனென்றும் தேவசிந்தனைகளும் இவையீற்றிலே பிரம்மஸ்தானத்தில் புற்றெடுக்கிற் சாவு, இந்திரன் செல்வம், அக்கினி மனையிடியும், யமன் துக்கம், நிதிரு ஸ்திரீசாகும், வருணன் புத்திரலாபம், வாயு கூற்றும், சந்திரன் நன்மை, ஈசானன் வியாதியென்றுசொல்வது. எ-று. 294

செஞ்செல்லு.

குறுதியசெஞ் சிதலயன்மேற் றோன்றில் நன்றாங்
கொடுங்கதிர்கே டங்கியிடு நிதிகால னின்பம்
பெருநிருதி மழைவருணன் செல்வங் காற்று
பெண்போல்கு மதிவாழ்வு பீடை யீசன்
கறவையிட மூறின்மிகக் கீழ்க்காலி மாயுங்
கட்டிற்படி சாலிங்கீ ழட்டில் நோயா
மிறைவரிடி மூருணீயம் பலன்கள் பன்னி
லெழில்காடு கெடுஞ்சுவர்மே லெங்கு நன்றே.

(இ-ள்) பிரம்மஸ்தானத்தில் செஞ்செல்லு தோன்றில் நன்மை, கிழக்கு கேடு, அக்கினி நிதிபெருக்கு, யமன் இன்பம், நிருதிமழை,

வருணன் செல்வம், வாயு ஸ்திரீயைப்போக்கும், சந்திரன் வாழ்வு, ஈசானன் பீடை, கன்றுகாலித் தொழுவல், கன்றுகாலி நாசம், கட்டிற்கீழ் வாசற்படிக்கீழ் அடுக்களைக்கீழ் வியாதி, தேவஸ்தானம் ஊருணி அம்பலங்கள் பன்னியிட மிவற்றிற் றொன்றில் நாடுகெடும் சுவர்மேற்றொன்றில் மிகவு நன்று. எ-று. 295

கோடிகிழியில் நன்மை தீமை.

நற்கோடி கிழியின்படி மூன்று செய்து
நயந்தகடைத் தலைகீழாக் கிழக்கே வைத்துப்
பொற்கோடி முகமேலாம் மேற்கே வைத்துப்
பூவிலயன் கொலையருக்கன் செல்வனுட புதல்வர்
அற்கோல மனைவெகு மயனிலிடை யின்ப
மழலெரிக்கு மிரவிக்கு நடுவிற்று ரிடருந்
தெற்கோடிச் சாவிதற்கு மெரிக்குமிடை துன்பஞ்
செழுமலரோற் கிடைபிணிதென் மேற்சிறுவர் பெருமே.

(இ-ள்.) புதுப்புடவை பீறினல் மூன்றுமடியாக்கிக் கடைத்தலையைக்கீழ்க் கிழக்கேவைத்து முகத்தலை மேலாக்கி மேற்கேவைத்து பார்த்தால் பிரம்ம ஸ்தானமாகில் மரணம், ஆதித்தனிற் செல்வம், இவை யிரண்டுக்கும் நடுவாகில் புத்திரருண்டாம், அக்கினியில் அகமேறும், அக்கினிக்கும் பிர்மாவுக்கும் நடு வின்பம் அக்கினிக்குமாதித்தனுக்கும் நடு துக்கம், எமனுக்கும் பிரம்மாவுக்கும் நடு வியாதி, நிருதியில் புத்திரலாபம். எ-று. 296

பெருநதி காலனிடை பகைமலரோ னடுவேற்
பேரின்பம் வருணநிதி நிருதிநீ ரிடையி
நறுநுதல்போ யனிடையிற் புடவை காற்றி
நட்டார்நீள் மனம்நான் முகன்காற் றி டைநோய்
நிறைமதிகே டயனிடையிற் பிணிமதிகாற் றிடையி
நேராற்கே டிசநலம் நிலாவீசற் கிடையி
லுருபொருள்போ மயனீசற் கிடையி லின்ப
மொன்கதிரோற் கிடைநன்று முற்புடவை கிழியே.

(இ-ள்.) நிருதிக்கும் யமனுக்குநடு சத்துருவுண்டாம், நிருதிக்கும் பிரமனுக்குநடு வின்பம், வருணன் அர்த்தலாபம், வருணனுக்கு நிருதிக்குநடு ஸ்திரீபேறு, வருணனுக்கும் பிர்மாவுக்குநடு மரணமுண்டாம், வாயு பந்துக்களுண்டாம், வாயுக்கும் வருணனுக்குநடு கலியாணமுண்டாம், வாயுக்கும் பிரமாவுக்குநடு சம்பத்துண்டாம், சந்தி

ரனிற் பிள்ளைகளுண்டாம், சந்திரனுக்கும் பிரமாவுக்குநடு சம்பத்து சந்திரனுக்கு மீசானனுக்குநடு அர்த்தநாசம், ஈசானனுக்குநடு இன்பம், ஈசானனுக்கு மாதித்தனுக்கு நடு நன்மையுண்டாம். எ-று.

சுரிகை லக்ஷணம்.

கிழக்குநெடுஞ்சுரிகை கதிர்மேல்வினகிற் சிறங்காங்
கெழுமுநலங் குலவணிகன் பகைகேடு பறையன்
விழிக்குநம நலம்பெருகு முனையிற் குறைவாகும்
வேளாளநிருதி யின்மேல் மிடிபெருகும் புலையன்
சுழிக்குநெடு விராசனது செல்வ முண்டாஞ்
சுழல்வளியிற் கீழ்சாதி துயர மிஞ்சும்
பழிப்பின்மதி தனம்பெருகுங் குலமும் பார்ப்பான்
பாம்பின்மேற் பறைசாதி பழியொடுகே டுளவாம்.

(இ-ள்.) ஆயுதங்கொண்டு ஆதித்தனின்ற திசையில்நின்று வினவில் சீரங்குண்டாமென்பது, சாதி வைசியனென்றும் காரிய லாபமுண்டாமென்றுஞ் சொல்வது, அக்கினியால் சாதி பறையனென்றுஞ் சேதமுண்டென்றுஞ் சொல்வது, யமன்றிசையில் குறையுண்டென்றுஞ் சூத்திரனென்று மர்த்தலாபமுண்டென்றுஞ் சொல்வது, சவது நிருதியில் வினவில் மனமிடியன் சாதி புலையனென்றுஞ்சொல்வது, வருணனில் ஸ்திரீயுண்டென்றும் ஜாதி க்ஷத்திரியனென்றுஞ் சொல்வது, வாயு கீழ்ச்சாதி யென்றுந் துக்கமென்றுஞ் சொல்வது, சோமனில் அர்த்தலாப முண்டென்றும் ஜாதி பிராமண னென்றுஞ் சொல்வது, பாம்பிற் சாதி பறையனென்றும் பழிகேடுளவென்றுஞ் சொல்வது. எ-று. 298

பஞ்சபக்ஷிப் பலன்.

சந்திரன் பக்கம் ரு-க்கும் வாரம் எ-க்கும் அக்ஷரப்புணர்ச்சி.

எள்ளங்கொள் நந்தகதிர் செவ்வாய் கார மோங்கும் பத்திரைமால்
தளங்கொள் மதியந் தானிகரஞ் சயையும் பொன்னு முகாரமதாம்
விளங்கு மிரத்தைப் புகரெகரம் வெய்யசனை பூரணை யொகரந்
துளங்குமிடையாயப்பகர்கடிகை யவ்வாறிவை யூண்சொல்முறையே.

(இ-ள்.) நந்தை ஞாயிறு செவ்வாய் அகரம், பத்திரை புதன் திங்கள் இகரம், சயையும் வியாழ முகரம், ரித்தை வெள்ளி எகரம், பூரணை சனி ஒகர மிவை யிற்றிற்சொன்ன கிழமையிலும் பக்கங்களிலு முறையாதி முதலாக அஸ்தமன மிறுதியாக ஒவ்வொன்றுநாழியாக முப்பது நாழிகையு மடைவே யுண்பார்கள். எ-று. 299

அக்ஷரப்புணர்ச்சி சக்கரம்.

வாரம்	உண்டி	நடை	அரசு	நித்தி	மரணம்
நந்தை ஞாயிறு செவ்வாய்	அ	இ	உ	எ	ஒ
பத்திரை திங்கள் புதன்	இ	உ	எ	ஒ	அ
சயை வியாழம்	உ	எ	ஒ	அ	இ
இருத்தை வெள்ளி	எ	ஒ	அ	இ	உ
பூரணை சனி	ஒ	அ	இ	உ	எ

அக்ஷரம் ஐந்திற்கும் பட்சிப்புணர்ச்சி.

சொன்ன வாகரம் வல்லூ றூண் துய்ய விகார மாந்தை யூண்
முன்னை யுகாரம் வலிய னூண் மொழியி லெகாரங் கோழியி னூண்
பன்னு மொகர மயிலூ ணும் பண்டை யடைவே பறவைக ளொன்
றன்னு மிரண்டு நடைமுடி மூன் றுறங்க நாலு சாவைந் தே.

(இ-ள்.) குறுக்கு வரியாக ஆறுகோடிழுத்து அவ்வகையே நெடுக்கிலேயு மாறுகோடிழுத்து சதுரமாக்கி ஒவ்வொரு திசைக்கு ஐந்துவீடாக்கி முதல் வீட்டில் அகரமாகிய வல்லூறூணும், இரண்டாவது வீட்டில் இகரமாகிய ஆந்தையூணும், மூன்றாம் வீட்டில் உகரமாகிய காகவூணும், நான்காம்வீட்டில் எகாரமாகிய கோழியூணும், ஐந்தாம்வீட்டில் ஒகாரமாகிய மயிலூணு மன்றியும் இவ்வடையே யுண்கிறபட்சி இரண்டாம் வீட்டில் நடக்கவும், மூன்றாம் வீட்டில் அரசுசெய்யவும், நான்காம்வீட்டில் வுறங்கவும், ஐந்தாம் வீட்டிலிரக்கவும் ஆக இருபத்தைந்து வீட்டிலேயும் வாரமொன்றுக்குப் பகல் சாம மைந்துக்கும் பட்சிகளைந்துஞ் செய்கைகளைந்திலேயும் அமர்ந்திருக்கு மென்னவுமாம், எ-று. 300

வாரம் சாமம்.	ஞாயிர் செவ்வா நந்தை.	திங்கள் புதன் பத்திரை.	வியாழம் சயை.	வெள்ளி இருத்தை	சனி பூரணை
முதல் சாமம்.	அ-வல்லூர் உண்டி-கவ.	இ-ஆந்தை உண்டி-கவ	உ-காகம் உண்டி-கவ	எ-கோழி உண்டி-கவ	ஒ-மயில் உண்டி-கவ
உ-ம் சாமம்.	நடை-க௭ *	நடை-க௭ *	நடை-க௭ *	நடை-க௭ *	நடை-க௭ *
ந-ம் சாமம்.	அரசு-உ *	அரசு-உ *	அரசு-உ *	அரசு-உ *	அரசு-உ *
ச-ம் சாமம்.	தூக்கம்-ஞ *	தூக்கம்-ஞ *	தூக்கம்-ஞ *	தூக்கம்-ஞ *	தூக்கம்-ஞ *
ரு-ம் சாமம்.	சாவு-௭ *	சாவு-௭ *	சாவு-௭ *	சாவு-௭ *	சாவு-௭ *

முதல்	அ	இ	உ	எ	ஒ
சாமம்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்
*	அரசு	நடை	அரசு	நித்திரை	மரணம்
உ-ம்	ஒ	அ	இ	உ	எ
சாமம்	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி
*	உண்டி	நடை	அரசு	நித்திரை	மரணம்
ங-ம்	எ	ஒ	அ	இ	உ
சாமம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்
*	உண்டி	நடை	உண்டி	நித்திரை	மரணம்
ச-ம்	உ	எ	ஒ	அ	இ
சாமம்	காகம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை
*	உண்டி	நடை	அரசு	நித்திரை	மரணம்
ரு-ம்	இ	உ	எ	ஒ	அ
சாமம்	ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்லூறு
*	உண்டி	நடை	அரசு	நித்திரை	மரணம்

வாக்கியாக்ஷரப் பொருத்தம்.

அஷ்டவித யோனிப் பொருத்த மென்றுஞ் சொல்லப்படும்.

சாந்த அகாரங்க காரமுடன் சகாரந்த காரந் தானஙன்
வாய்ந்த ஙகாரம் பகார மிமைகாரம் வகாரமெட் டெழுத்தும்
வாய்ந்த பருந்து முதலியோனி யிருநான் கினுக்கு மடைவாகி
யேய்ந்த போரும் வெற்றி யுந்தாமிதனுற் பறவையா லியம்பே.

(இ-ள்.) அ-க-ச-த-ந-ப-ம-வ 8-டெழுத்தையுங் கிழக்கு முதலாக எட்டுத் திக்கினு மடைத்து கருடன், பூனை, சிங்கம், நாய், பாம்பு, எலி, யானை, முயல் யென்னும் யோனிகளை எட்டாக்கிக் கொண்டு இந்த யோனியாலும் அட்சரத்தாலும் பட்சிகளின் பலாபலமும், வெற்றித் தோல்வியும், உறவின்பகையும் விசாரித்து சொல்வதென்றறிவ.

பொருத்தச் சக்கரம்.

வடகிழக்கு	கிழக்கு	தென் கிழக்கு
வ	அ	க
முயல்	கருடன்	பூனை
வடக்கு	அ	மேற்கு
ம	எஒஇ	ச
யானை	உ	சிங்கம்
வடமேற்கு	மேற்கு	தென் மேற்கு
ப	ந	த
எலி	பாம்பு	நாய்

வாக்கியாக்ஷரச் சக்கரம்.

ஹ ரி ந மோ த் து ச் சி ந் த ம்.

பட்சி வாக்கியங்களுக்குறிய முதலெழுத்துக்கள்.

மயில் கோழி காகம் ஆந்தை வல்லூர்

அ	க	ச	த	ந	ப	ம	வ
ஆ	கா	சா	தா	நா	பா	மா	வா
இ	கி	சி	தி	நி	பி	மி	வி
ஈ	கீ	சீ	தீ	நீ	பீ	மீ	வீ
உ	கு	சு	து	நு	பு	மு	வு
ஊ	கூ	சூ	தூ	நூ	பூ	மூ	வூ
எ	கெ	செ	தெ	நெ	பெ	மெ	வெ
ஏ	கே	சே	தே	நே	பே	மே	வே
ஒ	கொ	சொ	தொ	நொ	பொ	மொ	வொ
ஓ	கோ	சோ	தோ	நோ	போ	மோ	வோ

பேர் பொருத்தம்.

இயம்புமூன் றெழுத்தாற் பாள னிரண்டது குமரன் மூன்றேல்
வயம்புக மூரச ஞலும் நோயந்து மரண மாதே
பயன்கொள் தன் பேரெழுத்து மவன்பெய ரெழுத்தும் பத்தால்
வியந்துடன் ருக்கி யெட்டிற் கழித் தேற்றி பாரே.

(இ-ள்.) அ-இ-உ-எ-ஒ வென்கிற ஐந்திலேயு மடைத்தால் இவ்வடைவிலே தன்பெயரெழுத்தையும் பின்பு கொள்கிற பெயரெழுத்தையும் பார்த்தா லிரண்டு மோரெழுத்தாகில் பாலனென்றும் உ-ம் எழுத்தாகில் குமரனென்றும் ந-மெழுத்தாகில் இராஜாவென்றும் ச-மெழுத்தாகில் வியாதியென்றும்-ரு-எழுத்தாகில் மரணமென்றுஞ் சொல்வது இவை யீற்றில் நான்கு மைந்து மாகாதென்பது தன்னுடைய பூர்வநாமத்தில் சாவெழுத்தை நீக்கிநின்ற வெழுத்தை யெண்ணி யதனை-ம-ல் பெருக்கி-அ-ல் கழித்து நின்ற சேடத்தை யறிந்தா லிரண்டினுமேற்றமாக பேர்பொருந்துமென்று சொல்வது, எ-று.

நட்டமுட்டி சிந்தனை.

பாரினில் நட்ட முட்டி சிந்தனைப் பகர வேண்டிற்
சீறிய தறிக்காற் கீழ்க்காற் சிறப்புறை யோரை கோணங்
காறியம் விரவி நின்றோ ரோரைகள் கவிப்பு நோக்கங்
கூறிதா யுணர்ந்து கோளின் வலியறிந் தினிது கூறே.

(இ-ள்.) நட்டமுட்டி சிந்தனைச் சொல்லவேண்டில் தறிக்காலுங் கீழ்க்காலு மோரையுந் திரேக்காணமு முதைய வாருடமுங் கவிப்பு மூணாட்டு நோக்கு மிவையிற்றை யறிந்து இக்கோட்களை நட்பட்சி உச்சப்பகை நீசங்களாலே பலாபலன் பயனறிந்துசொல்வது, எ-று.

தறிக்கால்.

கூறிய மறியிற் சேய்மால் புகர்மதி குண்டை சுன் பொன்
சீறுசேய் புகர்யாழ் செவ்வாய் சனிதிங்க ளருக்க னண்டி
லேறிய திமால் வெய்யோன் புகாரி யிரவி காரி
பாறிய புகர்சேய் கன்னி பொன்சனி யருக்கன் செவ்வாய்.

(இ-ள்.) மேட முதற்கால் செவ்வாய் 2-ம்கால் புதன் ந-ம்கால் வெள்ளி ச-ம் கால் சந்திரன் ரிஷப முதற்கால் சனி உ-ம்கால் வியாழம் ந-ம் கால் செவ்வாய் ச-ம் கால் வெள்ளி மிதுன முதற்கால்செவ்வாய் உ-ம்கால் சனி ந-ம்கால் திங்கள் ச-ம்கால் ஆதித்தன் கடக முதற்கால் திங்கள் உ-ம்கால் புதன் ந-ம்கால் ஆதித்தன் ச-ம்கால்

வெள்ளி சிங்கமுதற்காலாதித்தன் உ-ங்கால்சனி ங-ங்கால் வெள்ளி ச-ங்கால் செவ்வாய கன்னி முதற்கால் வியாழம் ங-ங்கால்ஆதித்தன் ச-ங்கால் செவ்வாய், எ-று. 304

செவ்விய துலையின் வெள்ளி மதிசேய்மால் தேட்சேய் காரி
வெவ்வேயி ரகுவிற் சேய்மால் வெயில்குரு மகரம் வில்லோ
னெவ்வமிற் காரி தேரோன் சனிகுடம் புதரோ ணிந்து
தவ்வமில் கதிர்மால் மீன்பொன் சனிரவி பொன்ற றிக்கால்

(இ-ள்.) துலாத்தில் முதற்கால் வெள்ளி உ-ங்கால் சந்திரன் ங-ங்கால் செவ்வாய் ச-ங்கால் புதன் விருச்சிக முதற்கால் செவ்வாய் ங-ங்கால்சனி உ-ங்கால் ஆதித்தன் ச-ங்கால் வியாழந் தனுசில் முதற்கால் செவ்வாய் உ-ங்கால்புதன் ங-ங்கால் ஆதித்தன் ச-ங்கால் வியாழம் மகரமுதற்கால் வியாழம் உ-ங்கால் சனி ங-ங்கால் ஆதித்தன் உ-ங்கால் திங்கள் ங-ங்கால் ஆகால் சனி கும்ப முதற்கால் வெள்ளி உ-ங்கால்திங்கள் ங-ங்கால் ஆதித்தன் ச-ங்கால்புதன், மீனம் முதற்கால் வியாழம் உ-ங்கால் சனி ங-ங்கால் குரு இவ்வகையால் தரிக்காலரிவதென்றவாறு. 305

இராசிநிலையும்-ஊணும்.

காதுகொள் மறியோர் கீழ்பா வியாழ்தென்கீழ்க் கடகஞ் சிங்கந்
தீதிலால் தெற்குத் தென்மேற் சேயிழி கோல்தேள் மேற்கு
மாதனு வடமேல் மிக்க மகாஞ்சால் வடக்கு மீன
மோதிய வடகீழ் நிற்ப துன்பது மூன்ரு மோரை.

(இ-ள்.) மேஷம் ரிஷப கிழக்கு நிலைமிதுனம் தென்கிழக்கு கடகஞ், சிங்கந் தெற்கு கன்னி தென்மேற்கு துலாம் விருச்சிகம் மேற்கு தனுசு வடமேற்கு மகரங், கும்பம் வடக்கு மீனம் வடகிழக்கு தறிக்கால் மேஷமுதற்கால் மிதுனத்தில் கடைக்காலையுண்ணும், எ-ங்கால் ங-ங்காலையுண்ணும், ங-ங்கால் உ-ங்காலையுண்ணும், ச-ங்கால் முதற்காலையுண்ணு மிப்படியே மற்ற விராசிகளுநண்ணுமென்றவாறு.

இராசிநோக்கும் கவிப்பும் உச்சக்கோள் இடைநிலைக்கோள் பூமிக்கோள்.

ஒரைபன் னென்ரு பானேழ் சந்திர முபைய நோக்குஞ்
சார்கவிப் புதைய மாதி யிரண்டரை கடிகை தன்னை
நாரிதன் கவிக்கும் பின்னை யிடைமுத லடைவே நண்ணு
மார்புகர் பொன்மேல் மேதை மதியிடை புவிக்கோ ளல்லார்.

(இ-ள்.) சரராசிகளெல்லாம் கெ-மிராசியை நோக்குந் திராசிகளெல்லாம் கூ-மிராசியை நோக்கு முபையராசிக்கு மெல்லாம் எ-மிராசியை நோக்கும் மேஷ முதற்கால் கும்பம்-ந ங்காங்காலே நோக்கும் ச-ங்கால் முதற்காலே முழுநோக்கு மிப்படி நோக்கு மென்றறிவது கவிப்புக்கொள்ளும்படி சிறுகால் யாதொரு இராசி யுதிப்பது உ௭-நாழிகை அவ்விராசி தன்னைத்தானே கவிக்கும் உ-இராசிமுறை உ௭-நாழிகை கவிழ்க்குமிப்படி பன்னிரண்டு ராசியும் ங௦-நாழிகையுமிடமேவந்து கவிக்குமென்பது வினவிநின்ற விராசியாரூடவென்பது அப்பொழுது வுதிககிற விராசியை யுதையமென்றறிவது பாம்பும் வெள்ளியும், வியாழமு மூச்சிக்கோ ளென்றறிவது புதன், திங்கள் இடைநிலைக்கோள் ஆதித்தன் செவ்வாய், சனி பூமிக்கோ ளிவையீற்றுலே உச்சத்திற் கேட்டது இடை நிலத்திலே கேட்டது பூமியிற் கேட்டதென்று மற்றுள்ள வகையாலே பார்த்துச்சொல்லுவது.

ஜாதி இராசிக்கிரகமறிக.

புவிபுகழ் மீன்றேள் நண்டு பொன்மதி மறையோன் சிங்கங்
குவிமறி விற்சேய தேரோன் கொற்றவன் மிதுனங் கொல்சால்
நவிபுதன் வணிகன் குண்டை நாரியா மகரம் வெள்ளி
பவனிவே லாளன் காரி பஞ்சமன் புலையன் பாம்பே.

(இ-ள்.) மீனம், விருச்சிகங், கடகம், வியாழங், திங்கள் இவை பிராமணன், சிங்கம், மேஷங், தனுசு, செவ்வாய், ஞாயிறு இவை க்ஷத்திரியன் மிதுனங், துலாங், கும்பம், புதன் இவை வைசியன், ரிஷபங், கன்னி, மகரம், வெள்ளி இவை சூத்திரன், சனி பஞ்சமன் பாம்பு புலையன், எ-று. 308

நிறம் இராசிக்கிரகம்

பாம்புசுன் சுறவு வீணை பைந்தொடி கறுப்பு மேதை
தேம்புமீன் குடங்தேட் பச்சை திங்கள்வெங் கதிரோன் சுங்கன்
தாம்பணை விடைகோல் நண்டு வெள்ளைசேய் தகர்விற் சிங்க
மாம்புகழ் சிகப்பே யேசி விறைவன்பொன் னிறமே சொல்லாய்.

(இ-ள்.) பாம்பு, சனிமகரங், கன்னி இவைகருப்பு புதன் மீனம் கும்பம் விருச்சிக மிவை பச்சை திங்கள், ஞாயிறு, வெள்ளி, ரிஷபங், துலாங், கடக மிவை வெள்ளை செவ்வாய், மேஷங், தனுசு, சிங்க மிவை சிவப்பு, வியாழம் பொன்னிறம், இப்படி நிறஞ் சொல்லுவதென்றவாறு. 309

கிரக அளவு மறுவடு.

இனியபொன் புந்தி ராகம் நெடியவ ரிந்து செவ்வாய்
சனிகுறி தருக்கன் சுங்கன் சமனள வுமருவ டுக்கள்
பணிமதி தலைசேய் பின்பு பார்க்கவன் முகந்தோள் மைபொன்
வணிதமால் கைக்கீழ் வெய்யோன் மருங்கார மந்தன் காலே.

(இ-ள்.) வியாழம், புதன், பாம்பு நெடியது. திங்கள், செவ்வா, சனி குறியது. ஞாயிறு, வெள்ளி அளவுசமன் இவையீற்றாலே அளவுகுறள் சொல்லுக. சந்திரனுக்குத் தலையிலேயும், செவ்வாய்க்கு முதுகிலும், வெள்ளிக்கு முகத்திலும், வியாழந் தோளிலும், புதன் கைக்கீழும், ஞாயிறு மருங்கிலும், பாம்பு சனி காலிலு முண்டென் றவாறு. 310

கிரக இராசியிருகால், நாற்கால்பறவை, பலகால்.

காலிரண் டருக்கன் காரி கன்னிகோல் மிதுனங் கும்பம்
நாலுள சேல்பொன் குண்டை நற்சிலை சிங்க வேடங்
கால்பற வெள்ளி பாம்பு கடகந்தேள் சிறகே காலாஞ்
சேல்சுறு விரண்டுந் திங்கள் புதனறு கால்கள் செப்பே.

(இ-ள்.) ஞாயிறு சனி, கன்னி, துலா, மிதுன, கும்ப மிவை யிருகால் சீவன். செவ்வாய், வியாழம், ரிஷபங், தனுசு, சிங்க, மேஷ மிவை நாற்காற் சீவன். வெள்ளி, பாம்பு, கடக, விருச்சிக மிவைபல காலுள்ளசீவன். மீன, மகர மிவை சிறகோயாகவுள்ள சீவன். திங்கள், புதன் இவை அறுகால்சீவன். எ-று. 311

தாதுமூலசீவன்.

செப்பிய தறிக்கால் மேட முதலோரை தின்முவொ மான
றப்புறத் தாது மூல சீவனென் றடைவே சாற்று
மப்புயப் போக்கு நிற்ப வருவன முன்போ லாகு
மொப்பிலா வோரை வார மாண்பெணென் றடைவே யோதே.

(இ-ள்.) மேஷமுதலான ௧௨-இராசியையுந் தாதுமூல சீவனென்றொட்டுவது. தரிக்கால் நாற்பத்தெட்டையும் மேஷ முதற்காலிப்படியே ஒட்டுவது. அசுவதிமுதல் ௨௭-நாளையு மிப்படியே ஒட்டுவது கழிகாலம், நிகழ்காலம், வருகால மென்றிவ்வடைவே ஒட்டுவது. ஞாயிறு முதலான கிழமையு மேஷமுதலான ராசிகளைபு மாண்பெண் ணொட்டுவது. எ-று. 312

கதிர்கள்.

ஓதிய கதிர்கள் முப்ப தருக்காற்கொண் மதிக்கு நாலேழ்
யேதனக் கெட்டு மேகைக் காறுசெம் பொன்னுக் கொன்பான்
மேதகு வெள்ளிக் கேழு சனிக்குமூ றாா விரண்டுக்
கோதிய கதிராற் றார மோருடு வுயர்வு மாதே.

(இ-ள்.) ஆதித்தனுக்கு கதிர் ௩0 திங்கள்-உஅ, செவ்வாய் அ, புதன்-௬, வியாழம்-௬, வெள்ளி-எ, சனி-உ பாம்புக்கு இரண்டென்பது, ஓதியதென்று மிருத்துச் சொல்லிய வதனால் தந்தரமாட்சிகளிற் சொன்னவை யென்றும், நட்பில் நாலத்தொன்று குறையும், பாதி நீசத்திலொன்று முக்கால், உச்சத்திற் பதம்லொன்று இவை யிற்றிலே தூரமு மிடையு முருவுபோம். நாளு மாழமும் வயது மற்றும் வருவனவெல்லாம் விசாரித்துச் சொல்லுவது. எ-று.

கிரக நவலோகம்.

ஓங்கிய வருக்கன் பஞ்ச லோகமொண் டிங்க ளீயர்
தீங்கில்வெண் கலஞ்சேய் செம்பு புதன்றாா வியாழஞ் செய்பொன்
பாங்குடை வெள்ளி வெள்ளி சனிபணி யிரும்பு கல்லாம்
பூங்ருழன் மடவாய் கோட்கள் தாதுவைப் பொருந்து போதே.

(இ-ள்.) ஆதித்தன் தாதுவாய் வந்தபோது பஞ்சலோகம் திங்கள் ஈயம், செவ்வாய் வெண்கலம், புதன் செம்பு, வியாழந் தாா, வெள்ளி பொன், சனி வெள்ளி, பாம்புகள் இரும்பு. எ-று.

பொருந்திய மூல வெய்யோன் மலைமா மதிபூ வாழை
இரும்புசேய் தூறு மேதை படாவன வியாழம் புன்னை
கருப்புசெண் பகமாம் வெள்ளி கிழங்கொடு கொடிபூக் காறி
இரும்பனை மஞ்ச ளிஞ்சி யிராகுவெற் றிலைமுட் டூரே.

(இ-ள்.) ஆதித்தன் மூலமாய் வந்தபோது மாம் வைரமாந்திங்கள் பூவாழை முதலானவை, செவ்வாய் சிறுதூறு, புதன் படரப்படுவன, வியாழம் புன்னை, கரும்பு, செண்பகமென்க, வெள்ளி கிழங்கு, கொடி, பூ வென்க, சனி பனை, மஞ்சள், இஞ்சி முதலானவை என்க, பாம்பு வெற்றிலை முள்ளுடையது. எ-று. 315

கிரகமூலதாது.

துய்ச்சுடர் மூல தாது மைக்கோலைச் சோமன் புல்லுத்
தீய்ச்செவ்வாய் வாகு சாமை தினைமேதை யிலைகோல் செம்பொன்

காய்ச்சநெற் கடலை கூறை வெள்ளிகொள் கடுகு சோறு
மாய்ச்சனி மிடகு முள்ளெட் கறியாக் கயிறு மாதே.

(இ-ள்.) ஆதித்தன் மூலதாதுவாய் வந்தபோது வைக்கோல் ஓலை முதலானவை யென்க, சந்திரன் புல்லென்பது, செவ்வா வரகு தினை, சாமை யென்பது, புதன் இலைகோலென்பது; வியாழன் நெல் கடலை, புடவை யென்பது, வெள்ளி கொள்ளு, கடுகு, சோறென் பது, சனி மிளகு, முள்ளு, எள்ளுக்கறி யென்பது, பாம்பு கயிறு முதலானவை யென்பது. எ-று. 316

கிரகமிருகம்.

மாதராய் களிறு வெய்யோன் மதிபரி செவ்வா யாடு
மேதகன் றெருது வேந்தன் வெள்ளிகோ லெருமை காரி
தாதராக் காட்டில் நாற்கா லிருகாற்கோள் வலிதேல் மாந்
திரோதிய புவிக்கோள் மிஞ்சி லூர்வன பறவை யுச்சம்.

(இ-ள்.) ஆதித்தன் சீவனுய் வந்தபோது ஆனை முதலானவை யென்க, திங்கள் குதிரை முதலான கொம்பில்லாதவை, செவ்வாய் ஆடு முதலானவை, புதன் கன்றுகள், வியாழன் எருது, வெள்ளி பசு, சனி எருமை, பாம்பு, காட்டில்வாழு மிருகமென்க, இருகாற் கோள் வலிதாய் வந்தபோது மனுஷ சீவனென்பது, பூமிக்கோள் வலிதாய் வந்தபோது ஊர்வன தாழ்வன வென்பது, உச்சக்கோள் வலிதாய் வந்தபோது பறவை யென்பது. எ-று. 317

சீவதாது.

பறைதரு சீவதாது பகலவ னுகிர் கோல் திங்கள்
பொறைதரு முத்து நத்தை பூமன்வத் தியபூன் புந்தி
இறகொடு பீலி வேந்தன் புழுகுகஸ் தூரி வெள்ளி
அறையு வெண் சாமரங்கள் சனிமயி ராக்கள் கொம்பே.

(இ-ள்.) ஆதித்தன் சீவதாதுவாய் வந்த விடத்து உகிர்கோல் முதலானவை யென்பது, திங்கள் முத்து, நத்தை, பலகறை முதலா னவை, செவ்வாய் உலர்ந்த மாமிசங்கள், புதன் இறகு பீலியென்பது வியாழம் புழுகு, கஸ்தூரி யென்க, வெள்ளி வெண்சாய் மறையென் பது, சனி மயிரென்பது, பாம்பு கொம்பென்பது இவை யெல்லாம் நட்பாட்சியுச்சங்களால் வலிபார்த்து வலியதனல் தாதுமூல சீவனி ருமிப்பது. எ-று. 318

கிரகவடிவு.

கொம்பனாய் கதிர்நான் மூலே மதிவட்டந் துடிசேய் சூர்மால்
வெம்புமுக் கோணம் வேந்த னீள்பட்டம் வெள்ளி யெண்கோண்
நம்பிய சனிவிற் பாம்பு நெடிதுருப் பகரிற் சேரி
லம்பொனூர் புகருள மதிநீ ரறிவனவீ டல்லார் கேடே.

(இ-ள்.) ஆதித்தன், நாலுமூலே, சந்திரன், வட்டம், செவ்லாய் துடிவடிவு. புதன் முக்கோணம், வியாழம்நீளவட்டம், வெள்ளி எண் கோணஞ், சனி விற்போலிருக்கும், பாம்பு நெடிதென்ப. இவ்வகை யாய் கிரகவுருக்களின் பேதங்கள் சொல்லுவது இச்சேர் விடஞ் சொல்லும்படி வியாழன் ஊர் வெள்ளி ஊருக திங்கள் நீருக்குள் புதன் அகமொழிந்த கோட்கள் காடு. எ-று. 319

கிரகங்கள் சேருமிடம்.

காடுநன் னிலமூ றேரி கருமலே சிற்றூ ராறு
நாடிய கிணறு தோட்டம நதிக்கரை கயமுந் நீர்கள்
மேடமுன் கயலீ ராக யுடைவிடந் தீக்கோள் மிஞ்சில்
கேடது காணு நற்கோள் மிஞ்சிடிற் கெடுதி போகா.

(இ-ள்.) மேஷம் காடு, ரிஷபம் விளைநிலம், மிதுனம் ஊர். கடகங் குளம், சிங்க மலே, கன்னி சிற்றூர், துலா மாறு, விருச்சிகங் கிணறு, தனுசு தோட்டம், மகர மாற்றங்கரை, கும்பங் கயம், மீன மலே சமுத்திரமென்று மிவ்வகையாலே சேர்விடஞ் சொல்லுவது தீக்கோள் மிஞ்சில் காணவொண்ணது நற்கோள் மிஞ்சில் காண லாம், எ-று. 320

சிரோதயபிருட்டோபிய விராசி.

போகமார் கன்னி கோள்தேள் பொதுவரி மிதுனங் கும்ப
மேகமார் தலேயா லெட்சி விலங்குமீன் மிக்க பின்னு
மேகிடாக் கெடுதி பாடு முதையமு மிரண்டு நோக்கிற் [ன்று.
றேகையா யொன்றேற் பின்பு தொன்றுநோக் கிலதோற் றெ

(இ-ள்.) கன்னி, துலா, விருச்சிக, சிம்ப, மிதுனங், கும்பமிவை தலேயாலெடசி. மீனம் விலங்கு நோக்கில்லாதவை பிருட்டோ தய முதையமும் பாடுமிரண்டுஞ் சிரோதயமாகிற் கெடுதிகாணலா மெனபது ஒன்று நோக்கிற் பின்பு தோன்றும் பிருட்டோதயமாகிற் காணவொண்ணுது. எ-று. 321

சோரர்கள் பேரறியமுட்டி.

தோன்றிய வுயிர்கள் பேரி லெழுத்தெலாந் தூய்தா எண்ணி
மூன்றுட மூன்றிற் றாக்கி முன்சென்ற வோரைக் கூட்டி
யூன்றிய பேருக் கீய்ந்தா லொக்குமோ வில்லைச் சேடந்
தோன்றுமே லப்பேர் கள்ளன் வாறற் றுணிந்து சொல்லே.

(இ-ள்.) அசுத்தபேரில் எழுத்தை யெண்ணி (கூ) ல் பெருக்கி உதயாதிசென்ற இராசியையு மிதனோடே கூட்டிய பேருக்கீய்ந்தால் ஒத்தாலில்லை யென்பது ஒக்கயீயானின்ற சேடமெத்தனையென் றறிந்து அப்பேர் கள்ளனென்பது வாரத்தாற் றுணிந்து சொல்லென்ற கருத்து அவ்வீயாதசேட மெத்தனையாங் கிழமையுடையா னென்றறிந்து அத்தனையாங் கிழமை யுடையானுக்குச் சொன்ன குணங்களுண்டாகில் அவனே கள்ளனெனத் துணிதல். எ-று. 322

சொல்லிய முடிய வைய்யோன் றோல்மாஞ் சோம னீரிற்
புல்லிய செய்தீ வேந்தன் புந்திபச் சிலைபொன் செங்கல்
நல்லவான் புகர் பளிங்கு மணற்சனி கரிமண் ணாகங்
கல்விதை வேர்கள் மற்று முன்புபோற் கண்டு கொள்ளே.

(இ-ள்.) ஆதித்தன் தோலென்று மரமென்றுஞ் சந்திரன் நீரில் வாழ்வனென்றுஞ் செவ்வாய் நெருப்பில் வெந்ததுவென்றும் புதன் பச்சிலை யென்றும், வியாழம் செங்கல்லென்றும், வெள்ளி பளிங்கு மணலென்றும், சனி களிமண், கரியென்றும், பாம்பு கல்லு விதை வேறென்று முன்பு தாது மூல சீவன் சொன்னவையு மாராய்ந்துச் சொல்வது. எ-று. 323

சிந்தனை.

கண்டசிந் தனைபுவிக் கோள் வலிதெனிற் புவியெண் காதல்
மண்டியல் விடைநிலைக் கோள் வலிதெனி லிடையென் மற்றை
புண்டசிந் தினையே னுச்சக் கோள்வலி தென்ன லாங்கே
பண்டுபோற் றாது மூல சீவன்க ளுணர்ந்து பாரே.

(இ-ள்.) பூமிக்கோள் வலிபெற்று நிற்கிற் பூமிசிந்தனை யென்று மிடநிலைக்கோள் வலிதெனி லிடையிற் சிந்தனையென்று, முச்சக்கோள்வலிதாகிற் ஆகாய சிந்தனையென்று மின்னவகையறிந்து முன்போலத் தாது மூல சீவன் பார்த்துச் சொல்வது. எ-று. 324

காலஞ் சொல்ல.

பால்மதி மூகூர்த்தஞ் சேய்நாள் பதினைந்து வெள்ளி பைம்பொ
மேலொரு திங்கள் மேதை யிரண்டுவெப் யோனுக் காறு [ன்

ழீழனுக் கொன்று காலம் நினைத்திடுங் கருமமெல்லாஞ்
சாலவு நன்று நற்கோள் வலியவேற் றவறுந் தீக்கோள்.

(இ-ள்.) முடியு மூடியாதென்கிற பொருளுக்கு காலஞ்சொல்லு ம்மடி சந்திரனுக்கொரு முகூர்த்தஞ் செவ்வாய்க்கொரு நாள் வெள் ளிக்குப் பதினேந்துநாள், வியாழத்திற்கு ஒருமாதம் புதனுக்கிரண்டு மாத மாதித்தனுக் காறுமாதம், சனிக்கு ஓராண்டு என்று காரிய சிந் தனைக்கு நற்கோள் வலிதாகில் நன்றென்றுந் தீக்கோள் வலிதாகில் தீதென்றுங் கொள்வது. எ-று. 325

பிறந்தநாளறிய.

கோதிலா ரூடந் தன்னிற் குறித்தற் கைந்தொன் பானில்
மாதவர் பிறந்த நாட்கள் வருவது வழுத்தென் றெண்ணி
லோதிய சரங்கள் வாமந் திரம்வல முபையஞ் செய்வே
யேதமில் சரமே முந்நாட் டிரங்கடை யிடநாள் மற்றே.

(இ-ள்.) பிறந்தநாளறிய வேண்டில் வினவினவனுடைய வாரூ டவிராசியினும் அதற்கைந்திலும் ஒன்பதிலுங் கண்டுகொள்க இவை மூன்றிலும் ஒன்று நிச்சயிக்கவேண்டில் வினவினன் இடப்பாலுற் றிருக்கில் சராசி யென்றுந் தென்பாலுற்றிருக்கில் ஸ்திரராசி என் றும் செவ்வையா யிருக்கில் உபயராசியென்றும் அவ்விராசியி லிந்நா ளென்று அறியவேண்டில் சராசியாகில் அவ்விராசியில் முதல்நாள் என்றும் ஸ்திரராசியாகில் கடைநாளென்றும் உபயராசியாகில் நடு நாளென்றும் அறிவது ஓதியவென்றவுதனுல் உதயத்தினும் ஆரூட த்தினும் நோக்கினும் வலியதனுற் கண்டுகொள்க. எ-று. 326

அக்ஷரமும், தெய்வமும், கோளும், யோனியும்.

மற்றமுற் கதிர்சேய் பொன்மாற் புகர்சனி மதிபாம் பீறு
முற்றிகை முதலா ளுடி யேழரை முயையிற் பேறுஞ்
சொற்றதிர் பாதி யோனி கொடியதிற் பாதி சூரர்
மிற்றகா ராதி யீரெட் டெழுத்திரண் டரையிற் பேறும்.

(இ-ள்.) கிழக்கு ஞாயிறு, தென்கிழக்கு செவ்வாய், தெற்கு வியாழம், தென்மேற்குப் புதன், மேற்கு வெள்ளி, வடமேற்கு சனி, வடக்கு சந்திரன், வடகிழக்கு பாம்பு, இவர்களிந்தத் திக்கிலே நின் று ஏழரை நாழிகையிற் பேறுவார்களென்பது யோனியும் பதாகை யும் மூன்றே முக்கால் நாழிகையிற் பேறும், தெய்வம் ஒன்ணேமுக் காலரிக்கா நாழிகையிற் பேறும், அட்சரம் படி அ ஆ கிழக்கு, இ ஈ

தென்கிழக்கு ஈ தென்கிழக்கு உ ஊ தெற்கு ரு ரூ தென்மேற்கு லு லூ மேற்கு எ ஐ வடமேற்கு ஒ ஔ வடக்கு அம்ஹ வடகிழக்கு நின்று இரண்டரை நாழிகையிற் பேறும் இவர்களெல்லாம் நிற்கிற நிலையிலே நிற்கிற் கள்ளரும் கேட்டளவும் காரியங்கொள்ளப் போவாருமுளரே என்பது இவர்கள்பேரில் பேர்ந்த திக்கிலே போம்.

அட்சரமும், இராகு வோட்டமும்.

போரெழுத் தொருபத் தெட்டிற் பெரியசேய் புகர்மால் பொன்சுன்
சூரியன் மதியி ராகு கேதுவென் றிவர்க்குச் சேரார்
தோரிரண் டொருவ ருக்கு மூரகனண் டாதி வாமஞ்
சாருமை யரையா நாடி யறிந்தட்டாங் தறிக்காற் றன்னல்

(இ-ள்.) க ங செவ்வாய், ச ஞ வெள்ளி, ட ண புதன், த ந வியாழம், ப ம சனி, ய ர ஆதித்தன், ல வ சந்திரன், ழ ள இராகு, ற ன கேது இவ்வட்சரங்களிலே கோட்களுக்கு என்றும் இவர்கள் நின்ற திக்குகளுக்கு மென்று மறிவது இவ்வட்சரங்களாற் கேட்டவுருக்கள் பெயருங் காரியங்கொள்ளப் போவார் பேருற்றுள்ளவையு மறிவது இராகு ஓடும்படி உதயாதி முதலாக ஒருராசிக்கு இரண்டரைநாழியாகக் கடகமுதல் சிங்கமீறாக யிடமே யோடுமென் றறிவது இவ்விராசியுங் தரிக்காலு மறிந்து இதனாலே தாதுமூல சீவன்களு நிச்சயித்து நட்சத்திரங்களெல்லாம் தப்பாகாமற் சொல்வது எ-று.

கீழ்நீர்ராசி.

காலமான் றலையே கேட்டை களிர்மூத னுங்க தோண
மேலுமூன் றறிவர் முன்மூ னிருபூச மாயிற் சால
சேல்சுறு விடைநண் டிந்து புகராராச் செழுநீ ருண்டாம்
நாலுதை யாரூ டத்து நற்கோட்கள் நன்மை சாற்றே.

(இ-ள்) மிருகசிரிடம், கேட்டை, அஸ்தமுதல் நான்கும், திருவோணமுதல் மூன்றும், உத்திரட்டாதிமுதல் மூன்றும், புனர்பூசமுதல் மூன்றும், இந்நாட்களும் கும்பம், துலாம், மீனம், மகரம், ரிஷபம், கடகம் இவ்விராசிகளும் திங்கள், வெள்ளி, பாம்பு இக்கோட்களும் செலவு முண்டெண்பது. அல்லாதவை செலவில்லை என்பது சொன்ன வுதையாரூடக் கவிப்புக்களாலும் இவை யீற்றில் சுபக்கிரகங்கள் நிற்பினும் நோக்கினும் உதைய வாரூடங்களுக்கு ச-மிராசியிலும் பெருக்கச் செயமுண்டென்பது. இவை யீற்றைப் பாபர்நோக்கில் நீரில்லையென்பது கவிப்பிராசி செலராசியாகில் மேலூற்றென்பது அல்லாதவை கீழூற்றென்பது ஊற்றுக்கும், கோளுக்கும், இரா

சிக்கும் அடைத்த திக்கிலே யென்பது அல்லாதவை கீழுற்றென் பது ஆறுநீர் வரவுக்காலெல்லாம் உதைய வாரூடத்திற்கு ஏழாமிரா சியாற் பலன் சொல்லுவது, எ-று.

இரசளம்.

சார்கதிர் சுடரீ ரெட்டுச் சந்திர னுலு சேய்பத்
தேற்புத னென்பா னேழ்பொன் புகரைந்து சனிமூ வேழா
மூரரா வொருபத் தைந்தா முச்சஞ்சான் முழந்தா மூட்சி
பாரிலாள் மட்டு நட்பாம் பகைநீசந் தூரம் பாவாய்.

(இ-ள்.) ஆதித்தனுக்கு கதிர்-கசு, சந்திரனுக்கு-ச, செவ்வாய் ൦, புதன்-கூ, வியாழம்-எ, வெள்ளி-ரு, சனி-உக, பாம்பு-கரு இக்க திர்கள் உச்சத்தாற் சாணென்றும்; ஆட்சியால் முழமென்றும், நட் பால் ஆள் மட்டமென்றும், பகை நீசத்தால் தூரமென்றும் சொல் வது நற்கோள்வரில் வெட்ட எளிதென்றும், தண்ணீர் நல்லதென் றும் சொல்லுவது. தீய்க்கோள்வரில் பாரையென்றும், தண்ணீர் உவ ர்ப்பென்றும் சொல்வது, எ-று. 330

பூச்சல்லியம் பகல்.

பாறறை நாலேழ் கீற்றே பனைவைத்துப் பன்னேழ் நாள்சூழ்ந்
தேர்வல தென்மேற் கீசன் முதல்வடக் கொருநாட் கெண்ணிச்
சீர்மிக மிதுன மேற்கார் தெற்கொடு கிழக்கு மெண்ணி
நீர்மதி நின்ற நாட்பி னிருதிமேல் நிறுத்து விட்டம்.

(இ-ள்.) சிறுகாலே முற்பகல் மேற்கு நோக்கப் பார்த்திருந்து ஒத்தநிலத்திலே கீழ் மேலாக எட்டுரேகையும், தென்வடக்கு ஐந்து ரேகையும், கீறில் இருபத்தெட்டறையாம் இவ்வறைகளில் தென்கீழ் மூலவறையிலே அனுஷத்தை நிறுத்தி வலமாக கஎ-நாள் அனுஷம் கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், அபிசித்து, திருஓணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசு வனி, பரணிமுதல் நாலுமாக எண்ணித் தென்மேலறையிலே திரு வாதிரையை நிறுத்தி அதுமுதலாக வடக்கு நோக்கி புநர்பூசம், பூசம். ஆயிலியம் என்றெண்ணி ஆயிலியத்திற்கு மேலறையிலே மக த்தைவைத்து தெற்குநோக்கி மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித் திரை, சோதி, விசாகமென்றெண்ணி இப்படி இருபத்தெட்டுநாளும் இருபத்தெட்டறையிலும் இறுத்துவது. இப்படியே உச்சிக்குமேல் பிற்பகல் தென்மேல் மூலையறையிலே அவிட்டத்தை நிறுத்தி இரு பத்தெட்டு நாள்களுங் காண்பது எ-று.

பூச்சல்லியச்சக்கரம் பகல்.

முற்பகல் மேற்கு.

(இடப்புறம்: வடக்கு. வலப்புறம்: தெற்கு.)

அனுடம்	கேட்டை	மூலம்	பூராடம்
விசாகம்	சுவாதி	சித்திரை	உத்திராட
மிருகசீரிடம்	திருவாதி	அஸ்தம்	அபிசித்து
ரோகணி	புனர்பூசம்	உத்திரம்	திருவோண
கார்த்திகை	பூசம	பூரம்	அவிட்டம்
பரணி	ஆயிலியம்	மகம்	சதையம்
அசுவனி	ரேவதி	உத்திரம்	பூரட்டாதி

கிழக்கு

பிற்பகல் மேற்கு.

(இடப்புறம்: வடக்கு. வலப்புறம்: தெற்கு.)

பூரம்	உத்திரம்	திருவோண	அவிட்டம்
மகம்	அஸ்தம்	அபிசித்து	சதையம்
ஆயிலியம்	சித்திரை	உத்திராட	பூராடம்
பூசம்	சுவாதி	பூராடம்	உத்திராடம்
புனர்பூசம்	விசாகம்	மூலம்	ரேவதி
திருவாதி	அனுடம்	கேட்டை	அசுவனி
மிருகசீரிடம்	ரோகணி	கார்த்திகை	பரணி

கிழக்கு

பூச்சல்லியம் இரவு.

விட்டமுன் மாலை வாயு வாரல்மெய் மகம்பின் மாலை
நெட்டிரா நிறுத்தி முன்போல் நினைத்திரு சக்க ரத்தால்
வட்டம்நான் காலந் தோறுந் திசைமாறி மதிமேற் றோன்றும்
உட்டிணம் வைத்துச் சோம னுறைவிடம் நிறைநீ ருண்டாம்.

(இ-ள்.) இராமுன்போது முன் கீறினைப்போலே கிழக்கு நோக்கிப் பார்த்திருந்து வடமேற்கு மூலையறையில் கார்த்திகையைவைத்து முன்போல யெண்ணிக்காண்பது இரா. பின்போது வடகிழக்கு மூலையில் மகமுதலாக வெண்ணி இருபத்தெட்டு நாளுங் காண்பது இப்படி நாலுபோதும்) எண்ணினால் சந்திரனென்று பேயராம் அப்போது அச்சந்திரனிலே உதிக்கிற ராசியைச் சாஸ்திர வுபயமென் றறிந்து அவ்வகையில் தானமாக்கிய முழுநாட்களில் ஒன்றைநிறுத்தி

அன்று சந்திரநின்ற நாளளவுமெண்ணுவது. பெருநீரென்றறிவது இராகுநின்ற நிலையளவு முன்போலெண்ணப் பழங்கிணறென்றறிவது, வெள்ளிநின்ற அரையில் பின்னே அபிசித்து நிறுத்துவது வெள்ளி நீருண்டென்பது, வியாழம் நின்ற அரையளவு மெண்ணப் பூச்சல்லிய மென்றறிவது, உத்திராடத்தின் பின்பே அபிசித்துவைத்து முன்பு சொன்னவனிட முதலனைத்து நாட்களெல்லாம் இரண்டேயரைக்கால் நாழிகையிற் பெறுமென்றறிவது எ-று.

பூச்சல்லியச்சக்கரம் இரவு.

முன்னிரவு மேற்கு.

வடக்கு. / தெற்கு.

கார்த்திகை	ரோகணி	மிருகசீரிட	திருவாதிரை
பரணி	அசுவனி	ரேவதி	புநர்பூசம்
மூலம்	பூராடம்	உத்திரா	பூசம்
கேட்டை	உத்ராடம்	பூரட்டாதி	ஆயிலியம்
அனுடம்	அபிசித்து	சதையம்	மகம்
விசாகம்	திருவோண	அவிட்டம்	பூரம்
சுவாதி	சித்திரை	அஸ்தம்	உத்திரம்

கிழக்கு.

பின்னிரவு மேற்கு.

வடக்கு. / தெற்கு.

சதையம்	பூரட்டாதி	ஆயிலியம்	மகம்
அவிட்டம்	உத்திரம்	பூசம்	பூரம்
திருவோண	ரேவதி	புநர்பூசம்	உத்திரம்
அபிசித்து	அசுவனி	திருவாதி	அஸ்தம்
உத்திராட	பரணி	மிருகசீரிட	சித்திரை
பூராடம்	கார்த்திகை	ரோகணி	சுவாதிட
மூலம்	கேட்டை	அனுடம்	விசாகம்

கிழக்கு.

பூச்சல்லியமுட்டி.

உண்டவப் போத ளந்த வடியினை லேகூட் டிங்கு
தண்டுபத் தாறுக் கீய்ந்தா றலையோடென் பிட்டி கையாங்
கண்களணி தெய்வஞ் சாப்பற் சரிவஞ் சாலி பொன்கல்
பண்டுகேங் கொப்பு நாய்கா லனற்கூதம் விழியாய்த் தோன்றும்.

(இ-ள்.) பூச்சல்லியம் வினவினபோது அடியளந்து அவ்வடியை நிறுத்தி அதன்மேல் உஅ-கூட்டி கக-க் கீய்ந்தால் ஈபாதசேடம் ஒரு கில் தலையோடு உ-ஆகில் எலுப்பு, ங-ஆகில் யிரும்பு செங்கல் ரு-விறகு, சு-தெய்வங்கள், எ-சாம்பல், அ-கரி, சு-பிணம், கo-தானியம், கஉ-கல்லு, கந-தவளை, கச-கொம்பு; கரு-நாய், கசு-சாலோடு இவ்வகையால் கசு-பொருளை வறிவது முன்பு கிணிற்குச் சொன்ன சக்கரத்தால் பூச்சல்லிய மின்ன விடத்திலே கிடக்குமென்றும் முன் கிணிற்குச் சொல்ன கோட்களின் கதிர்க்களாலே இன்னதனை யாழத்திலே கிடக்கு தென்றுஞ் சொல்வது எ-று. 333

சந்திரகேதி.

தோன்றிய மேட மாதி மீன்வடி வாகச் சோமன்
ஏன்றபோக் கிருப்பும் பூச லெழுன்மறை பயிற்றற் பிள்ளை
யூன்றுநோய் வெறுப்பே கேடு பசியிழைப் புறக்க மூண
மான்றவழ் மதிகு ணத்தான் வரும்பலா பலம் வழுத்தே,

(இ-ள்.) மேஷம் சந்திரன் நடை, ரிஷபம் இருப்பு, மிதுனம் பூசல், கடகம் வேதமோதல், சிங்கம் பிள்ளை, கன்னி நோய், துலாம் வெருப்பு, விருச்சிகம் கேடு, தனுசு பட்டினி, மகரம் அனுபோகம், கும்பம் உறக்கம், மீனம் ஊண் இப்படியாக ஒருவன் காரியம் வினவினபோது சந்திரகெதியைப் பார்த்து பலாபலஞ் சொல்லுவது.

சூரியன் அங்குசகுணம்.

வழித்திர படர வஞ்சான் வயிறுடன் பெரிய கோபி
விழித்திரம் நிரமுஞ் செய்யான் மெய்மையன் றாய்மை நெஞ்சு
னழிப்பறு மோகி செல்வ னையமோ வரய நண்பன்
பழிப்பிலான் சுருண்டு நீண்ட பங்கயன் பருதிக் காலன்.

(இ-ள்.(ஆதித்தன்குணம் அஞ்சாது யாத்திரைபோவன்; வயிறுஞ் சரீரமும் பெரியன், கோபி, சிவப்புள்ள கண்களுடையன், சத்தியவான், உத்தமன், தேஜசுடையவன், மோகி, சீமான், ஜபமோவாயன், தேகி, சுருண்டுநீண்ட மயிருள்ளவன் எ-று. 335

சந்திரன் அங்குச குணம்.

காந்தனன் முகத்தின் வங்கண் கண்சிறி தமோ வாயன்
சேர்ந்தவற் கன்பன் மந்தன் சென்னெறி குறளன் செல்வன்
வாய்ந்தமா னிறவன் வார்த்தை நிலையிலான் மயிர்நீண் டையன்
தோய்ந்திடு நீரிற் றங்குஞ் சாமணங் கிசத்தி ரூனே.

(இ-ள்.) சந்திரன்குணம் அழகன், முகத்திலே வங்கன், கண் சிறியன், ஜபமோவாயன், அடுத்தவற்குச் சிநேகிதன், மந்தன், செங் கெறியாயிருப்பன், குறளன், ஸ்ரீமான், மானிறன், வார்த்தைநிலையி லான், நீண்டமயிரன், எப்போதுங்குளுர்ச்சி யுள்ளவன் எ-று.

செவ்வாய்அங்குச குணம்.

அஞ்சலான் கடுஞ்சொலாள னும்பொரு ளற்பன் கோபி
வெஞ்சமா விருப்புஞ் செய்யன் மெய்யன்மே தினிதி ருந்தும்
வஞ்சக னுலோபி சற்றாண் மறுவுடை முதுகன் றேசன்
விஞ்சிய கிலேசி வீரன் வெவ்வியன் செவ்வாய்க் காலன்.

(இ-ள்.) செவ்வாயின்குணம் அஞ்சான், கடுஞ்சொல், தன்சீவ னமில்லான், கோபி, பூசல்விரும்பி, நிறஞ்சிவப்பு, பூமிதிருந்தும், வஞ்சகன், லோபி, சற்றாண், முதுகிலே மறுவுடையன், பிரகாசி, எப்போதுந்துக்கி, வீரன், செவ்வியன் எ-று. 337

புதனங்குச குணம்.

செவ்வியன் றியாகி மோகி தெய்வங்கள் பேணு மெய்யன்
கைவரும் பாடல் ஞானி காளையங் கருதுஞ் சூரன்
மெய்வரு தருமென் றேச பிரியன்மேம் படுகு ணத்தான்
மைவருங் குழலாய் நன்றி மறந்திடான் மாலி காலன.

(இ-ள்.) புதன், குணம், செவ்வியன், தியாகிமோகி தெய்வங் கள் பேணும் சத்தியனுனவன் பாடவல்லன், ஞானி, போர்வீரன், தர்மவான் தேசுடையன் பிரிய முள்ளவன் மேம்படு குணத்தான் நன்றி மறவாதவன், எ-று. 338

வியாழணங்குச குணம்.

மாதவன் சுத்தன் றேசன் மந்திரி தருமன் செல்வன்
காதலர் பெருக னீண்ட கல்வியன் சிவந்த கண்ணன்
நீதிய னினிய சொல்ல னீண்டமோ வாயா னயன்
மேதகு மறிவன் பல்காற் குளித்திடும் வியாழக் காலன்

(இ-ள்.) வியாழன், குணம், தவசுடையவன் சுசிகரமுடையவன் அழகுடையவன், மந்திரி தர்மமுடையவன் தனவான நிறைபுத்திர சந்தானம் மிகவும் விம்பிரின் சிவந்த கண்ணன் நீதியன் இனியசொல் லன் நீண்ட மோவாயன் மிக்க அறிவுடையவன் எப்பொழுதுங் குளிக் குந் தன்மையன், எ-று. 339

வெள்ளியங்குச குணம்.

காதலன் வீரன் சூரன் கானமுங் கருது தேசம்
ஓதுமெய் வடிவன் றிண்ண னுத்தம னெறியாச் செல்லன்

பாதக மிலாத நெஞ்சன் பண்டிதன் பருத்த மெய்யன்
போதவான் செய்த நன்றி மறந்திடான் புகரின் காலன்.

(இ-ள்.) வெள்ளியின் குணம் சினேகி, வீரன், மகாசூரன், இயானமுடையவன் ஓதும் வல்லவன் வடிவழகியன் திண்ணியன் உத்தமன் தீர்க்க சீவினி, சுத்தமனதன், வித்துவான், சரீரம் பெருத்தவன் புத்திமான செய்நன்றி மறவான், எ-று. 340

சனியினங்குச குணம்.

புகழிலான் பொய்ய னஞ்சான் புறவடி பெரிய னூன
னிகழ்பெறு வயிரன் கள்ள னிருந்தவன் குறளன் றோளன்
அகழிய னுடை பேணு மரும்பொரு ளற்ப மீட்டுந்
தகவிலன் காரியன் மெய்யன் சனியினங் குசத்தான் றானே.

(இ-ள்.) சனியின் குணம் புகழ் விரும்பான், பொய்யன், அஞ்சான் கால் பெரியன், மிகவும் போசனப் பிரியன், வயிறு பெரியன், கள்ளன், மகா தபசுடையவன், குறளன், தோள்வலியன், உலோபி ஆடைவிருப்பன், தரித்திரன், தயையிலான், நிறங் கறுப்பென் இந்த குணங்களினாலே யறியாதவர்களையும் இன்ன அங்க சத்தானென்றும் அர்த்த மெடுத்தானென்றும் கொண்டு போனாரையும் காரியங் கொள்ளப் போனாரையுங் குலவகைபால் அறிந்து சொல்வதென்றவாறு. 341

கோசரங் கிரகவேதை.

ஆன்றபதி னொன்றுமூன் றீரைந் தாறு
மருக்கன்மதி யொன்றுமூன் றாறேழ் பத்தோ
டென்றபதி னொன்றரவு சனிசேய் மூன்றே
யிருமூன்றேபத் தொன்றுமா யிரண்டு நான்கு
மூன்றிருவெட் டீரைந்து மீரைந்தே டென்று
மொழிந்திடுபொன் பதினொன்றேன் பானேழந் திரண்டா
மான்றபுகர் பன்னொன்றீ ராரிரண்டெட் டொன்று
வருநான்கு மூன்றைந்தோன் பான்வருவர் வாழவே.

(இ-ள்.) கக-௩-க0-௬-மிடம் ஆதித்த நல்லன் க-௩-௬-எ-க0-கக சந்திரனல்லன் ௩-௬க-ம் இராகு, செவ்வாய், சனி, நல்லன் உ-ச-௬-அ-க0-கக.மிடம் புதனல்லன் கக-௬-எ ௫-உ-மிடம் வியாழம் நல்லன் கக-கஉ-உ-அ-க-ச-௫-௩-மிடம் வெள்ளி, நல்லன், எ-று.

விபுரீத வேதை.

வாய்ந்தகதி ரோனேந் தொன்பா னுலீராறு
மதியைந்தொன் பானீரா றிரண்டு நான்கெட்டா

மாய்ந்தசனி சேயரவி ராறென்பா னைந்தா
  மாய்புதனைந் தொடுமூன்பா றென்றெட் டீரா
றேய்ந்தகுரு விருநாலீ ரைந்துமூன்று நான்கோ
  டீராறு புகர்மீன்றே ழைந்தெட் டீரைந்து
மாய்ந்திடுமோன் பதுமீரு றுபத் தொன்றும்
  மாயிழையே கிரகவேதை மாய்ந்துகொள் நீயடைவே.

(இ-ள்.) கோசரபலத்தில் ஆதித்தன் முன்புசொன்ன ௧௧-மிடத்திற் பலன்றருவது ௫-மிடம் சுத்தியாகில் ௩-மிடத்தில் பலன்றருவது, ௯-மிடஞ் சுத்தியாகில் ௰-மிடம் பலன்றருவது, ௪-மிடஞ்சுத்தியாகில் ௬-மிடம்பலன்றருவது, ௧௨-மிடஞ் சுத்தியாகில் சந்திரன் முன்புசொன்ன ௧-௩-௭-௰-௧௧-மிடம் பலன்றரும். ௫-௯-௧௨-௨-௪-௮-மிடஞ் சுத்தமாகிலென் றறிவது. இராகு, சனி, செவ்வாய் முன் ௩-௬-௧௧-மிடம் பலன்றருவது ௧௨-௯-௫-மிடஞ் சுத்தியாகில் பலன்றரும். புதன் முன்சொன்ன ௨-௪-௬-௮-௰·௧௧-மிடம் பலன்றரும்' ௫-௩-௯-௧-௮-௧௨-மிடம் பலன்றருவது· ௮-௰·௩-௧௨-மிடஞ் சுத்தியாகிலென்றறிவது. வெள்ளி ௧௧-௧௨-௨-௮-௧-௪-௩-௫·௯-மிடம் பலன்தருவது. ௩-௬-௭-௫·௮-௧௨-௧௧·மிடஞ் சுத்தமாகிலென் றறிவது இவ்வடைவே கிரகவேதை பார்த்துச் சொல்லுவது எ-று.

கேள்வேதை வரிலுரைத்த கோசரங்கள் பலியாக்
  கோசரக்கோள் கோள்வேதந் தன்னிலமி நிற்கக்
கோள்வேறு கோசரத்தோ நிற்குமே யாகிற்
  கொடியவரும் நலங்கொடுப்பர் விபரீத மான
நாளோரை முதலாகக் கோட்கதிர்சேய் முன்னே
  நலந்தருவர் பொன்வெள்ளி நடுவிற்பலன் தருவர்
நீள்காரி மதிபின்னே நினைத்தப லன்றருவர்
  நின்றபுதன் பாம்புபலா பலமென்று நேரே.

(இ-ள்.) கிரக வேதைவரில் கோசாரபல மீயாதென்பது முன்பு சொன்ன கோசாரக் கோட்கள் கிரகவேத நிலையிலே நிற்கப்பெற்ற கோட்கள் கோசாரஸ்தானத்திலே நிற்பாராகில் தீதானகோட்களும் நன்மையைத் தருமென்க இவை கொள்ளும்படி சந்திர லக்கினத்துக்கு ௫-மிடத்தில் ஆதித்தநிற்க ௰ மிடத்திலே கோட்களுண்டாகில் ௧௨-மிடத்துநிற்க ௬-மிடத்துக் கோளுண்டாகிலும் ஆதித்தன் பலன்தருமென்பது மற்றுமுள்ளவையு மிப்படியே. விபரீதம் பார்த்துக் கொள்ளுவது இவையெல்லாம் ஆதித்தனும் செவ்வாயும் முன்னே பலன் கொடுப்பார்கள், வியாழனும் வெள்ளியும் நடுவே பலன்றரு

வர், சந்திரனுஞ் சனியும் பின்னே பலன்றருவார், புதனும் பாம்பும் எப்போதும் பலன்றருவர். 343

அங்கச்சனி.

என்றுந் தீயவன் வாயோராண் டினிபன் வலக்கை நாலாண்டு
சென்று நடத்துங் காலாறுந் தீமை யிடக்கை நாலாண்டும்
நன்றி யூணுப் வயிறைந்தும் நயன மிரண்டுந் தனமுண்டாங்
கன்றும் புயங்க ளிரண்டுமுடி கவிசுருந் தலைமூன் றுடன்காரி.

(இ-ள்.) வாயில்நிற்கு மோராண்டுந் தீமையைச் செய்யும், வலக்கையில் நிற்கும் நாலாண்டும் அர்த்தமுண்டாம், காலில்நிற்கும் ஆறுண்டும் யாத்திரை யுண்டாகும், இடக்கையில் நிற்கும் நாலாண்டும் காரிய சேதமுண்டாம், வயிற்றில் நிற்கும் ஐந்தாண்டும் தலையில்நிற்கிறமூவாண்டும் அபிஷேக முண்டாகும், இராகு கேதுமிவ்வகையே அறிக எ-று. 344

அங்கச் சூரியன்.

காரார் குழலாய் தலைமூன்று மரசாங் கல்வி வாய்மூன்றுஞ்
சீராய் வயிறைந் திடமுண்ணுஞ் செம்பொன் தேடுங் கையெட்டும்
பாரேழ் நடத்துங் காலெட்டும் பகலோ னினமுற் பிறந்திடுநாள்
நேரே தொட்டுக் கோள்நின்ற தினமீ றெண்ணி நிகழ்த்திடுமே.

(இ-ள்.) தலையில்நிற்கு மூவாண்டும் இராச்சியம் பண்ணும் வாயில்நிற்கு மூவாண்டும் வித்தைகற்கும், வயிற்றில்நிற்கும் ஐயாண்டு விருந்தோடுண்ணும், வலக்கைநிற்கு மெட்டாண்டும் தனலாயமுண்டு காலில்நிற்கு மெட்ட ாண்டும் வழிநடக்கும் இவையெல்லாம் பிறந்த நாட்கொண்டு கோள்நின்ற நாளளவு மெண்ணிப்பலன் சொல்வது.

அங்கச் சேவ்வாய்.

இடர்வாய் மூன்றும் வலக்கணிரண் டின்ப மிடக்க ணிரண்டழிவா
மிடறோர் மூன்றுங் கைமூன்று மேம்பா டிடக்கை மூன்றிதுயர்
மடவாய் வலப்பா லொன்றுநல மிடமென் றழிவு வயிறைந்துண
நடபார் வலக்கா லிரண்டுநலம் நடக்கு மிடக்கால் யாத்திரையாம்.

(இ-ள்.) வாயில்நிற்கும் மூன்றுவருஷமுந் துக்கம், வலதுகண்ணில் இரண்டு மின்பம், இடக்கண்ணில் இரண்டு மழிவாம், கழுத்தில் கையில் மூன்றும் மேம்பாடுண்டாம், இடக்கையில் மூன்றுந்துக்கம் வலப்பால்லொன்று நன்மை, இடப்பால் லொன்று மழிவுண்டாம் வயிற்றில் ஐந்து மூக்குண்டாம், வலக்காலிரண்டு நலமுண்டாம் இடக்கால் இரண்டு மியாத்திரையுண்டாம் எ-று, 346

அங்கபுதன் வியாழன் வெள்ளி.

சேத மாக்குந் தலைமூன் றுஞ் செல்வ மாக்குங் கழுத்தில்மூன்
றேது நன்மை வலக்கைமூன் றுள்ளத் திடரா மிடக்கைமூன்
றுதி வயிற்றி லைந்தாக்க மறையி லிரண்டு மழிவுண்டாம்
பாத மெட்டு நலனுண்டாம் பைம்பொன் புந்தி புகர்நின்றால்.

(இ-ள்.) தலையில்நிற்கு மூவாண்டும் அர்த்தநாசம் கழுத்தில் நிற்கு மூவாண்டும் ஸ்திரீயுண்டாம் வலக்கையில் நிற்கு மூவாண்டும் நன்மை இடக்கையில்நிற்கு மூவாண்டும் மதுநோக்கம் வயிற்றில் நிற்கும் ஐயாண்டும் ஆக்கம் அரையில்நிற்கு மீராண்டும் அழிவுண்டாம் காலில்நிற்கு மெட்டாண்டு ஸ்திரீயுண்டாம் இப்படி வியாழம் வெள்ளி புதன் இம்மூவற்கும் அறிந்துகொள்ளும்படி எ-று. 347

காலச்சக்கிரவாண்டும் பலனும்.

நின்ற பருதி யையாண்டு நிலாமூ வேழுஞ் சேயேழு
மென்று வேதை யொன்பதும்பொன் பத்தும் வெள்ளி யீறெட்டு
மன்றுங் காரி நான்குந்தம் மாட்சி யொன்றி லடுத்துண்பர்
நன்றி யோரை யொன்பதுகால் நாலு மிரண்டே காலாமே.

(இ-ள்.) காலச்சக்கிரங் கொள்ளும்படி ஆதித்தனுக்காண்டு-ரு திங்கள், உக-செவ்வாய், எ-புதன், கூ-வியாழம், க0-வெள்ளி, கசு-சனி, ச-யிவ்வகையால் தந்தாமாட்சியிலே தந்தாம் உண்பர் இராசி என்பது கூ-காலென்றும் உவ-காலென்றும் அறிந்து பார்ப்பது.

காலை யறிந்தாற் கால்சேரு மிராக்கா லொன்ப துங்கதிருஞ்
சால வொருவ ளுயுவா மதில்மூன் றேரை தன்னாணை
யேனு மூவைத் துக்கியந்தா லீவோற் கடிகை கீழாகும்
வாலி தாங்கா லினிற்சென்று கடிகை கண்டு மறிந்துரையே.

(இ-ள்.) இன்னநா ளின்னதனை யாங்காளென்றறிந்து அக்கால் கிடக்கு மிராசியொன்பதிலு முண்ணுங் கோள்களின்கதிர் அவனிக் குப்புரமாயு வென்றறிவது இதின் முதலிராசி யுண்ணுங் கோட்களி லுண்டைப் பதினைந்துக்கியந்தால் ஈப்ந்த ஈவு நாழிகைக்கு இவ்வள வென்றரிவது அக்காலிற் சென்றநாழிகைக்கு ஆண்டைக் கழித்து நின்ற ஆண்டு யின்னதனை யென்றறிந்து ஆண்டொன்றுக்கு ஐந்தே காலாக நாளுங்கழித்து நின்ற தொகை யொருவனுக்குச் சொல்லும் பரமாயு எ-று. 349

சவ்வியம்.

மறியே றியாழ்நண் பரிபெண் கோள்வளர் தேள் தனுமாமுதற்காலாண்
கறவே சால்மீன் றேன்கொல பெண்துயர் நண்டரி யாழிகாலாண்

குறியே ரூடு மீன்சால்மான் குறிவிற் கொறியேறி யாழ்முக்கால்
சிறைசேர் நண்டு டிவிபெண் கோள் தேள்சி ருச்சால் பிறக்கால்.

(இ-ள்.) அசுபதி முதற்காலுக்குச் சக்கரம், மேஷம், ரிஷபம் மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, இவ் வொன்பதுமடைவே முதற்கால் உண்ணும் மகரம், கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி, கடகம், சிங்கம், மிதுனம் இவ்வொன் பது மிரண்டாங்கா லுண்ணும், ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம் தனுசு, மேடம், ரிஷபம், மிதுனம் மூன்றுங்கா லுண்ணும் கட கம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் நாலாங்கா லுண்ணும் எ-று. 150

அசுபதி. கார்த்திகை.

க-கால்	க	உ	ங	ச	ரு	சா	எ	அ	கூ
உ-கால்	௰	கக	கஉ	அ	எ	சா	ச	ரு	ங
ங-கால்	ங	க	கஉ	கக	௰	கூ	க	உ	ங
ச-கால்	ச	ரு	சா	எ	அ	கூ	௰	கக	கஉ

சவ்விய சக்கரம்.

காலே கோல் பெண்குளி ரரியாமே ரூடேமீன் சங்குற்கால்
சாலேமான் விற்கொறி யெருதியா ழதருநண் டரிபெண்குழலிருகால்
கோள்தேள்சிலைமான் குடமீன்றேள் கோல்பெண்முக்காற்குளரியாழ்
மால்சேய்க் கொறி மீன்குடமான் விற்பிக்கா லாரலமா வொக்கும்.

(இ-ள்.) பரணி முதற்கால் விருச்சிகம், துலாம், கன்னி, கடகம் சிம்மம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம் இவ்வொன்பது ராசியு முண்ணும் கும்பம், மகரம், தனுசு, மேஷம், ரிஷபம், மிதுனம். கட கம், சிம்மக்கன்னி இவையிரண்டாங்காலுண்ணும் துலாம், விருச்சி கம், தனுசு, மகரம், கும்பம், மீனம், விருச்சிகம், துலாம், கன்னி இவை மூன்றுங்காலுண்ணும் கடகம், சிம்மம், மிதுனம், ரிஷபம், மேஷம், மீனம், கும்பம், மகரம், தனுசு இவை நான்காங்காலுண் 351
ணுமென்றவாறு.

அபசவ்வியம்.

பரணி.

க-கால்	அ	எ	சா	ச	ரு	ங	உ	க	சஉ
உ-கால்	கக	க௰	கூ	க	உ	ங	ச	ரு	சா
ங-கால்	எ	அ	கூ	க௰	கக	சஉ	அ	எ	சா
ச-கால்	ச	ரு	ங	உ	க	சஉ	கக	க௰	கூ

மாவிற்சுறு சாமின்கொறி சேவருதண் டரிநண் டுருள்மு தற்கால்
பூவிற்பெண் கோள்தேள்மின் சால்பொய்மாள் விற்றேள் துலைபிழிகால்
காவிற்பெண் மானண்டி யாழ்சேத கர்விற்கை துக்குட முக்கால்
தூவிக்கயல்மறிசேயுதண்ட றியுங்குளிர் பெண்கோல்தேளாம்பிற்கால்

(இ-ள்.) ரோகணி முதற்கால் தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், சிங்கம், கடகம் இவை யுண்ணும். கந்நி, துலாம், விருச்சிகம், துலாம் இவை இரண்டாங்காலை யுண்ணும். கந்நி, சிங்கம், மிதுனம், கடகம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம் இவை மூன்றாங்காலுண்ணும். மீனம், மேஷம், ரிஷபம், சிங்கம், கடகம், கந்நி, துலாம், விருச்சிகமிவை நாலாங்காலையுணணும்.

அபசவ்வியசக்கரம்.

ரோகணி-திருவாதிரை.

௧-கால்	௯	௰	௧௧	௧௨	௧	௨	௩	௫	௪
௨-கால்	௬	௭	௮	௧௨	௧௧	௰	௯	௮	௭
௩-கால்	௬	௫	௪	௩	௨	௧	௧	௰	௧௧
௪-கால்	௧௨	௧	௨	௩	௫	௪	௬	௭	௮

குளிர்மீன் சாற்கலை மாவிசுறேன் துலைபெண் சிங்கங் குளிர்முக்கால்
தளமார் தண்டு விடைமருவிற் கலைசான் கொறி சேரிருகால்
துளையார் மிதுனம் பிலிகுளிர் பெண் டுலைதேள் மின்சால் கலைமுக்கால்
வளையார் சிலைதேள் துலைமகள் மரக்குளிரியாழ்குண் டைமரிநாற்காம்

(இ-ள்.) மிருகசீரிட முதற்கால் மீனம், கும்பம், மகரம், தனுசு விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கடகம் இவை யொன்பதுமுண்ணும். இரண்டாங்கால் மிதுனம், ரிஷபம், மேஷம், தனுசு, மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம் இவையுண்ணும். மூன்றாங்கால் மிதுனம், சிங்கம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மீனம், கும்பம், மகரம் இவை யுண்ணும். நான்காங்கால் தனுசு, விருச்சிகம், துலாம், கன்னி, சிம்மம், கடகம், மிதுனம், ரிஷபம், மேஷம் இவை யொன்பது முண்ணும் எ-று. 353

மிருகசீரிடம்.

௧ கால்	௧௨	௧௧	௰	௯	௮	௭	௬	௫	௪
௨-கால்	௩	௨	௧	௯	௰	௧௧	௧௨	௧	௨
௩-கால்	௩	௫	௪	௬	௭	௮	௧௨	௧௧	௰
௪ கால்	௯	௮	௭	௬	௫	௪	௩	௨	௧

மறிமான் றலையு முதற் காலுமாவின் கடைக்கா லிடத் துண்ணும்
சிறிமான் விழியா யாதிரை யின் முதற்கா லுரோகணி வருநாற்காற்
பெருமா முதல்மூன் றவைவலஙாட் பின்மூன றிடநாட் பெறும்வலநா
ளிறுமா வோரை யுயிராதி யுடலா முன்னுபி ருடல்பின்.

(இ-ள்.) திருவாதிரை முதற்கால்முதல் நாலும், ரோகணி முதற்கால்முதல் நாலும் ஒட்டிக்கொள்வது. மிருகசீரிட முதற்காலுக்கு அசுபதி கடைக்கால் இடமாகவுண்ணும். மற்றவைகளெல்லாம் வலவொட்டுநாட் கடையே இடைவொட்டுக்கு முதலாமிடமாக நடத்துவது. அசுபதிமுதல் மூன்றுநாளும் வலவொட்டுநாள், ரோகணி முதல் மூன்றும் இடைவொட்டுநாள், இப்படியே மும்மூன்றாக உளநாளையும் வொட்டிக்கொள்வது. அசுபதி முதலான வலவொட்டுக்களெல்லாம் அப்போது புசிப்பதே யுயிர், முடிவேவுடல், ரோகணி முத லிடைவொட்டுக் கெல்லாம் புசிப்புநாள் வுடலும், முடிவுநாள் உடலாகவும் வைத்துக் கொள்வது எ-று. 354

உடற்கோள் மறிமுன் வலவொட் டேணுநந் தேள்முன்னிடவொட்டு
ணிடக்கோள் தனுமேடத்தில் விழு மீன்றெட் பாயு மாவீணைப்
பிடிக்கத் தத்தும் பெண்ணண்டிற் றத்திரி யின் மேற்புரளு
படுத்த பொழுது தீக்கோளு னுயிர்போம் நற்கோ ளழிவுண்டாம்.

(இ-ள்.) வலவொட்டெல்லாம் மேஷமுதலாக மீனம்வரையிலும் திசைகொள்ளும், இடவொட்டெல்லாம் விருச்சிக முதலாக யிடமாக தனுசுவரையிலும் திசைகொள்ளும், புத்திக்கி பாச்சலே யொழிய திசைக்குப் பாச்சலில்லை, இடமாவது வலமாவது அடுத்து நடப்பது சலகெதி, மீனத்தினின்றும் விருச்சிகத்திற் பாய்ந்தாலும் தனுசில் நின்று மேடத்திற் பாய்ந்தாலும் சிங்காவலோக கெதியென்பது, விருச்சிகத்தில் நின்றும் மிதுனம் பாய்ந்தாலும் மேடத்தில் நின்றும் தனுசில்பாய்ந்தாலும் துரக்கதியென்பது ,கடகனின்று சிங்கம்புரள சர்ப்பகெதி, சிங்கம் நின்று கடகம் புரள மயூரகெதி, மிதுனம் நின்று சிங்கம் பாய்ந்தாலும் சிங்கம் னின்று மிதுனம் பாய்ந்தாலும் வுக்குட் கெதி நின்று கடகம் பாடா மண்டூரகெதி, இவ்வைந் துதிக்கும் போது தீக்கோளுணுகில் மரணமென் றறிவது நற்கோளுணுகில் வியாதியாயும் அர்த்தஹானிப முண்டென்பது எ-று. 355

உண்டா மரச ராலழிவு மிளைப்பு மருக்க லூண்சே யூண்
தண்டா வெதுப்புத் தீப்பாடு சனியூண் சிறையும் வழக்காடுங்
கண்டா ருவைப்ப மைந்தருடன கலவி புதனூண் கனகப்பொன்
வண்டார் குழலார் மணிபுகுவர் மதியூண வெள்ளி வாழ்வுண்டாம்,

(இ-ள்.) ஆதித்தனூண் அரசரால்விரனம் இளைப்புபித்தமுமாம் செவ்வாயூண்சுரமும் அக்கினிபயமுண்டாம், சனியினூண்சிறையும் வழக்குமுண்டாம், புதனூண் வித்தையப்பிபாசமும் புத்திரருமுண்டாம், வியாழமூண் அர்த்தலாப மிகவுண்டாம், சந்திரனூண் பரஸ்திரீ சேர்த்தியுமுண்டாம், வெள்ளியுண் அயிஸ்வரிய முண்டாம், இவ்வகையாற்பார்த்து நன்மைதீமை சொல்லுவது எ-று. 356

வாழும் பரமா யுத்தனுக்கு மன்னு மோரோர் கோளாண்டை
யாழின் சொல்லா யீந்தனை யாண்டு தோறு மாறியி—
வேழின் கோட்கும் பறித்துணு மிராசி யுடையாண் முதலுண்
சூழுந் துயரந் தீக்கோளுண் சுடரு நன்மை சுகந்தருங்கேள்.

(இ-ள்.) ஒருத்தருக்குச் சொல்லும் பரமாயுவறிந்து அதற்கோரோர் கோட்களுண்ணி மாண்டையீய்ந்தால் அந்த யீவு ஓராண்டிற் கூணும் அதன்படியிலே கோள்களுக்கு முன்புசொன்ன வூண்கள் தோறும் மேற்றியிடப்பித்துணும், ஒரு ராசியிலோரி ராசியுடையான் முதலாக வொன்பது கோளும் பறிச்சண்ணுமென்றறிவது, தீக்கோளுண்ணும்போது வியாதியும் அர்த்த அழிவுமுண்டாம் நற்கோளுண்ணும்போது அர்த்தலாபங்கள் உண்டாம் எ-று. 357

மகாதிசை ஆண்டும்பலனும்.

சோதி லருக்கன் மதிசெவ்வாய் கொடிய வராப்பொன் சனிபுந்தி
கேது வெள்ளி யாரால்முத லேழுமன்பா மடை வடைவே
யோது மாண்ட றீரைந்தே ழொருபத் தெட்டுப் பதினாறு
மீது பத்தொன் பதுபதினேழ் மேவு மேழு மிருதுமே.

(இ-ள்.) ஞாயிறு முதலேழு கோளும் இராகு கேதுவும் ஆக வொன்பதுகோளு மிவ்வடைவே கார்த்திகை முதலொன்பது உத்திரமுத லொன்பதும் உத்திராட முதலொன்பதும் இவ்வடைவே யுண்பார்கள் ஆதித்தனுக்கு ஆண்டு கூ-சந்திரன் ௧0-செவ்வாய் எ-இராகு கஅ-வியாழம் கசு-சனி ககூ-புதன் கஎ-கேது எ-சுக்கிரன் உ0-எ-று.

இருக்கும் பதிபோ மிருகிதிபோ மிடறு மிளைப்பும் பித்தமுமா
மருக்கன் றிறையில் மதி யூணி லாளு நிதியூ மடந்தையரும்
பெருக்கஞ் சேயுண் பகைபசி போர் பிணிதீய்ப் பாடு பேசி லரா
மரிக்கு மனைவி போர் சிறையா மக்கள் சுற்றம் நிதிமாயும்.

(இ-ள்.) ஆதித்தன் திசையில் ஊர்விட்டுப்போம் அர்த்த ஹரியுண்டாம் இடறும் இளைப்பும் பித்தமுண்டாய் திங்கள் திசையில்

மனைவியம், அர்த்தலாபம் ஸ்திரீயுமுண்டாம், செவ்வாயில் பகையும் பசியும் பூசலும் வியாதியும் அக்கினிபயமும் உண்டாம் இராகுவில் ஸ்திரீ மரணமும் யுத்தமும் சிறைபந்து மரணமும் அர்த்த ஹானியு முண்டாம், 359

நிதியிந் தனமும் பரிகளிறும் நிகழுங் குருவிற் றிசைசனிமேல்
பதியும் பொருளு மடியாரும் பாழாய்ப் பசிநோய் பகையுண்டா
மதியும் பெரிய கல்விகளு மைந்தா தானும் வரும்புதனாண்
சதியும் பிணியுஞ் சாவுமராத் தனமும் புவியுந் தரும்புகர்தான்.

(இ-ள்.) வியாழத்திசையில் அர்த்தலாபமும் வாகனமும் அரசர்கள் நோக்குமுண்டாம் சனிதிசையில் க்ஷேத்திரங்களும் அர்த்தமும் அடியாரும் கன்றுகாலியும்போய் பசியும் பகையும் தேசாந்தரப் பெருக்குமுண்டாம் புதன்றிசையில் அறிவும் கல்வியும் புத்திரருமுண்டாம் கேதுதிசையில் சாவுண்டாம் சுக்கிரதிசையில் தனமும் பூமிலாபமு முண்டாமென்றவாறு. 360

அந்தரதிசை கொள்ளும்படி.

புகளுந் திசையி லோரொருகோட் பொருந்து மாண்டை முற்றித்த
தொகையு மோராண் டதற்குள்ள நாளென் றறிந்து சோராமல்
மிகவு முடையான் முதலாக வடைவே விரித்த வாண்டுதோறும்
பகரு மந்தத் திசையூணும் பாலுந் தேனுட் பொன்மொழியாய்.

(இ-ள்.) அந்தரத்திசை கொள்ளும்படி மகாதிசை யுண்ணுங் கோட்களில் ஒரு கோளுண்ணுமாண்டின் நாளதனை யறிந்து அதனை முற்றிக்க ஓராண்டுக் குண்ணக்கடவநாளாம் இவ்வகையே ஆண்டு தோறும் நாளையேற்றி உடையவன் முதலாக வூட்டுவது இவை யூட்டும்படி ஆதித்த னுண்ணுமாண்டு கூ-உண்டாம் ஓராண்டுக்கு நாள் முளுக வருஷம் கூ-க்கு நாள் கஅ-ஆக இதனை சூரியன் வருஷம் கூ-ல் பெருக்க ாஅ-நாளாம் ஆதலால் ஆதித்தன் திசையில் ஆதித்த னூண் ாஅ-நாளென்பது மற்றுள்ளது மிவ்வகையே ஆண்டினளவே கூட்டிப் பெருக்கிக்கொள்வது எ-று. 361

சூரியதிசைக்குப் புத்தியும், அந்தரதிசையும் பலனும்.

ஆய்கதிரிற் கதிர்பீடை பொன்னூற் றூழிவா
மணிமதிமேல் வெற்றிகன மாயிழைபே ரிடர்போஞ்
சேய்தனிற் பொன் வெற்றிதேச முண்டாந்
தீயராவேற் பகையிடர்நோய் பயஞ்செம்போ னழிவாந்

தூயகுரு நோய்பீடை கலகமிடர் பாவஞ்
சுன்னரசர் பயமக்க ளழிவுபக புதனேல்
நோயிறைவ ராவிடுக்கன் கேது போக்கு
நோய்பொருள் போகும்புகரிற் றலைநோவு வெதுப்பாம்.

(இ-ள்.) ஆதித்தன்திசையி லாதித்தனுண்ணுநாள் ௱அ-க்குப் பலாபலன் பொருள் உற்றாரழிவு, சந்திரனால் ௱அ-க்கு வெற்றி, தனம், ஸ்திரீபேறு, காரியலாபம், வெற்றியுண்டாம். செவ்வாய்நாள் கஉகூ-க்கு இராஜாக்களால் அர்த்தலாபம், தேசம்பெறும், வெற்றி யுண்டாம். இராகுநாள் ஙஉச-க்குப் பகை, இடர், வியாதி, அர்த்த ஹானி, பயமுண்டாம். வியாழம் நாள் உஉஅ-க்கு வியாதி, பீடை, கலகம், இடர், விரோதமுண்டாம். சனிநாள் ஙசஉ-க்கு இராஜபயம், புத்திரநாசம், சத்துருக்களுண்டாம். புதன்நாள் ங0கூ-க்கு சரீர வாதை, வயிறுநோய், குட்டம், பிரபுக்களால்விசனமுண்டாம் கேது நாள் கஉகூ-க்கு தேசாந்திரம், க்ஷயவியாதி, அர்த்தஹானியுண்டாம் வெள்ளி நாள் ஙகூ0-க்கு தலைநோய், வெதுப்புண்டாம். எ-று.

சந்திரதிசைக்குப் புத்தியும் பலனும்.

ஆன்றமதி தனிக்மதியம் பெண்டிர் மக்க
ளாடையணி சேய்பித்தங் களவுபகை யிடர்தீ
யூன்றரவு பகைமிடிபோக் குற்றார்பொன் னழிவா
முயர்குருபொன் பாரியானை பசுக்கல்வி யுளவா
மேன்றசனி மனமிடிநோ யிடர்மனையாள் மரண
மெழின்மேதை தவந்தான மாடையணி ஞானங்
கான்றரவு வஞ்சனைகள் காசழிவு போக்குக்
கடியவெள்ளி கன்னியர்பொன் கதிர்புகழ்பே ரழகாம்.

(இ-ள்.) சந்திர திசையில் சந்திரனூண் நாள் ௱-க்குப் பலன் ஸ்திரீவெற்றி, புத்திரலாபம், ஆடையாபரணம், செவ்வாய் நாள் உக0-க்கு பித்தம், களவு, பழி, சரீரவியாதி, அக்கினிபயம், அபஜெ யம், இராகுநாள் ருச0-க்கு சத்துருக்கள் சோத்திரம், பந்துக்கள் நாசம், அர்த்தநாசம், தரித்திரம், வியாழம் நாள் சஅ0-க்கு தனம், யானை, குதிரை, கன்றுகாலி, வஸ்திராபரணம், வித்தை சனி நாள் ருஎ0-க்கு மனோதுக்கம், ஸ்திரீமரணம், வியாதி, விசனம், புதனாள் ருக0-க்குத் தவம், தானம், வஸ்திராபரணம், ஞானம், கேது நாள் உக0-க்கு வஞ்சனை, அர்த்தநாசம், யாத்திரை, வெள்ளிநாள் கூ௱க்கு ஸ்திரீகள்பேறு, இரத்தினாபரணம் ஆதித்தநாள் கஅ0-க்கு இராஜ சேர்வை, பட்டப்பேர், ஐஸ்வரியம், வியாதிநாசம், சத்துருநாசம் உண்டாம் எ-று.

செவ்வாய் திசைக்குப் புத்தியும் பலனும்.

போழலிற் சேயரசர் பயங்களவு வாதம்
பிணியரவு சிறைபகைதீப் படைபாம் பான்மரணம்
சீரியபொன் றேவர்தொழு மறைபோர் சேருந்
தீர்த்தயாத் திரைநல்லன் செற்றறிவிற் புச்சனிதா
ஹூரழிவு கிலெசெம்பொ னழிவு புந்தி
யொளியரசர் புதல்வர்பே ருளகேது நெருப்பி
லார்படையி லிடிகளவு வழிபுகர்நோ யாகு
மாதித்தன் றண்மதிய மழகுபெரி தாமே.

(இ-ள்.) செவ்வாய் திசையிற் செவ்வாயூண் நாள் ாசள-க்குப் பலன் இராஜபயம், ஸ்திரீபயம், பந்துபயம், களவு, வாதபித்தம்- இராகுநாள் ஙளஅ-க்கு சிறை, பகை, அக்கினிபயம், வியாதி, அர்த்தஹானி, ஆயுதத்தாலாதல், விஷத்தாலாதல். மரணம் வியாழநாள் ஙஙகூ-க்கு தேவபக்தி, பிராமண விசுவாசம், தீர்த்த யாத்திரை, நல்லாரனுகூலம், பிரபுவாம், சனிநாள் ஙகூகூ-க்கு ஊரழியும், பந்துநாசம், அர்த்தஹானி, புதநாள் ஙருள-க்கு புத்திரலாபம், இராஜசேவை யுண்டாம், கேதுநாள் ஙசள-க்கு படையிலாதல், இடியிலாதல், நெருப்பிலாதல், கள்ளராதல், மரணம், வெள்ளி நாள் கங0க்கு வியாதி, புன்சொல்லு, அர்த்தநாசம், சத்துருக்களால் விசனம், மிருகங்களாலழிவு, ஆதித்தநாள் கருசு-க்கு தருமம், தானமுண்டாம் சந்திரநாள் உக0-க்கு முத்துமணி, தானியம், காசு பெருக்கமுண்டாம் எ-று. 364

இராகு திசைக்குப் புத்தியும் பலனும்.

பெரியவில ரவுத்தார்பெண்டிர் புவிவிடப் போம்
பேணுகுரு சுகமின்பர் தனமது பெண்கூடுர்
கரியசனி கலகமொடு வழக்கு வாதங்
கணக்கனே தேவருல காதலர் பேராவ
மெரிமரணம் பகைவெறுப்பாம் வெள்ளி புகமுற்று
ரிடர்தீரு மகவுண்டா மிரவிபுவி குளரீர்
திருமதியிற் பெண்ணுற்றூர் சேர்வர்தன மழிவாஞ்
செங்கருவி யாற்பாடு தீய்க்களவு பிணியே.

(இ-ள்.) இராகுவின்றிசையி லிராகு வுண்ணும் நாள் கூளக்கு பந்துநர்சம், ஸ்திரீநாசம், வியாதி, பயம், பூமிவிட்டுப்போம், வியாழம்நாள் அகூச-க்கு சுகம், இன்பம், அர்த்தஸ்திரீ கூட்டு, சனிநாள் கஉசூ-கரு கலகம், வழக்கு, வாதம், புதநாள் கூகஅ-க்கு அர்த்தம்,

தெய்வரக்ஷை, புத்திரலாபம், கேதுநாள் ௩௭அ-க்கு அக்கினிபயம் மரணம், பகை, வெறுப்பு, அர்த்தஹானி, வெள்ளிநாள் கஅ0-க்கு பூமிபேறு, குளம் சத்துருயீனம். சந்திரநாள் ௫௪0-க்கு ஸ்திரீயனுகூலம், பந்துக்கள் வரவு, கைப்பொருட் சிலவழியும், செவ்வாய்நாள் ௩௭அ-க்கு கருவியாற்பாடு, அக்கினிபயம், களவுபோம் வியாதியுண்டாம் எ-று. 365

வியாழ திசைக்குப் புத்தியும் பலனும்.

களங்குருவ ரலாசாடை யணிபூமி யொழுக்கங்
காரிசுருங் களவிடுக்கண் கணிகையர்கள் புதனல்
மிடிகடைபொன் கேடுமக்க ளழுதுவாது தான்வெள்ளி
பிடிகடைபொன் கேடுமக்க ளழுதுவாது தான்வெள்ளி
வளர்பகை யாமவெற்றி பொருள் மனைவிமக்கள்
வண்புருதி மன்னவரால் வாழ்வுமதி பகைபோ
மனந்தரியா நிதிமாதர் சேய்சிரங்கு செறிநோ
யாவுபிணி சிறைமரண மகமிடம் விட்டழிவாம்

(இ-ள்.) வியாழதிசையில் வியாழமுண்ணும் நாள் இராகுக்குப் பலன் இராசிப் பிரியம் வஸ்திராபரணம் பூமியொழுக்கம் சனி நாள் கூ0கஉ-க்குக் களவு இடுக்கண் அழிவுபுதனுள் அககூ-க்கு அறிவும் பட்டமுங் கல்வியும் புத்திரருந் தேவ பூசையுங் கேதுநாள் ௩௩கூ-க்குக் களவும் வியாதியும் யாத்திரையும் விஷ பக்ஷணங்களும் வெள்ளிநாள் கூகூ0-க்கு அர்த்தமும் பூமியும் ஸ்திரீயும் கன்றுகாலியு மடியாரும் பெருக்கமு மாதித்த நாள் உஅஅ-க்கு இராக்களால் வாழ்வு சுகம் சத்துருயீனம் சந்திரனுள் சஅ0-க்கு சக்கிராயினம் ஸ்திரீகள் யேர்த்தி செவ்வாய் நாள் ௩௩கூ-க்குச் சிரங்கு சொறி, இளைப்பு பலவிரோதம் வியாதி இராகு நாள் அகூச-க்குப் பணிசிறை மரணம் பூமி விட்டுப்போம் அழிவுண்டாம், எ-று. 266

சனி திசைக்குப் புத்தியும் பலனும்.

அழிவுசனி பெண்ணரு மக்கள் காலி
யடியார்கே டருந்துயரம் புதனுறவு சுகம்பொன்
சுழலரவு பகைபெண்டிர் நோய்வாத பித்தஞ்
சுங்கன்மட வாருறவு பொன்வெற்றி சுகமாம்
எருகதிர்நோய் பொருண்மக்க ளழிவுமதி வழக்காத்
திடர்மரண மறிகொடுக்குஞ் சேய்குட்டர் துயர்நோய்
தழிதலைபாம் பிடர்சுரங்கான் முறிவுபெண் டிர்வழக்குத்
தருகுருவி லுரவடியார் தனத்தான மிடுமால்.

(இ-ள்.) சனியின்றிசையில் சனியூண் நாள் கஅங-க்குப் பலன் மெண்சீர் கெடும் கன்று காலிகெடும் அடியார்கேடு துக்கம் வியாதி அபிமானம் தேசாந்திரம் வியசனம் புதனுள் ருககூ-பகை ஸ்திரீநோவு வாத பித்தம் வெள்ளி நாள் சயச0-க்கு ஸ்திரீ சேர்க்கை வெற்றி சுகம் தோழமை தானியம் ஆதித்தனுள் கூசஉ-க்கு வியாதி மக்களழிவு ஸ்திரீ நோவு பொருளழிவு வியசனம், சந்திரனுள ருஎ0-க்கு வழக்கு விசனம் ஸ்திரீ மரணம் பறிகொடுக்கும் உற்றூர்கேடு, செவ்வாய்நாள் ருகூகூ-க்கு குட்டம் துக்கம் வியாதி தழுதலை தொழுநோய் இராகுநாள் சருகூ-க்கு இடர்க்கை காலழிவு ஸ்திரீ வழக்கு அர்த்த ஹானி, வியாழம் நாள் கூகஉ-க்கு உறவு அடியார் அர்த்த லாபம் தானம் பண்ணுதலு முண்டாம், எ-று. 367

புதன் திசைக்குப் புத்தியும் பலனும்:

இடைப்புதனின் புதன்கல்வி தனம் பூமிமிசை
யிருங்கேது நடைபொன்போ மிறைவர்பயம் புகரேல்
நடும்புகழ்பெண் பொன்பேறு கதிர்போக மிலாபம்
நாடுமதி யங்குட்டம் பகையரசால் நடுக்கங்
களங்கனற்கா மாலைதலை நோயிரை வரச்சங்
கடியரவு பெண்பொருட்டாற் பரதேச நடத்தும்
நெடுங்குருவி லரசுனுந் தூய்மையது வின்பம்
நீலன்மிடி நோய்சிலுகு வழக்காட்டு நிகழ்த்தும்.

(இ-ள்.) புதன்றிசையிற் புதனூண் நாள் அகூஎ-க்கு பலன் கல்வி அர்த்தம் பூமிதேவபூசை வெற்றி யென்க, கேதுநாள் ருருஎ-க்கு பலன் அர்த்தஹானி இராசபயம் சிலேசம் விபாதி யென்க, வெள்ளினுள் கஉய-க்கு புகழ் ஸ்திரீபேறு அர்த்தலாபம் சுகமுண் டென்க, சந்திரனுள் ருகய-க்கு க்ஷயவியாதி குட்டம் பகை இராஜபயம் துக்கமென்க, இராகுநாள் கூககஅ-க்கு ஸ்திரீ பொருட்டாற் பரதேசம் அர்த்த அழிவு, உற்றூர் கேடு என்க, வியாழநாள் அகச-க்கு இராசராசன் சத்தன் இன்பம் அர்த்தலாப மென்க, சனிநாள் கூசுய-க்கு மிடிகிறை சிலைபாதிவழக்காடல், எ-று. 368

கேது திசைக்குப் புத்தியும் பலனும்.

நிகழ்கேது வினிற்கேது பெண்டிர்மக்க ளழிவாம்
நெடும்புகரில் வழக்காட்டு குடிகெடும்பெண் பெருமாந்
திகழ்கதிரில் நோய்வழக்குப் புண்தீப்பா ளெதாந்
திங்கள்நிதி போலுஞ்சிலு காம்வெகுமா னஞ்செய்யி

விகழ்வரெதி ரில்லாதார் பொன்னழிவாம் பம்பா
  விடர்விடந்தீ வெட்டறியார் செற்றிசது வியாழம்
புகள்செறுவே தியர்செற்றி சனிவிளைவு வழக்குப்
  பொருளிழவு புதன்மைந்தர் பொன்றுவர்மண் போகாமல்.

(இ-ள்.) கேதுவின் றிசையில் கேதுவினுள் ௬ள-க்குப் பலன் பெண்டிரும் மக்களும் பிரிந்து போவர் சத்துருக்க ளுண்டா மென்க வெள்ளிநாள் ௬உ௰-க்கு வழக்காட்டு குடிகெடும் அறிவுண்டாமென்க ஆதித்தநாள் கஉகூ-க்கு வெதுப்பு வழக்காட்டு புண் அக்கினி பயம் பலவிசோதம் துக்கம் என்க, சந்திரநாள் உக௰-க்கு தனம்பெற்றிழக்கும் பிள்ளை பெற்றிறக்கும், சுகமா யிருக்கையில் சிலுகா மென்க, செவ்வாய் நாள் ௬சள-க்கு தாமல்லாதார் கொட்டிக் கட்டுவார், சரீர வியாதி பொருளழிவு மனமிடி யென்க, இராகுநாள் ௩ளஅ-க்கு இடறு விஷம் அக்கினிபயம் வெட்டு உபோயர்கள் செற்றி வெதுப்பு மரணமுண்டா மென்க, வியாழநாள் ௩௩கூ-க்கு புகழ் அர்த்தலாபம் பிராமணர் செற்றி இராஜாக்கள் நோக்குண்டா மென்க, சனிநாள் ௩கூ௰-க்கு விளைவு வழக்கு அர்த்தஹானி வாத பித்த பரதேசம் போகை யென்க, புதனுள் ௩கூள-க்கு மக்களழிவு மரண முண்டாம், பூமிவிடப் போம் பந்துக்கள் பயம் வெதுப்பு விசனமுண்டாம்.

சுக்கிரன் திசைக்குப் புத்தியும் பலனும்.

மாண்புகரிற் புகழ்ஞான மாதாமக்கள் நிதிமெண்
  வவர்கதிகண் வயிறுநோய் மனமிருவான் சிறையாங்
கோன்புளம திகைமிடிநோய் கொடுமை குற்றங்
  குசன்போகங் கோதையமண் பொருள்பெறுநோய் பாம்பில்
